Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :228 ஆனி 30ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 14 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் உள்ளே...

**கொரோனா தொற்று:**
**நேற்று: 29**
**இதுவரை: 2,646**

# ராஜபக்சக்கள் முட்டாள்கள்

## கொரோனாவிலும் தேர்தல் அவா என்று சீறுகின்றார் சந்திரிகா



கொழும்பு, ஜூலை 14
இலங்கை கொரோனா வைரஸின் இரண்டாவது அலையில் சிக்குண்டுள்ளது. இந்தப் பாதிப்புக்கு மத்தியிலும் அறிவிக்கப்பட்ட திகதியில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதியும், பிரதமரும் மறைமுகமாக அழுத்தம் கொடுத்து வருகின்றார்கள். இதுதான் ராஜபக்சக்களின் முட்டாள்தனம். மக்களின் சாவின் விளிம்பில் ஏறிநின்று அரசியல் நடத்துவதுதான் அவர்களின் வாடிக்கையான வேலை.
இவ்வாறு கடும் சீற்றத்துடன் தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க. 27

## ஒற்றையாட்சிக்குள் பௌத்தமே முதலிடம்

### மஹிந்த திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 14
ஒற்றையாட்சிக்குள் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கி ஏனைய மதங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டு அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடனும், 27

## தமிழர் நலனை இந்தியா இனிமேல் யோசிக்காது!

### இப்படிக் கூறுகின்றது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு, ஜூலை 14
சமஷ்டி தீர்வு திட்டத்தை முழுமையாக கைவிடும்வரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பை அரசு பெறவேகூடாது. அத்துடன், தீர்வு விடயத்தில் இந்தியாவின் தலையீடும் இனி இருக்காது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர 27

## அமைச்சுப் பதவி என்ற பேச்சுக்கே இடமில்லை

### கட்சியின் கொள்கை அதுவல்ல என்று சம்பந்தன் இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14
புதிய அரசில் அமைச்சுப் பதவி பெற்றும் எண்ணம் எதுவுமே எம்மிடம் இல்லை. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு அப்படியான கொள்கையே இல்லை. தேர்தல் காலத்தில் அமைச்சுப் பதவி பற்றிப் பேச வேண்டிய அவசியமும் இல்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திட்டவட்டமாக இடித்து 27

## 492 பேருக்கு தொற்று

கொழும்பு, ஜூலை 14
வெலிக்கடை சிறைச்சாலையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட கைதியுடன் தொடர்புடைய 492 பேர் இதுவரையில் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இவ்வாறு கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் 27

## குடத்தனையில் 5 பேர் சுயதனிமையில்

கரணவாய், ஜூலை 14
வடமராட்சி குடத்தனையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.
பருத்தித்துறை பகுதியை 26

## பொதுத் தேர்தலை ஒத்திவைக்க முடியா

### அரசு அழுங்குப்பிடி

கொழும்பு, ஜூலை 14
எந்தக் காரணம் கொண்டும் தேர்தல் ஒத்திவைக்கப்படமாட்டாது என்று ராஜபக்ச அரசின் ஆலோசகரும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் 27

## ஊரடங்கு தொடர்பாக இன்னும் முடிவில்லை

கொழும்பு, ஜூலை 14
மீண்டும் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச் 26

## சு.க. அரசியல்வாதிக்கு எதிராக யாழில் அதிகளவு முறைப்பாடு!

யாழ்ப்பாணம், ஜூலை 14
சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் இ.அங்கஜனுக்கு எதிராக கடந்த 4 நாள்களில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக தேர்தல் முறைப்பாட்டு பிரிவில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு 27

### யாழ்.பல்கலை கிளிநொச்சி வளாக

## மாணவியின் சகோதரனுக்கு கொரோனா தொற்று உறுதி!

### 300 மாணவர்கள் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம், ஜூலை 14
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக தொழில்நுட்ப பீடத்தில் மாணவி ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதால், அந்த வளாகத்திலுள்ள சுமார் 300 மாணவர்கள் சுயதனிமைப்படுத்தலில் உள்ளனர். அந்த வளாகத்தில் கல்வி கற்கும் ஹம்பகாவைச் சேர்ந்த மாணவியின் சகோதரனான இராணுவச் சிப்பாய்க்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டதால் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
கொரோனாத் தொற்றை 26

## வடக்கு நிலைமை கட்டுக்குள்; ஆனால் அலட்சியம் கூடாது!

யாழ்ப்பாணம், ஜூலை 14
வடமாகாணத்தில் கொரோனா பரம்பல் தற்போது பூரண கட்டுப்பாட்டில் உள்ளது என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ. கேதீஸ்வரன், இங்கு இந்நோய் பரவாது இருக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார்.
இது தொடர்பில் அவர் 27

## 'சாப்பிடுகிறோம்' என்ற டக்ளஸ் வந்தவழி திரும்பிய அதிகாரிகள்!

யாழ்ப்பாணம், ஜூலை 14
அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச அதிகாரிகளை அழைத்து பரப்புரைக் கூட்டம் நடத்துகின்றார் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற அதிகாரிகள், 'நாங்கள் சாப்பிடவே ஹோட்டலுக்கு வந்தோம்' என்று அ 26

# கொரோனா பரவலை அடக்க பி.சி.ஆர். சோதனையே வழி!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

**கொழும்பு, ஜூலை 14**

**நாட்டில் பி.சி.ஆர். சோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் சுகாதாரத் துறையினரிடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர். தனிமைப்படுத்தல் நிலையமாக தற்போது பயன்படுத் தப்பட்டு வரும் கந்தகாடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையானது தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றமையை மேற்கோள்காட்டியே இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.**

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் நிபுணர்கள் நாளாந்தம் 2 ஆயிரத்து 500 பி.சி.ஆர். சோதனைகளை பரிந்துரைத்தபோதிலும், கடந்த இரண்டு மாதங்களாக நாளொன்றுக்கு 500 தொடக்கம் ஆயிரத்து 600 பி.சி.ஆர். சோதனைகள் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் மருத்துவர் ஷேனால் பெர்னாண்டோ சுட்டிக்காட்டினார். அத்துடன் வைரஸ் பரவுவதை முறையாகக் கட்டுப்படுத்துவதற்காக மேலும் பி.சி.ஆர். சோதனைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சகத்தை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். ஒரு நாளைக்கு குறைந்தது 5 ஆயிரம் பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் வைரஸின் இரண்டாவது அலையை தவிர்க்க முடியாது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (ஒ.5)

## விபத்தில் ஒருவர் சாவு

வவுனியா, ஜூலை 14

வவுனியா கனகராயன்குளம் குறிசுட்டகுளம் சந்தியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவர் ஏ-9 வீதி குறிசுட்டகுளம் சந்தியில் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் விபத்து இடம் பெற்றது.

விபத்தில் புதூர் சந்தியைச் சேர்ந்த ஞானசேகரம் (வயது-53) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்துத் தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஒ.5,110)



## நள்ளிரவில் வீடு புகுந்து புதையல் தேடிய பொலிஸ்

### பேசாலையில் சம்பவம்

மன்னார், ஜூலை 14

மன்னார் பேசாலையில் உள்ள வீடொன்றுக்குள் புதையல் இருக்கின்றது என்று கூறி நேற்றுமுன்தினம் நள்ளிரவு புகுந்த பொலிஸார், தரையை தோண்டிச் சோதனையிட்டனர். அதையடுத்து அங்கு கூடிய பொதுமக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து, நிலம் தோண்டுவதை கைவிட்ட பொலிஸார், வீட்டின் உரிமையாளரைக் கைது செய்தனர்.

பேசாலை ஐந்தாம் வட்டாரத்திலுள்ள ஒரு வீட்டிலேயே பொலிஸார் புதையல் தேடியுள்ளனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்கு ஊரவர்கள் ஒன்றுசேர்ந்து கடும் எதிர்ப்பில் ஈடுபட்டனர். நீதிமன்ற உத்தரவைக் காண்பிக்குமாறும் கோரினர். அதனையடுத்து பொலிஸார் நிலம் தோண்டுவதை கைவிட்டு வீட்டு உரிமையாளரை கைது செய்து கொண்டுசென்றனர்.

பொலிஸார் அவரை மன்னார் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். இன்று செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அந்த வீடு தற்போது பொலிஸ் பாதுகாப்பில் உள்ளதாகவும் வீட்டை சோதனையிட நடவடிக்கை இடம்பெறுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-60)



## சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை

மந்திகை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட முதியவர், சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

வினாசி தேவராஜா (வயது-62) என்ற முதியவரே உயிரிழந்துள்ளார். இவரது தேசிய அடையாள அட்டையில் வரணி என்ற முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இவரைப் பற்றிய விவரம் தெரிந்தவர்கள் அடையாளம் காண உதவுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 28ஆம் திகதி மந்திகை ஆதார வைத்தியசாலையில் இவர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். பின்னர் கடந்த 3ஆம் திகதி இவர் சிகிச்சைக்காக ஊறணி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் மேற்கொண்டார். உயிரிழந்தவரின் உடல் தற்போது மந்திகை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. அவருடன் உறவினர்கள் எவரும் மருத்துவமனை வராததால் அவரை அடையாளம் காண உதவுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவரின் கையில் பச்சை குத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-26)

## முன்னாள் தலைவர் அமிர்தலிங்கத்துக்கு சுழிபுரத்தில் சரவணபவன் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 14

மறைந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 31ஆவது நினைவுதினமான நேற்று சுழிபுரத்திலுள்ள அவரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் நாடாளுமன்ற வேட்பாளருமான ஈ. சரவணபவன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

வட்டுக்கோட்டை தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் அதன் செயலாளர் கி.சுதாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் காரைநகர் பிரதேச சபையின் உப தவிசாளர் க.பாலச்சந்திரன், வலி.மேற்கு ,வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் உட்படபலர் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரிக துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் தமிழ் அரசுக்கட்சியின் சிரேஸ்ட உறுப்பினருமான திருமதி நாச்சியார் செல்வநாயகம் உரையாற்றுகையில்,

மறைந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் இலங்கையில் புகழ்பூத்த முதலாவது எதிர்க் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாக இருந்து மக்களின் துயர்துடைத்த மனிதம். அவர் இன்று இல்லை எனினும், அவருக்கு வலி. மேற்கு பிரதேச சபை உயிர்ப்பூட்டும்படி சிலை அமைத்துள்ளது. இதனால் அவரது சிறப்புக்களை காலத்துக்கு காலம் அவரோடு தொடர்புடைய சகலரும் நினைவு கூருகின்றோம் - என்றார். (த-50)

## வடக்கில் தபால் மூல வாக்களிப்பு சுமுகம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பமானது. வடக்கில் தபால் மூல வாக்களிப்புத் தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் பதிவு செய்யப்படவில்லை. அரச அதிகாரிகள் ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்டனர். அதேவேளை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு நேற்று நேரடியாகப் பயணம் மேற்கொண்டு, மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஆகியோருடன் கலந்துரையாடினார். (ஒ.5)



## அட்டைகள் இன்று முதல் விநியோகம்

கொழும்பு, ஜூலை 14

பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை முன்னெடுக்கப்படும் என்று பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வாக்காளர்களின் வீடுகளுக்கு வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படுகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்காக தபால் திணைக்களத்தின் 75 ஆயிரத்துக்கும் அதிகமான உத்தியோகத்தர்கள், கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 29ஆம் திகதியின் பின்னர் தபால் ஊழியர்களினூடாக வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படமாட்டாது என பிரதி தபால் மா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, உரிய காலப்பகுதியில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள், தாம் வசிக்கும் பகுதியிலுள்ள தபால் நிலையத்துக்குச் சென்று ஆள் அடையாளத்தை உறுதிசெய்து அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியுமென பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகத்துக்கான இரண்டு விசேட தினங்களாக எதிர்வரும் 19 மற்றும் 26 ஆம் திகதிகள், தபால் திணைக்களத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த இரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நாள்களில் வாக்காளர்கள் தத்தமது வீடுகளில் இருந்து தபால் திணைக்களத்தால் விநியோகிக்கப்படும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை கையொப்பத்துடன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஓ.5)

# யாழில் கொரோனாவை தடுப்பது மக்களின் கைகளில்தான் உள்ளது

### சுகாதார துறைக்கு ஒத்துழையுங்கள் என்றும் கோருகின்றார் யாழ்.மாவட்டச் செயலர் மகேசன்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணத்தில் இரண்டாவது கொரோனா அலையை வெற்றிகரமாக முறியடிப்பதற்கு அனைத்து பொதுமக்களும் சுகாதார திணைக்களத்தினருக்கு ஒத்துழைக்கவேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட செயலர் க. மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கொரோனா அபாய நிலை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண குடாநாட்டில் ஆரம்பத்தில் 16 பேர் தொற்றுக்குள்ளாகியிருந்த நிலையில் தற்போது 14 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கந்தகாடு மறுவாழ்வு நிலையத்துக்குச் சென்று வந்தவர்கள் என்ற அடிப்படையிலும் ஒரு குடும்பம் வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்று வந்தனர் என்ற அடிப்படையிலும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மொத்தமாக நான்கு குடும்பங்களை சேர்ந்த 14 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்றை தடுக்கும் செயற்பாடு சுகாதார திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களங்கள் மூலம் செயற்படுத்தப்படுகிறது.

பொதுமக்களுடைய செயற்பாட்டின் மூலமே யாழ்ப்பாணத்தில் கொரோனாவை கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றோம். தற்பொழுது இது சமூகத் தொற்றாக உருவாக கூடிய அபாயம் காணப்படுகின்றமை உணரப்படுகின்றது.

இந்த கட்டத்தில் இரண்டாவது அலையாக, அதாவது முன்னரோடு ஒப்பிடும்போது நாளாந்தம் அறிக்கையிடப்படுகின்ற புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது நோயாளர்களின் எண்ணிக்கை சற்று கூடுதலாகவே காணப்படுகின்றது.

சுகாதாரப் பிரிவினரின் சுகாதாரநடைமுறைகளை பின்பற்றி அநாவசியமாக போக்குவரத்தில் ஈடுபடாது மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்பதே எமது கோரிக்கை.

பாடசாலைகள் நேற்றிலிருந்து ஒரு கிழமைக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அலுவலகங்கள் யாவும் சீராக இயங்குகின்றன. எனினும், தேவையுடையவர்கள் மட்டும் அலுவலகங்களுக்கு வருகை தந்து தங்களுடைய தேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

ஏனைய பொது தொடர்பு மற்றும் செயற்பாடுகளிலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொதுமக்கள் தமது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்யுமாறு கோரிக்கை விடுக்கின்றேன்.

இன்னுமொரு அபாயம் யாழ்ப்பாண மாவட்டத்திலே காணப்படுகின்றது. தற்போது இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக யாழ்ப்பாண குடாநாட்டுக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது.

நேற்றுமுன்தினம்கூட நான்கு பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் மீது பொலிஸார் மற்றும் கடற்படையினர் சட்டநடவடிக்கை மேற்கொள்வர்.

இவ்வாறு சட்டவிரோதமாக வருகை தருபவர்கள் ஒளிந்திருக்கும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

இது அனைத்து பொதுமக்களிடம் விடுகின்ற கோரிக்கையாகும். யாழ்ப்பாணம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமாக இருந்தால் இவ்வாறு சட்டவிரோதமாக வருபவர்களைத் தடுக்க வேண்டும். அதாவது உங்களுடைய உறவினர்களோ அல்லது உங்களுக்கு தெரிந்தவர்களோ இவ்வாறான விடயங்களை அறிந்திருந்தால் அது தொடர்பில் அருகில் உள்ள கிராம அலுவலர் அல்லது போலிஸார் அல்லது அதற்குரிய அதிகாரிகளுக்கு உடனடியாகத் தெரியப்படுத்துங்கள்.

குடாநாட்டை கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பது பொது மக்களுடைய கைகளில் தான் இருக்கின்றது. எவ்வளவுக்கு சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அவ்வளவுக்கு யாழ்ப்பாணத்தில் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும். (த-20)




சபையில் சரவணபவன்

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பிரதேசம். அங்கேதான் உங்களுக்குப் பாதுகாப்பு என்று கப்பலிலும் பஸ்களிலும் ஏற்றிக் கொண்டு வந்து விட்டவர்கள் சிங்களத் தலைவர்களும் சிங்கள அரசும்தான். வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாயகம் என்று ஏற்றுக்கொண்டவர்கள் சிங்கள பௌத்த தலைவர்கள் தான் என்று சுட்டிக்காட்டினார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவால் கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களப் போராட்டம், ஸ்ரீ போராட்டம், 1978ஆம் ஆண்டு தேர்தலின் பின் ஏற்பட்ட கலவரம், 1983ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனவன்செயல் போன்ற அராஜக சம்பவங்களின் போது தென்பகுதியிலும் மலையகத்திலும் பல ஆயிரம் தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். எல்லாவற்றையும் இழந்த நிலையில் நின்ற வர்களைக் கப்பலில் ஏற்றி காங்கேசன்துறைமுகத்தில் கொண்டு வந்து இறக்கினார்கள்.

முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு எனப் பல பிரதேசங்களிலும் குடியமர்த்தப்பட்டு வடக்கு கிழக்கே தாயகம் என வாழ்கின்றனர்.

போர்க்காலத்திலும் கூட கொழும்பு லொட்ஜ்களில் (விடுதிகளில்) தங்கியிருந்த வடபகுதி மக்களை ஒரே இரவில் பஸ்களில் ஏற்றி வவுனியாவில் கொண்டு வந்து இறக்கியவர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபயதான்.

கொழும்பில் வடபகுதி தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதாலேயே இவர்களை தலைநகரில் இருந்து அப்புறப்படுத்த வேண்டியேற்பட்டது என்று சாக்கு கூறினார் கோத்தாபய. அப்படியானால் தமிழர்கள் பாதுகாப்பாக இருக்கக்கூடிய ஒரே இடம் வடக்கும் கிழக்கும்தான் என்பதை இவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.

– மே 2018

1 2 3 4 5 6 7 8 9 10

இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# ‘சூம்’ கற்கையைத் தொடருங்கள் வடக்கு மாணவருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 14

**கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நாடு முழுவதும் முடக்கப்பட்டிருந்த போது, பாடசாலை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்காக அறிமுகம் செய்யப்பட்டிருந்த சூம் கற்கை முறையை தொடர்ந்தும் கையாளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.**

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கடந்த மூன்று மாதங்கள் நாடு முழுவதும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு, பாடசாலைகளும் மூடப்பட்டன. எனினும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படையக் கூடாது என்ற நோக்கத்தைக் கருத்தில் கொண்டு மாணவர்கள் வீட்டில் இருந்தவாறே கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள சூம் கற்கை அறிமுகப்படுத்தப்பட்டது. ஊடரங்கு நீக்கப்பட்டு, பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது அது நிறுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் தற்போது கொரோனா இரண்டாம் அலையால், மீண்டும் பாடசாலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே சூம் கற்றல் நடவடிக்கையை தொடருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இளங்கோவன் இந்த அறிவித்தலை வழங்கியுள்ளார்.

மாணவர்களின் இவ்வாறான தொடர்ச்சியான கல்வி நடவடிக்கைகளுக்கு ஆசிரியர்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இதேவேளை கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நேற்று முதல் அரச பாடசாலைகள் மூடப்ப ட்டுள்ள நிலையில், வடக்கு மாகாணத்தில், அரச பாடசாலைகள் மட்டுமல்லாது தனி யார் பாடசாலைகள், தனியார்கல்விநிலையங்கள், மேலதிக வகுப்புக்கள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். (ப-ந)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு ரூ. 20,000 தண்டம்

சாவகச்சேரி. ஜூலை 14

கஞ்சா வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நாவற்குழி வாசிக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் நேற்றுமுன்தினம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடினார் என்று குற்றஞ் சாட்டி ஒருவரை சோதனைக்குட்படுத்தினர். இத்போதே அவரிடமிருந்து. 720 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் நேற்றையதினம் சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். நீதிமன்ற விசாரணைகளின்போது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ப-9)

## திருட்டுக் குற்றச்சாட்டு சந்தேக நபருக்கு மறியல்

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் திருட்டுக்களில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் சாவகச்சேரிநீதிவான் மன்றால், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பகுதியில் வீடுகளுக்குள் புகுந்து. பணம் மற்றும். மடிக்கணினி போன்றவற்றைத் திருடினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவர் கண்கணிப்பு கமராக்களின் உதவியுடன் இனங்காணப்பட்டார். கடந்த சனிக்கிழமை அவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்றால் உத்தரவிடப்பட்டது. (ப-9)

## இலங்கை வங்கி கிளை இடமாற்றம்

வடமராட்சி, ஜூலை 14

இலங்கை வங்கியின் மந்திகைக் கிளை நாளை புதன்கிழமை முதல் மந்திகை பொதுச்சந்தைக்கு அருகில் பருத்தித்துறை கொடிகாமம் சாவகச்சேரி வீதிச்சந்திக்கு எதிரே உள்ள கட்டடத்துக்கு இடமாற்றப்படும்.

இலங்கை வங்கியின் விற்பனை மற்றும் ஊடக வழி அபிவிருத்தி பிரதிப் பொதுமுகாமையாளர் சி.அமரசிங்க பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனைப் பதில் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் எஸ். கமலநாதன் ஆகியோர் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்வர்.

2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளையால் மந்திகையில் ஆரம்பிக்கப்பட்ட வாடிக்கையாளர் சேவை நிலையம், ஆறு ஆண்டுகளின் பின்னர் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி முதல் இலங்கை வங்கியின் ஒரு கிளையாகத்தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

தரம் உயர்த்தப்பட்ட கிளையில் தானியங்கி பணவைப்பு இயந்திர வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வங்கிக்கிளை இதுவரை காலமும் மருத்துவமனை வீதி சாவகச்சேரி வீதிச்சந்தியில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (க-173)

## மது போதையில் இடையூறு இருவருக்கு தண்டம்

சாவகச்சேரி, ஜூலை. 14.

சாவகச்சேரி நகரப் பகுதிப் பொது இடங்களில் மதுபோதையில் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அநாகரீகமாக நடந்துகொண்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்க ப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம. மற்றும் சாவகச்சேரி கெருடாவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவருக்கே சவகச்சேரி நீதிமன்றம் இவ்வாறு தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொள்வதாக பொதுமக்கள் கொடுத்த முறைப்பாட்டினையடுத்து பொலிஸார் இருவரையும் கைது செய்து நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர்,. வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது. இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் இருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது (ப-9)

## ஹெரோய்னுடன் குடும்பஸ்தர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 14

ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர்அதே பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபர் எனத் தெரிவிக்கப்பட்டது .

விசேட ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த யாழ்ப்பாணப் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார். ஒரு கிராம் கஞ்சா அவரது உடைமையில் இருந்தது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. கைது செய்யப்பட்ட நபரை நீதிவான் மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)

## மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள்
### விரும்புகிறார் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், ஜூலை 14

புலம்பெயர் நாடுகளில் சுமார் 15 லட்சத்துக்கும் அதிகமான ஈழத் தமிழர்கள் வாழுகின்றனர். அதில் ஒருசில நூறு பேர் வடக்கில் முதலீடுகளைச் செய்வார்களாக இருந்தால் எமது பிரதேசங்களில் தொழிற்சாலைகளை உருவாக்கி வேலைவாய்ப்பு இல்லாத அனைவருக்கும் வேலைவாய்ப்பை வழங்கமுடியும். அதற்கான அதிகாரங்கள் எமக்குத் தேவை. அவற்றுக்கான அதிகாரங்கள் மாகாண சபைக்குத் தேவை. இவை கிடைத்தால் அரசிடம் கையேந்தும் நிலை எமக்கு இருக்காது இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஸ் பிரேமச்சந்திரன்.

மட்டுவிலில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நான்கரை வருடங்களாக மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசிய அனைத்தும் பொய்யான விடயங்களா? புதிய அரசமைப்பு வருகின்றது, சமஷ்டி வருகின்றது, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவிடம் இலங்கை அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்றெல்லாம் தெரிவித்தது மக்களை ஏமாற்றும் விடயங்களா?.

30 வருட யுத்தம், போராட்டங்கள் அனைத்துமே இந்த மண்ணில் தமிழர்கள் தமிழர்களாக வாழ வேண்டும், உரிமையுடன் வாழவேண்டும், தமது சொந்தக்காலில் நிற்கவேண்டும், யாருக்கும் அடிபணியாமல் வாழவேண்டும் என்பதற்காகத்தான். எமது உரிமைகளைப் பெற்றுக் கொண்டால் மாத்திரமே தமிழர்கள் தமிழர்களாக வாழமுடியும் என்ற காரணத்தால் தான் வாக்களித்து வந்தோம். ஆனால் இன்று சம்பந்தன் கூறுகின்றார் நாம் ஐக்கியப்பட வேண்டும் என்று ஐக்கியப் படுவதற்கும் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்கும் எந்தவிதமான தேவை உள்ளது என்பது தெரியவில்லை - என்றார். (ம)



தாதியர்களின் விடுமுறைகள் மற்றும் மேலதிக கொடுப்பனவுகளை குறைப்பதற்கு மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்குத் எதிர்ப்புத் தெரிவித்து கண்டி போதனா மருத்துவமனையின் தாதியர்கள் நேற்று முற்பகல் போராட்டத்தில் ஈடுபட்டனர். (க)

# அரசின் சலுகையை கட்சி பரப்புரையாக்கிய மஹிந்த

**கொழும்பு, ஜூலை 14**

**கொரோனா வைரஸ் தொற்றுக் காலங்களில் நாடு முடக்கப்பட்டபோது, அரசாங்கத்தால் மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை, கட்சிப் பரப்புரைகளாக மாற்றியுள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸவின் சுபீட்சத்தின் நோக்கு, மஹிந்த சிந்தனை மற்றும் மக்களின் தேவைக்காக அரசாங்கம் செயற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.**

மாத்தறை மாவட்டத்தின் வெலிப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த சில மாதங்களில் மின்சாரப் பட்டியல் அதிகரித்தமை குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மின்சாரப் பட்டியல் கட்டணம் அதிகரித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்டமையினால் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டதாக தெரிவிக்கும் கருத்துக்கு கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களின் சிரமங்களைப் புரிந்து கொள்ளும் திறன் எங்கள் அரசாங்கத்திடம் உள்ளமையினால் மின்சாரப் பட்டியலுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றார்.

அதேவேளை தற்போதைய காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியில் காணப்படுகின்ற உள்ளகப் பிரச்சினை தொடர்பில் கருத்து வெளியிட்ட பிரதமர், அந்த பிரச்சினையின் இறுதி முடிவாக இம்முறை எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஆர்.சம்பந்தனுக்கு கிடைக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். அரசியல் கட்சி ஒன்று நாட்டின் ஆட்சியை கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டுமே தவிர, கட்சியின் ஆட்சியை அல்ல எனவும் அவர் குறிப்பிட்டார். (ப)

## பணக் கட்டுக்கு பதிலாக காகிதக்கட்டு

*தபாலகத்தில் அதிர்ச்சி*

கொழும்பு, ஜூலை 14

கலஹா நில்லம்பை தபால் நிலையத்திலிருந்து கொண்டு வரப்பட்ட பொதியில் பணத்துக்குப் பதிலாக காகிதக் கட்டுக்கள் இருந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் நில்லம்பை தபால் நிலைய தபால் அதிபர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

ஓய்வூதியக் காரர்களுக்கு வழங்குவதற்காக வழமை போல் கலஹா நில்லம் தபால் நிலையத்திலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை காலை வாகனத்தில் கொண்டு வரப்பட்ட பணப் பொதியை நில்லம்பை தபால் நிலைய அதிபர் ஹேபாலிகா மங்களி சேனாரத்ன கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டுள்ளார்.

பின்னர் அங்கு வரிசையில் காத்து கொண்டிருந்த ஓய்வூதியம் பெற வந்தோருக்கு கொடுப்பதற்காக பணப்பொதியைப் பிரித்த போது 40,000 ரூபா பணமும் மீதி ஒரு இலட்சம் ரூபாவுக்குப் பதிலாக வெறும் காகிதக்கட்டுக்களும் இருந்தமையைக் கண்டு சம்பவம் குறித்து கலஹா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கமைய கலஹா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் மாகெதரவின் ஆலோசனைக்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)

## *நாட்டில்* கொவிட்-19 நோயாளரை இனங்காண அதிக வாய்ப்பு

*என்கிறார் அனில் ஜாசிங்க*

கொழும்பு, ஜூலை 14

கொரோனா நோயாளர்களை நாட்டில் இனங்காண்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. மக்களின் வாழ்வாதாரத்தை வழமைக்கு கொண்டு வரும் நோக்கிலேயே நாடு முழுமையாக திறக்கப்பட்டது.

ஆனால் அனைவரும் இதனை உதாசீனப்படுத்தும் நிலைமையே காணப்படுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார். கொரோனா பரவல் தீவிரமடைந் துள்ள நிலைவரம் குறித்து தெளிவுபடுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கந்தக்காடு புனர்வாழ்வளிக்கும் நிலையத்தில் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை ஓரளவு அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படா. எனினும் இராஜாங்கனையில் இனங்காணப்பட்ட நபர் வெளியிடங்களுக்குச் சென்றுள்ளார். அவரது மனைவி மற்றும் மகளும் வெளியிடங்களுக்குச் சென்றுள்ளமையே தற்போது பிரச்சினையாகும். இவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தற்போதுள்ள நிலைமையின் அடிப்படையில் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கான பலம் சுகாதாரத்துறை மற்றும் பாதுகாப்புத் துறையினரிடம் காணப்படுகின்றது. இவர்களால் அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன- என்றார். (ரி2)

## வாகன விபத்தில் ஒரே குடும்பத்தவர்கள் மூவர் பலி

வெயாங்கொடை, ஜூலை 14

வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் மற்றும் அவரது இரண்டு பிள்ளைகளும் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர். இச் சம்பவம் வெயாங்கொடை மல்லேஹெவ வீதியில் கொட்டாவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

முச்சக்கரவண்டியொன்று விபத்துக்குள்ளாகியே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி2)



## இறைச்சிக் குவியலாக மனித உடல்கள்

*நவாலி தாக்குதல் தொடர்பில் இமானுவேல் அடிகள் பகிர்வு*

யாழ்.போதனா வைத்தியசாலையில் இறைச்சி குவிக்கப்பட்டிருந்தது போல மனித உடல்கள் குவிக்கப்பட்டிருந்த காட்சியை என்றுமே என்னால் மறக்கமுடியாது. அந்த நாளை ஓர் உயர் அழுக்கத்தை கொண்ட நாளாக நான் உணர்ந்தேன். அன்றைய தினம் லண்டன் பி.பி.சி . மற்றும் புலிகளின் குரல் செய்திகளை மறுகணம் கேட்டதும் எனது மனக்கண் முன்னால் இன்றும் உள்ளது என்று பெரியகுரு மட அதிபரும் ஓய்வு பெற்ற குருவுமான எஸ்.ஜே. இம்மனுவேல் அடிகளார் தெரிவித்துள்ளார்.

நவாலி சென்.பீற்றர்ஸ் தாக்குலின் 25ஆம்ஆண்டு நினைவு தின திருப்பலி யாழ் மறைமாவட்ட குருமுதல்வர்பி.ஜெ.ஜெபரட்ணம் தலைமையில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே குருமட அதிபர் எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இது தொடர்பில் சிறப்பு நூல் ஒன்று எழுத்தாளர் நாவண்ணனால் முதலாம் நினைவாண்டு தொகுப்பாக வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து நாகர்கோவிலில் 28 பேர் படுகொலை, சென்ஜேம்ஸில் 38 பேர் படுகொலை என நவாலியிலும் மிகப்பெரிய மனித படுகொலை இடம்பெற்றது. இப் படுகொலை தொடர்பாக அன்றைய அரசு பல்வேறு மூடி மறைப்புக்களை மேற்கொண்டதுடன் அன்றைய வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த லக்ஸ்மன் கதிர்காமரும் இச் சம்பவம் நவாலியில் இடம்பெறவில்லையென வெளிநாடுகளுக்கு கோடிட்டு காட்டியமை எமது இனத்திற்கு வெறுப்பாகவும் மிகக் கவலையாகவும் இருந்தன.

ஆனால் தாக்குதல் இடம்பெற்றபோது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க இன்று குறித்த தாக்குதல் தற்செயலாக இடம்பெற்ற விடயம் என்றும், மக்களிடம் அன்றைய நிகழ்வுக்காக மன்னிப்புக் கோருகின்றேன் எனவும் கூறியுள்ளமை எமக்கு ஆறுதல் அளிக்கிறது.

எனினும் இழப்பின் உயிர்ப் பெறுமதிக்கு இன்றுவரை இழப்பேதும் வழங்காத நிலையும் அழிவடைந்த சொத்துகளுக்கு நஸ்டஈடு வழங்காததும் ஒருவிதமான கவலைக்கிடமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. அது மறக்கமுடியாதது. எனினும் எதிர்காலத்தில் மாற்றம் வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ரி3-50)


பாராளுமன்ற தேர்தல் - 2020



X 10

இதுவரை ஏமாற்றியோரை
ஒதுக்கி வைப்போம்
இனி ஒரு புதுச் சரித்திரம்
படைப்போம்



வேலாயுதம் கணேஸ்வரன்
(யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர்)
ஐக்கிய மக்கள் சக்தி (SJB)

# போதைப் பொருளுடன் இளைஞன் கைது

கொழும்பு, ஜூலை 14
144 கிராம் 832 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் வென்னப்புவ நகரில் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.
23 வயதான வென் னப்புவ, கடுநெரிய பகு தியில் வசிக்கும் இளை ஞன் ஒருவரே இவ் வாறு கைது செய்யப்பட் டுள்ளார்.
சந்தேகநபர் மாரவில நீதிவான் நீதிமன்றத் தில் நேற்றுமுன்தினம் முன்னிலைப்படுத்தப் பட்டார். சம்பவம் தொடர் பில்வென்னப்புவ பொலி ஸார் மேலதிக விசார ணைகளை முன்னெ டுத்துள்ளனர். (ரி1)

# தனிநபர் இடைவெளி பலவீனமான நிலையில்!

## எச்சரிக்கிறது தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு

**கொழும்பு, ஜூலை 14**
**போக்குவரத்து சேவைகள், வர்த்தக சந்தைகள் மற்றும் தேர்தல் கூட்டங்கள் போன்றவற்றில் தனிநபர் இடைவெளியைப் பேணுவது மிகவும் பலவீன மான நிலையில் இருக்கின்றன எனவும், இது மிக மோசமான நிலை எனவும் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.**

கூட்டம்கூடும் இடங்களில்கொரோனா நோயாளி ஒருவர் இருந்தால், அங் கிருக்கும் பலருக்கு நோய் பரவும் ஆபத்து இருக்கின்றது. இதனால், தனிநபர் இடைவெளியைப் பேணு வதுடன், சன நடமாட்டம் உள்ள இடங்களுக்குச் செல்லும் போது முகக் கவசங்களை அணிவது மற் றும் கைகளைக் கழுவுவது மிகவும் முக்கியமானது.
அந்த இடங்களில் இருந்தவர் களை கண்டறிவது மிகவும் கடின மானது.
தற்போது அடையாளம் காணப்பட் டுள்ள கொரோனாத் தொற்றானது, இரண்டாவது அலையாக பரவும் ஆபத்து இருந்தாலும் நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
ஆயினும் அடையாளம் காணப் படாத நோயாளி சமூகத்தில் இருந் தால், அவர் மூலம் இரண்டாவது அலை உருவாகும் ஆபத்து காணப்படுகிறது.
வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது போனால் நாட்டில் கடந்த சில மாதங்கள் நடைமுறைப்படுத் தப்பட்ட கட்டுப்பாடுகளை மீண்டும் அமுல்படுத்த நேரிடும்.
இது மீண்டும் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பின்நோக்கித் திருப்பும். எனவே நாட்டு மக்கள் அனைவரும் சுகாதாரப் பாது காப்பு முறையைக் கடைபிடிக்க வேண்டியது அத்தியாவசியமா னது எனவும் சுதத் சமரவீர வலி யுறுத்தியுள்ளார். (ரி3)



# கிளிநொச்சியில் வெடிபொருள்கள் மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 14
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தருமபு ரம் மற்றும் சுண்டிக் குளம்நாதன் திட்டம் பகுதிகளில் நேற்று முன் தினம் வெடிபொருள் கள் மீட்கப்பட்டுள்ளன.
இந்த வெடிபொருள் கள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற அனு மதியுடன் பொலிஸ் அதிரடிப்படையினரால் செயலிழக்கச்செய்யப் பட்டன. (ரி3-113)



# வாகனம் குடைசாய்வு ஒருவர் காயம்

வவுனியா, ஜூலை 14
வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி மரக்கறி ஏற்றிக் கொண்டு வந்த கப் வாகனம் குடைசாய்ந்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை முல்லைத்தீவு மாங்கு ளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொக்காவில் பகுதியில் ஏ9 வீதியில் இடம்பெற்றுள்ளது.
வேகக் கட்டுப்பாட்டை இழந்த இந்த வாகனம் வீதியை விட்டு விலகியதில் குறித்த விபத்து இடம்பெற்ற தாகவும், விபத்தில் காயமடைந்தவர் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் பொலிஸார் தெரிவிக் கின்றனர்.
விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்கு ளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி3-6)

# இலங்கையர்களை அழைத்துவரும் நடவடிக்கைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 14
தற்போது நடைபெற்று வரும் இலங் கைப் புலம்பெயர்ந்த தொழிலாளர் கள் மற்றும் மாணவர்களை நாட் டுக்கு அழைத்து வரும் செயற்பாடா னது நாளை முதல் அடுத்த மூன்று அல்லது நான்கு நாள்களுக்கு நிறுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.
தனிமைப்படுத்தல் நிலையமாக தற் போது பயன்படுத்தப்பட்டு வரும் கந்தகாடு போதைப்பொருள் புனர் வாழ்வு நிலையத்தில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றாளர்க ளின் எண்ணிக்கை காரணமாகவே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.
இலங்கை தனது பயணக் கட்டுப் பாடுகளைத் தளத்தியதிலிருந்து 65 நாடுகளிலிருந்து 16,000 க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் நாட் டுக்கு திரும்பி வந்துள்ளதாக ஜனா திபதியின் மேலதிக செயலாளர், அட்மிரல் ஜெயநாத் கொலம்பேஜ தெரிவித்துள்ளார்.
இந் நிலையில் மாலைத்தீவு மற்றும் ஜோர்தானிலிருந்து சுமார் 500 இலங்கையர்களுடன் இரண்டு விமானங்கள் இன்று வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாளை தற் காலிகமாக நிறுத்தப்படுவதற்கு முன்னர் இதுவே திருப்பி அழைத்து வரும் சேவையில் ஈடுபடும் கடைசி விமானங்களாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி2)

# நீரில் மூழ்கி சிறுவன் உயிரிழப்பு

மட்டக்களப்பு,ஜூலை 14
குளத்தில் குளிக்கச் சென்ற சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஊத்துச்சேனைப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.
வாழைச்சேனைக் கருணைபுரத்தினைச் சேர்ந்த சி.ஜக்ஷன் (வயது 14) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி2-150)



# கழிவுத் தேயிலையுடன் இருவர் கைது

கொழும்பு, ஜூலை 14
சீதுவ கொட்டுகொட பிரதேசத்தில் களஞ்சிய சாலையில் வைக்கப்பட் டிருந்த 700 கிலோகி ராம் கழிவுத் தேயிலை யுடன் இரண்டு நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள னர். நேற்று முன்தினம் பிற்பகல் மேற்கொள் ளப்பட்ட சோதனை நட வடிக்கையின் போது, பாவனைக்கு உத வாத தேயிலையை பொதியி டும்போது அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள னர் எனத் தெரிவிக்கப் படுகிறது.
ராகம மற்றும் ஜாஎல பகுதிகளில் வசிக்கும் 45 மற்றும் 51 வயது டைய நபர்களே இவ் வாறு கைது செய்யப்பட் டுள்ளனர் எனத் தெரி விக்கப்படுகிறது. (ரி1)



# கிளி.குளக்கட்டு ஞான வைரவர் மடப்பள்ளி கட்டடம் திறப்பு

கிளிநொச்சி, ஜூலை 14
கிளிநொச்சி குளக்கட்டு ஞானவைரவர் ஆலய மடப்பள்ளி கட்டடம் திறந்து வைக் கப் பட்டுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தக் கட்டட திறப்பு விழாவில் மருத்துவர் த.சத்தியமூர்த்தி மற்றும் மக்கள் வங்கியின் முன்னாள் முகாமையாளர் ச.ஸ்ரீகௌரி பாலாவும் இணைந்து நாடா வெட்டி மடப்பள்ளியைத் திறந்து வைத்தார்கள். மேலும் நினைவுக்கல்லை கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலய அறங்காவலர் சபையின் தலைவர் ந. செல்வராசா திரை நீக்கம் செய்து வைத்தார். (ரி3-222)

# கொரோனா கட்டுக்குள் வரும் திட்டமிட்டபடி தேர்தலும் நடக்கும்

## கூறுகின்றார் பெரமுனவின் திஸாநாயக்க

கொழும்பு, ஜூலை 14

கொரோனா வைரஸ் விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும். திட்டமிட்டபடி தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கைக்குள் கொரோனா வைரஸ் சாதகமான முறையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. எனினும், துரதிர்ஷ்டவசமாக இடம்பெற்ற ஒரு சம்பவத்தால் மீண்டும் சர்ச்சை நிலை ஏற்பட்டது. இந்த நிலைமை கட்டுக்குள் கொண்டு வருவதற்கான பலம் சுகாதார பிரிவினர், முப்படையினர், பொலிஸார் மற்றும் அரசுக்கு உள்ளது.

சஜித்தின் அறிவிப்புகள் எல்லாம் சிறுபிள்ளைத்தனமாகவே இருக்கின்றன. எனவே, அவற்றை செவிமடுத்து சிரிக்கலாம். பதிலளிக்கும் அளவுக்கு அவை முக்கியத்துவம் இல்லை. பொதுத்தேர்தலில் நிச்சயம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெறுவோம் - என்றார். (கு)



# தற்கொலைத் தாக்குதல்களை முறியடித்திருப்பார் கோத்தா!

*அலி சப்ரி கூறுகிறார்*

கொழும்பு. ஜூலை 14
கோத்தாபய ராஜபக் ஷ அதிகாரத்தில் இருந்திருந்தால் ஸஹ்ரான் நடத்திய குண்டுத்தாக்குதல் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேசிய பட்டியல் வேட்பாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சாய்ந்தமருதில் நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த வருடம் ஈஸ்டர் தினத்தில் ஸஹ்ரான் எனும் தீவிரவாதி மேற்கொண்ட குண்டுத்தாக்குதல் இந்நாட்டுமுஸ்லிம்கள் அனைவரையும் வெகுவாக பாதிப்படையச் செய்திருக்கிறது. இதற்குக்காரணம்யார்? இதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் கடந்த ஆட்சியாளர்கள் தான். அவர்களது பொறுப்பற்ற ஆட்சி நிர்வாகம் தான் ஸஹ்ரானின் குண்டுத் தாக்குதலுக்கு இடம் கொடுத்திருக்கிறது. அவ்வேளையில் கோத்தாபய ராஜபக்ஷ அதிகாரத்தில் இருந்திருந்தால் குண்டு தயாரிப்பதற்கு ஸஹ்ரான் முயற்சி எடுத்த போதே அந்த ஸஹ்ரான் தூக்கப்பட்டு, முகவரியில்லாமல் செய்யப்பட்டிருப்பான்.

இந்த ஆட்சியில் நாம் பங்காளியாக மாறுவதன் மூலமே முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குதீர்வுகாண முடியும் என்பதையும், முஸ்லிம்களின் உரிமைகள், அபிலாஷைகளை அடைந்து கொள்ள வேண்டுமாயின் அது, கோத்தாபய அரசாங்கத்தில் தான் சாத்தியப்படும் என்பதையும் இனியாவது உணர்ந்து கொள்ளுங்கள் - என்றார். (ஐ)

# தமிழ்க் கட்சி என்னும் முகமூடியில் களமிறங்கியுள்ள பெரமுனவினர்!

*வேட்பாளர் சத்தியலிங்கம் சாடல்*

**கிளிநொச்சி, ஜூலை 14**

**கடந்த காலங்களில் பெரமுனவின் பங்காளிகளாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற முடியாதவர்கள் தற்போது தாம் தனித் தமிழ்க் கட்சி என்ற போலி முகமூடியை போட்டு மக்களிடம் வாக்குக் கேட்கிறார்கள் என வன்னி மாவட்ட இலங்கை தமிழரசுக்கட்சியின் வேட்பாளர் வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.**

வவுனியா அரச விருந்தினர் விடுதியில்நேற்று இடம்பெற்ற இளையோர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னித் தேர்தல் தொகுதி என்பது மிக முக்கியமானது என்பதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும். கடந்த காலத்தில் வெற்றிலைச் சின்னத்திலும் வெவ்வேறு சின்னங்களிலும் போட்டியிட்டவர்கள் தற்போது தாங்கள் தமிழர்கள் நாங்கள் தமிழ் கட்சியிலே போட்டியிடுகின்றோம் என்ற பிம்பத்தைத் தோற்று வித்துள்ளார்கள். எங்களுடைய வேட்பாளர்களும் தமிழர் தான் என்கின்ற பிரசாரத்தை முன்னெடுத்து தங்களை தமிழர்களாகக் காட்டி தமக்கு வாக்களியுங்கள் என்று கேட்கிறார்கள். அப்படிக் கேட்பவர்கள் பெரமுனவின் வேட்பாளர்களே. எனவே மக்களே, தம்மைத் தமிழ்க் கட்சியினர் என்ற போர்வையில் வெளிப்படுத்திவரும் இந்த வேட்பாளர்கள் மட்டில் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் - என்றார். (ம-110)

# கிழக்கின் முதல்வராக தமிழர்; இதுவே எமது அரசியல் புரட்சி

*கருணாவுக்கு வந்த புதுக் கனவு*

கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஒருவரை முதலமைச்சராக்குவதே எமது அரசியல் புரட்சியாக உள்ளது. இதனாலே இம்முறை தேர்தலில் தனித்து களமிறங்கியுள்ளோம் என்று தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அகில இலங்கை தமிழர் மகா சபையின் அம்பாறை மாவட்ட வேட்பாளருமான கருணா அம்மான் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"மாற்றத்துக்கான சக்தியாக இந்த தேர்தலை வெற்றி கொள்ள களமிறங்கியுள்ளோம்.

இதற்காக நாம் செயற்பட வேண்டும். 12,800 போராளிகள் அன்றைய அரசில் எவ்வித வழக்குகளுமின்றி விடுவிக்கப்பட்டுள்ளார்கள். அது போன்று 150 அரசியல் கைதிகள் உள்ளார்கள். இவர்களை விடுவிக்க தேர்தலின் பின் காத்திரமான நடவடிக்கைகளை எடுப்போம் - "என்றார். (ஐ)

# அரச அலுவலர்களின் வாக்குகள் சிறந்த ஆரம்பத்தை தரவேண்டும்!

*சு.கவின் வேட்பாளர் கோரிக்கை*

யாழ்ப்பாணம். ஜூலை 14
வடக்கில் அரச அலுவலர்கள் இடும் புள்ளிகள் சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் வரதராஜசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அரச அலுவலர்கள் விவேகத்துடன் முடிவு எடுப்பது காலத்தின் தேவையாக உள்ளது.




வடக்கில் கடமையாற்றும் அரச அலுவலர்கள் நாளாந்தம் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் தமது சேவையை வழங்கி வருகின்றனர். இவர்களில் வடக்கு மாகாணத்தில் சேவையாற்றும் ஆசிரியர்கள் அதிபர்கள் திடமான ஓர் ஆசிரிய இடமாற்றக் கொள்கை நடைமுறைப் படுத்தப்படாத நிலையில் பலர் உளரீதியாக பல்வேறு பாதிப்புகளை எதிர் கொண்டு வருவதை அறிய முடிகிறது

வடக்கு மாகாண கல்வி அமைச்சைப் பொறுப்பெடுத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாகவும் உயரதிகாரிகளின் அசண்டையீனத்தாலும் தேசிய கொள்கைகளில் ஒன்றான ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. அரச அலுவலர்கள் தமது துன்பங்களைச் சிந்தித்து இம்முறை தமது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும் - என்றார். (ம-159)

*அரச உத்தியோகத்தர்கள்*

# ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பது அவசியம்!

*முன்னாள் எம்.பி. மகரூப் தெரிவிப்பு*

கொழும்பு. ஜூலை 14
அரச ஊழியர்கள் தமது கௌரவம் பாதுகாக்கப்பட ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டும் என திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச ஊழியர்களுள் பெரும்பாலானவர்கள் அவர்களது சம்பளத்தை நம்பி வாழ்பவர்கள். சாதாரண ஓர் அரச ஊழியருக்கு அவரது வாழ்க்கையை கொண்டு நடத்த மாதச் சம்பளம் போதாது. இதனால் பலர் கடனுக்கு மத்தியிலேயே தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர்.

எமது கடந்த அரசு இந்த விடயத்தை கவனத்தில் கொண்டு அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை 100 வீதத்தால் அதிகரித்தது. பிரயாணப் படியை 100 வீதம் அதிகரித்தது. இதனடிப்படையில் அரச ஊழியர்கள் தமது விடுமுறை நாள் கொடுப்பனவு, மேலதிக நேரக் கொடுப்பனவு என்பவற்றை அதிகரித்துப்பெறும்வாய்ப்பை ஏற்படுத்தினோம்.

மகிந்த ராஜபக்ஷ அரசு கடந்த காலத்தில் பெற்றோல் விலையை 165 ரூபாவாக உயர்த்தி வைத்திருந்தது. இதனை வெகுவாகக் குறைத்து அரச ஊழியர்களின் மோட்டார்சைக்கிள்பயணசெலவைக் குறைத்தோம். சமையல் எரிவாயு விலையை வெகுவாகக் குறைத்து சகலரதும் வாழ்க்கைச் செலவைக் குறைத்தோம்.

மருந்துப் பொருள்களின் விலையை நாம் கணிசமான அளவு குறைத்ததால் மாதாந்தம் கிளினிக் சென்று வெளிக் கடைகளில் மருந்துப் பொருள்கள் வாங்குவோர் பெரிதும் நன்மை அடைந்தனர். இந்த விடயங்களை.நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். நாம் ஆட்சிக்கு வந்தால் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை உடன் வழங்குவோம்.

பதவி நிலை உத்தியோகத்தர்களுக்காக எமது அரசு வழங்கிய விசேட கொடுப்பனவு தொடர்பான சுற்றுநிருபம் இந்த அரசால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதனை நாம் உடன் நடைமுறைக்குக் கொண்டு வருவோம் -என்றார். (ம)

# கௌரவமான நாடாளுமன்றத்துக்காக தபால் வாக்கைப் பயன்படுத்துங்கள்!

*முன்னாள் பிரதியமைச்சர் அப்துல்லா மஹரூப் கோரிக்கை*

கொழும்பு, ஜூலை 14
தபால் மூல வாக்களிப்பில் ஆழமாகச் சிந்தித்து வாக்களித்தால் கௌரவமான நாடாளுமன்றத்துக்கு வழி ஏற்படும். அரச அலுவலர்கள் இதைச் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார் முன்னாள் பிரதியமைச்சர் அப்துல்லா மஹரூப்.

இது தொடர்பில் அவர் நேற்றுமுன்தினம் மேலும் தெரிவித்ததாவது:

நாளை மற்றும் நாளைமறுதினம் (நேற்றும் இன்றும்) சுகாதாரத் துறை சார்ந்தவர்கள் வாக்களிக்கவுள்ளார்கள். இந்த நாட்டுக்காக திறம்பட சிறப்பாக செயற்பட்டவர்களே சுகாதாரத் துறையைச் சேர்ந்த வைத்தியர்கள், சுகாதார பரிசோதகர்கள், தாதிமார்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள் ஆவர். அவர்கள் யதார்த்தத்தை ப் புரிந்து கொண்டு தமது வாக்குகளைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். ஒரு சாரார் மட்டும் நாட்டுப்பற்றுக்கொண்டவர்களல்லர் ஒரு குடும்பம் மாத்திரம் நாட்டுப் பற்று கொண்டது மாதிரியான பொய்ப் பரப்புரைகள் செய்யப்படுகின்றன. மக்கள் இந்தக் கயவர்களை அடையாளம் காண வேண்டும் - என்றார். (ம)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நவீன யமதர்மனைக் கட்டுப்படுத்துக!

எல்லா உயிர்களினதும் ஆயுள் எப்போது முடிய வேண்டும் என்று தீர்மானிக்கும் சக்தியாகத் தான் இருப்பதை எண்ணி, யமதர்மனுக்குத் தலைக்கனம் வந்துவிட்டது. எல்லோரையும் விடத் தானே உயர்ந்தவன் என்ற நினைப்பு வர , எவரையும் மதிக்காமல் நடக்கத் தலைப்பட்டான் யமதர்மன். ஒருமுறை யமதர்மனைச் சந்திக்க துர்வாச முனிவர் வந்திருந்தார். துர்வாசரைப் பற்றித்தான் எல்லோருக்கும் நன்கு தெரியுமே, கோபத்தின் மறுவடிவம் அவர் என்று. அவர் வந்தநேரம் யமதர்மன் உள்ளே உறங்கிக் கொண்டிருந்தார். அதனால் வாசலில் நின்ற யமனின் வாகனமான எருமையிடம் "நான் வந்திருப்பதை யமனிடம் போய் சொல்லு" என்று கூறினார்.

எருமையும் முனிவர் வந்த விடயத்தை யமனிடம் போய்ச் சொன்னது. தூக்கக் கலக்கமும், தலைக்கனமும் ஒன்றுசேர தன்னிலை மறந்த யமன் "அந்தக் கிழ முனிவருக்கு வேறு வேலை இல்லையா? நான் தூங்கும் போதுதானா வரவேண்டும்" எனச் சினத்தோடு கேட்டுவிட்டான். அது துர்வாச முனிவரின் காதுகளிலும் விழ, "யமதர்மா, என்னையா கிழமுனிவன் என்று அவமானப்படுத்தினாய் பிடி சாபத்தை! இனி நீ பூலோகத்தில் அலைந்து திரிவாயாக" என்று சாபம் கொடுத்துவிட்டார்.

அப்போதுதான் யமதர்மனுக்கு தான் செய்த தவறும், அதனால் ஏற்பட்ட விளைவும் புரிந்தது. உடனேயே அவன் துர்வாச முனிவரின் கால்களில் வீழ்ந்து "முனிவரே, என்னை மன்னியும். நான் தூக்கக் கலக்கத்தில் அறியாமல் சொல்லிவிட்டேன். எனக்குச் சாபவிமோசனம் தாருங்கள், இல்லாவிடில் பூலோகத்தில் உள்ள உயிர்களை நான் கவர முடியாமல் போய், அங்கு சனத்தொகை அதிகரித்து, பூமி பாரம் தாங்காமல் வெடித்துவிடும்" என்று கெஞ்சினான்.

துர்வாசரும் மனமிரங்கி "சரி நீ பூலோகத்தில் டிப்பராகப் பிறப்பெடுத்து, உயிர்களைக் காவு கொள்வாயாக" என்று சாபத்தைக் கொஞ்சம் தளர்த்தினார். அதுநாள் முதல் யமன், டிப்பர் வாகன உருவத்தில் பழையபடி உயிர்களைப் பறிக்கும் பணியைத் தொடர்ந்து வருகின்றான்.

மேலே சொல்லப்பட்ட கற்பனை நகைச்சுவைக் கதை சாதாரணமாகக் கடந்து போய்விடக்கூடியதல்ல. அது சொல்கிற செய்தி ஆழமானது. அண்மைக்காலமாக டிப்பரில் மோதுண்டு உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. மனிதர்களை மட்டுமன்றி, ஆடு, மாடு போன்ற கால்நடைகளையும் டிப்பர்கள் விட்டு வைப்பதில்லை. மோதுகின்ற டிப்பருக்கு மனிதரென்ன, மாடென்ன எல்லாம் ஒன்றுதான். இப்படி டிப்பர் சாவுக்களுக்கு மிக முக்கிய காரணம், அவற்றின் அதிவேகமும், பயணிக்கும் நேரமும்.

பொதுவாக டிப்பர் போன்ற கனரக வாகனங்களின் அதியுச்ச வேக எல்லையாக 40 கிலோமீற்றர் என மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். அது தெளிவாக அந்த வாகனத்தின் பின்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுமிருக்கும். ஆனால் எந்தவொரு டிப்பரும் தம்முடைய அதிகுறைந்த வேகமாகவே 40 கிலோமீற்றரில் பயணிக்கின்றனவே தவிர, பெரும்பாலும் 80, 90 என்று காற்றைக் கிழித்துக் கொண்டு பறப்பதே டிப்பர்களின் ஸ்ரைலாக இருக்கின்றது. அத்தோடு மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகல் வேளைகளில், பொதுப்போக்குவரத்துப் பாதைகளில் நவீன யமதர்மனான டிப்பர்கள் இப்படிப் பறந்து வருவது, விபத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கச் செய்யும். மாறாக அனைத்து டிப்பர்களும் 40 கிலோமீற்றருக்கு மேல் வேகமெடுக்கக் கூடாது, இரவில் மட்டுமே அவை பயணிக்கலாம் என்ற கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தால் டிப்பரால் ஏற்படும் விபத்துக்களை அரைவாசிக்கும் அதிகமாகக் குறைக்கமுடியும். இந்த விதிகளை நடைமுறைப்படுத்துவது அரசுக்கொன்றும் கஷ்டமான காரியமல்ல. ஆனால் அதைச் செய்யத்தான் அரசுக்கும், பொலிஸுக்கும் நேரமில்லையே. நாட்டுமக்களின் உயிர்கள் மீது கொஞ்சமேனும் அக்கறை இருக்குமாயின் உடனடியாக டிப்பர்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தவும், இரவில் மட்டுமே டிப்பர்கள் பயணிக்கலாம் என்ற நடைமுறையைக் கொண்டுவரவேண்டுமென சமூக அமைப்புகளும், அரசியல்வாதிகளும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். கொடுப்பார்களா?



# பதவிக்குவரும் எந்த அரசுடனும் பேச்சு நடத்தத்தான் வேண்டும்!

### கூட்டமைப்பின் வேட்பாளர் சித்தார்த்தன் தெரிவிப்பு

**வலி.தென்மேற்கு, ஜூலை 14**

**நல்லாட்சி அரசுக்கு நாம் ஆதரவு வழங்கியமை குறித்து மாற்றுக் கட்சியினர் மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைக் கூறி வருகின்றார்கள். தமிழ் பேசும் மக்களின் நீண்டநாள் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்றால் பதவிக்குவரும் எந்த அரசுடனும் நாம் பேச்சு நடத்தத்தான் வேண்டும். ஆதரவும் வழங்கத்தான் வேண்டும். இதில் என்ன தவறு இருக்கின்றது. இவ்வாறு யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான த.சித்தார்த்தன் அரசியல் கலந்துரையாடல் நிகழ்வொன்றில் கருத்து வெளியிடுகையில் தெரிவித்தார்.**

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் உப தவிசாளர் ஆ.கணேசவேல் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் த. சித்தார்த்தன் மேலும் தெரிவித்ததாவது:

தந்தை செல்வா காலத்திலும் சரி அமிர்த லிங்கம் காலத்திலும் சரி தமிழ் மக்கள் இழந்த உரிமைகளைப் பெறுவதற்காகவும், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கிலும் அரசுக்கு ஆதரவு வழங்கியமையை இவர்கள் மறந்துவிட்டார்களா?. தந்தைசெல்வா, பண்டாரநாயக்கவுடனும் டட்லி சேனநாயக்கவுடனும் பேச்சு நடத்தியதுடன் மாத்திரம் நில்லாது ஒப்பந்தமும் செய்திருந்தார். அதேபோல் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு நாம் நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியமையில் என்ன தவறு உள்ளது.

நாம் கடந்த காலங்களில் நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியமையினால் தான் இடம்பெயர்ந்து பெரும் இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்த குடும்பத்தவர்கள் சொந்த இடங்களில் மீளவும் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த பல நூற்றுக் கணக்கான காணிகளை விடுவித்துள்ளோம். நாம் நல்லாட்சி அரசுக்கு ஆதரவு வழங்கியிருக்காவிட்டால் இன்னும் காணிகள் விடு விக்கப்பட்டு மீள் குடியேற்றங்கள் இடம் பெற்றிருக்கமாட்டாது - என்றார்.

(ம-115)

## மாலைதீவில் சிக்கிய 178 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூலை 14

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக மாலைதீவில் சிக்கித்தவித்த 178 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பினர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானம் மூலம் இவர்கள் மாத்தளை விமான நிலையத்தை வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் பி.சி. ஆர்.பரிசோதனைகளின் பின்னர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஸஹ்ரானுடன் தொடர்பு; பொலிஸ் பரிசோதகர் கைது

கொழும்பு, ஜூலை 14

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான ஸஹ்ரான் குழுவுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸ் பரிசோதகர் ஒருவரை அவரது அக்கரைப்பற்று வீட்டில் வைத்து கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயித்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக விசாரணையை மேற்கொண்டுவரும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் அவரைக் கைது செய்துள்ளனர். அக்கரைப்பற்றைச் சேர்ந்த குறித்த பொலிஸ் பரிசோதகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## ஆளணி முகாமைத்துவ தரவுத்தளம் உருவாக்கம்

வடக்கு மாகாண அலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலர்களின். இணையவழி ஆளணி முகாமைத்துவ தரவுத்தளம் வடக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தால் உருவாக்கப்படவுள்ளது.

இதற்கென அலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. நாடளாவிய சேவையில் உள்ள இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியியல்சேவை, இலங்கை திட்டமிடல்சேவை, இலங்கை கணக்காளர் சேவை மற்றும் இணைந்த சேவையைச் சேர்ந்த வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர், உள்ளகக் கணக்காய்வாளர், வரி அறவீட்டு உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், படவரைஞர், முகாமைத்துவ உதவியாளர், சாரதிகள், அலுவலக பணியாளர்கள் போன்றோரின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு திணைக்களத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது (ஐ-9)

## அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயன்படுத்தக்கூடாது

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குமான அவசர அறிவித்தல் ஒன்று வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் க.விக்னேஸ்வரானந்தனால் விடுக்கப்பட்டு ள்ளது.

தற்போதைய நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் படங்கள் பொறித்த பெயர்ப்பலகைகளை அகற்றுதல் மற்றும் மறைப்புச் செய்தல் போன்ற செயற்பாடுகளை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக மேற்கொள்ள சில பிரதேச செயலக உயரதிகாரிகள் பணித்துள்ளதாக அறியமுடிகின்றது.

இவ்வாறான ஆபத்துமிக்க வேலைகளை நேரடியாகச் செய்யும்படி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை எவரும் பணிக்க முடியாது. எனவே இவ்வாறான செயற்பாடுகளைச் செய்யும்படி உங்களை எவராவது பணித்தால் உடனடியாக எமக்கு அறியத்தாருங்கள் என்று வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் க.விக்னேஸ்வரானந்தன் தெரிவித்துள்ளார். (ப)

# தற்போது இருப்போர் தமிழ் மக்கள்தானா?

## தமிழர் விடுதலைக்கூட்டணி கேள்வி

**கிளிநொச்சி, ஜுலை 14**

**2009ஆம் ஆண்டு இறுதிப் போரின்போது விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் கொல்லப்பட்டனர். எஞ்சியிருப்பவர்கள் தமிழர்கள்தானா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இறுதிப் போரைத் தொடர்ந்துவந்த ஜனாதிபதித் தேர்தலில் இறுதிப்போரை முன்னெடுத்த இராணுவத்தளபதியான பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு தமிழர்களின் தலைவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்பவர்கள் கோரினார்கள்.**

தமிழர்கள் பலரும் அவ்வாறே செய்தனர். இதனால்தான் இறுதிப்போரின் பின்னர் எஞ்சியிருப்பவர்கள் தமிழர்கள்தானா என்ற சந்தேகம் எழுகின்றது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பாக பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான இரா.சங்கையா.

அந்தக் கட்சியால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழீழ போராட்டத்தை ஒரு பயங்கரவாதப் போராட்டமாக சித்திரித்து தங்களை தமிழ் தலைவர்கள் என்று கூறிக் கொண்டவர்கள், அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாழ்த்தும் தெரிவித்தார்கள், எனவே இவர்கள் தமிழர்களாக இருக்கமாட்டார்கள். ஏனெனில் தமிழர்களின் அடையாளமாக, நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே, நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம், மன்னவனும் நீயோ? வளநாடும் நின்னதுவோ? உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன். தேரா மன்னா செப்புவ துடையேன். என பலவற்றைச் சொல்லலாம். அதுவும் கண்ணகி தன் கணவன் கொல்லப்பட்டதை மதுரை மாநகரம் வேடிக்கை பார்த்ததற்காக மதுரையை எரித்தாள். ஆனால் 2009ஆம் ஆண்டின் பின் அன்று வாழ்ந்த மக்கள் தமிழர்கள் முள்ளிவாய்க்கலில் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட போது வேடிக்கை பார்த்த தலைவர்களை மீண்டும் மீண்டும் இரு தடவைகள் நாடாளுமன்றம் அனுப்பி வைத்தனர். ஆகவே ஓர் ஐயப்பாடு தோன்றியுள்ளது. முள்ளிவாய்க்காலில் இறந்தவர்கள் தமிழர்களா? அல்லது போரின்; பின் இருந்தவர்கள் தமிழர்களா? இறந்தவர்கள் தமிழர்களாக இருந்தால் இருந்தவர்கள் தமிழர்களாக இருக்க முடியாது. இருந்தவர்கள் தமிழர்களாக இருந்தால் இறந்தவர்கள் தமிழர்களாக இருக்க முடியாது - என்றுள்ளது. (ம)

# பெரமுன தனித்து நின்று அரசாங்கத்தை அமைக்கும்

## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 14

நாடாளுமன்றத்தில் பிற கட்சிகளின் ஆதரவுடன் அரசாங்கத்தை அமைக்க வேண்டிய தேவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு கிடையாது. தனித்து நிலையான அரசாங்கத்தை அமைப்பதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு நிச்சயம் கிடைக்கும். நிபந்தனைகளுக்கு அடிபணிந்து அரசாங்கத்தை அமைத்தால், கடந்த அரசாங்கத்தின் தன்மைகளே மீண்டும் தோற்றம் பெறும். இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

கொரோனா வைரஸ் பரவலைக் குறிப்பிட்டுக் கொண்டு, மக்களின் அன்றாடச் செயற்பாடுகளை முடக்க முடியாது. கடந்த மூன்று மாத காலமாக அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக தேசிய பொருளதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறான நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் பிறிதொரு கட்சியின் ஆதரவுடன் அரசாங்கத்தை அமைக்கும் போது அவர்கள் விதிக்கும் நிபந்தனைகளுக்கு அடிபணிய வேண்டும். ஒவ்வொரு தரப்பினரது மாறுப்பட்ட கொள்கைகளுடன் இணைந்து அரசாங்கத்தினால் செயற்பட முடியாது. ஆகவே நிபந்தனைகளற்ற அரசாங்கத்தை ஸ்தாபிப்பதே எமது இலக்கு. அத்தோடு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் போட்டியிடுகிறார்கள். தேசியப் பட்டியலிலும் இரு தரப்பினருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான புதிய அரசர்ங்கத்தில் தமிழ் , முஸ்லிம் சமூகத்தினர்கள் உள்ளடங்குவார்கள் - என்றார். (ப)

# பேருந்துகளில் பொருள்கள் விற்பனை; உடனடியாக நிறுத்தப்படவேண்டும்

## *அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவுறுத்து*

கொழும்பு, ஜுலை 14

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக அனைத்து தனியார் மற்றும் இ.போச பேருந்துகளினுள் மேற்கொள்ளப்படும் பல்வேறு விற்பனை நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இது தெடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சில நடமாடும் வியாபாரிகளால் சுகாதார முறைகளைப் பின்பற்றாது விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகப் பயணிகளிடமிருந்து போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ரயில்வேத் திணைக்களத்தால் கடந்த மார்ச் மாதத்திலிருந்து ரயிலில், நடமாடும் வியாபாரிகள் நுழைவதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. சில நடமாடும் வியாபாரிகளால் தனியார், இபோச பஸ்களில் உணவு பொருள்கள், குடிதண்ணீர் போத்தல்கள் மற்றும் பழவகைகள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த வியாபாரிகள் நாளாந்தம் அதிகளவான பஸ்களில் ஏறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். எனவே, அவர்களால் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகள் முறையாகப் பின்பற்றாமல் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய வியாபார நடவடிக்கைகளால் கொரோனா பரவக்கூடிய சாத்திம் அதிகளவில் காணப்படுகிறது என்று போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. ஆகையால், உடனடியாக இந்த நடமாடும் வியாபார நடவடிக்கைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ப)

# கூட்டமைப்பாக இருந்தால் உள்ளே வரவேண்டாமாம்

## வன்னியின் நிலை இது என்கிறார் பிரபாகணேசன்

வவுனியா, ஜுலை 14

வன்னியில் பல கிராமங்களுக்குச் செல்லும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தால் உள்ளே வரவேண்டாம் என்று சொல்லும் அளவுக்கு மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவுள்ளார்கள் என முன்னாள் பிரதி அமைச்சரும், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

வன்னி மாவட்டத்தைப் பொறுத்தவரை தேர்தல் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது. பல அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன. என்னைப் பொறுத்தவரை எதிர்காலத்தில் நாங்கள் வன்னி மக்களுக்கு எதைச் செய்யப் போகின்றோம் என்பதை முன்னிறுத்தியே போட்டியி டுகின்றோம். கடந்த காலத்தில் மக்களிடம் ஆணை பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு என்ன செய்தது என்பதை மக்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. இன்று பல கிராமங்களுக்குச் செல்லும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தால் உள்ளே வரவேண்டாம் என்று சொல்லும் அளவுக்கு மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவுள்ளார்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புர்க்கு எதிரான வாக்குகள் ஊழலற்ற முறையில் செயற்படக் கூடிய எங்களுக்கு தான் கிடைக்க வேண்டுமே தவிர, சுயேச்சைக் குழுக்களுக்கும், மாற்று இனத்தவர்களுக்கும் செல்லக் கூடாது - என்றார். (ப-18)

# கொவிட் 19 வைரஸ்; தரவுகளில் பலத்த சந்தேகம்!

## *ரணில் பகீர் தகவல்*

கொவிட் 19 தொடர்பில் சுகாதார அமைச்சால் வெளியிடப்படும் தரவுகள் தொடர்பில் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளதால், அவற்றை நம்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கேகாலை பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனா வைரஸ் குறித்து ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொற்றுநோய்ப் பிரிவும் பரிசோதனைகளை நடத்திவந்த நிலையில், அங்கு உரிய முறையில் பரிசோதனை நடைபெறுவதில்லை எனக் குறிப்பிட்டு, அந்த விசாரணைப் பிரிவை,, சுகாதார அமைச்சு நீக்கியது. இலங்கையில் முதற்கட்டமாக கொரோனா வைரஸ் பரவியபோது கடந்த ஏப்ரல் மாதம் எனக்கும், மைத்திரிக்கும் குறித்த பல்கலைக்கழகத்தின் பரிசோதனைப் பிரிவே, கொரோனா பரவியுள்ளதா என பரிசோதனை நடத்தியது. முடிவு வெளியானதும், எனக்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டது. அவர்களின் பரிசோதனை பிழையெனில் எனக்கு நோய் ஏற்பட்டிருக்கவேண்டும். குறிப்பாக ஜிந்துப்பிட்டியவில் இருந்து ஒருவர் அழைத்துவரப்பட்டுள்ளார். அவருக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது என பல்கலைக்கழகத்தின் பரிசோதனைப் பிரிவு கூறியுள்ளது. அவ்வாறு இல்லை. அவருக்கு வைரஸ் தொற்று ஏற்படவில்லை என பதிவிடுமாறு சுகாதார அமைச்சால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு பல்கலைக்கழகம் உடன்படவில்லை. நான் கூறும் இந்த விடயம் தவறெனில் உரிய விளக்கத்தை வழங்குமாறு சுகாதார அமைச்சிடம் கேட்டுக்கொள்கின்றேன். எண்ணிக்கையைக் குறைத்துக்காட்டு மாறு வலியுறுத்தப்பட்டதாக பல்கலைககழகம் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது பாரதூரமான விடயமாகும். உலகில் ஏனைய நாடுகள் பரிசோதனைகளை அதிகரித்துவருகின்றன. ஆனால், இங்கு இருந்த விசாரணைப்பிரிவையும் அகற்றியுள்ளனர் எனவே, சுகாதார அமைச்சு என்ன செய்கின்றது என்ற வினா எழுகின்றது. குறித்த அமைச்சால் வழங்கப்படும் தரவுகள் சரியானவையா என்பதில் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது. தரவுகளை ஏற்கமுடியுமா? இன்று மக்கள் அச்சமடைந்துள்ளனர். அந்த அச்சநிலையை மட்டுமே மொட்டு அரசால் உருவாக்கமுடிந்தது -என்றார். (ப-44)

# அராலியை வளப்படுத்தியவருக்கு இங்குள்ள மக்களின் வாக்குகள்!

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் கந்தையா இலங்கேஸ்வரன் இப்படித் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 14**

**அராலி மக்களின் ஒட்டுமொத்த ஆதரவும் சரவணபவனுக்கே வழங்கப்படும். எமது பிரதேசத்தில் அவரால் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திகளை என்றும் மறக்க மாட்டோம். எமது மக்கள் நன்றியுடையவர்கள்.– இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் கந்தையா இலங்கேஸ்வரன்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் பெரும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு அடையாளத்தைப் பதித்துள்ளார். சிறப்பாக அராலி மேற்கு அராலி தெற்கு பிரதேசங்களுக்கு ஒரு கோடியே 75 லட்சம் ரூபா பெறுமதியான உதவிகளைச் செய்துள்ளார்.

முன்பு எங்கள் பிரதேசம் இருள் மண்டி இருட்டாகவும் பாதைகள் இன்றி குண்டும் குழியுமாகவே இருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டில் மின்சாரம் பெற்றுக்கொடுத்து ஒளி ஏற்றப்பட்டது. நடக்கக்கூட முடியாமல் இருந்த பாதைகள் பல கொங்கிரீட் போடப்பட்டு உறுதியான பாதைகளாக மாற்றப்பட்டுள்ளன.

மேலும் முன்பள்ளிகள், ஆலயங்கள் சனசமூக நிலையங்கள் என்பனவற்றுக்கு பெரும்உதவிகளை நிதியாகவும் உபகரணங்களாகவும் வழங்கியுள்ளார். இளைஞர்களுக்கான விளையாட்டுக் கழகங்களுக்கு உதவிகளைச் செய்து இளைஞர்களை ஊக்கப்படுத்தி உள்ளார். குறிப்பாக 60 இளைஞர்களுக்கு இலவசமாக சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

அதேவேளை எந்த விதமான சமூக வேறுபாடுகளும் இன்றி அனைவரையும் இணைத்துச் செயற்படுகின்றார். அராலி மக்களின் ஆதரவு தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் சரவணபவனுக்கும்தான் - என்றார். (ம-2)

## தமிழர்களும், முஸ்லிம்களும் சேர்ந்து பயணிப்பது அவசியம்

*கல்குடாவில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமீர் அலி பேச்சு*

கொழும்பு, ஜூலை 14

எதிர்வரும் காலங்களில் தமிழ், முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டு அரசியலில் பயணிக்க வேண்டிய தேவைப்பாடு இந்தக்கால அரசியலைப் பொறுத்த வரையில் இருக்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

கல்குடாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களுக்கு அழுத்தம், கஷ்டம் இருக்கின்றது. கடந்த காலத்தில் உங்களுக்கு சிறப்பாக பணி செய்தோம். எமது சமூகத்தை ஏமாற்றாமல், கொள்ளையடிக்காமல் மரணத்திற்கு பயந்து சேவையாற்றிய தடயம் எங்கள் உள்ளத்தில் உள்ளது.

எங்களுக்கு இருக்கின்ற பிரச்சினை எமது இருப்பை பற்றிய பிரச்சினை, தமிழ் சமூகத்தினையும், தமிழ் தலைவர்களையும் துடைத்து எறிந்து விட்டோம் என்று சொல்கின்றார்கள். இனி துடைத்தெறிய இருக்கின்ற ஒரேயொரு சமூகம் முஸ்லிம் சமூகம். எனவே அந்த பட்டியலிலே நாங்கள் போய் விடக் கூடாது.

தமிழ் சமூகத்தினர்; துடைத்து எறியப்பட்டார்கள் என்பதை நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது. எதிர்வரும் காலங்களில் இரண்டு சமூகம் ஒன்றுபட்டு அரசியலில் பயணிக்க வேண்டிய தேவைப்பாடு இந்தக் கால அரசியலை பொறுத்த வரையில் இருக்கின்றது. இதற்கு நாங்கள் எல்லோரும் சமமான முறையில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பயணிக்க வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது - என்றார். (ம)

## அரசியல் எழுச்சியே நாட்டுக்குத் தேவை!

*பரப்புரைக் கூட்டத்தில் அனுரகுமார*

கொழும்பு, ஜூலை 14

நாட்டில் தற்போது அரசியல் எழுச்சி அவசியம் என தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.




அத்துருகிரிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சமூகம் தற்போது மிகப்பெரிய மாயையை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த மாயைக்கு எதிராக போராட்டம் ஒன்றை நடத்த வேண்டியுள்ளது. இது கைவிட முடியாத சமூக பொறுப்பாக மாறிவருகிறது. நாட்டின் முழு அரசியலும் தேசிய ரீதியாக சில குடும்பங்களையும் பிரதேச ரீதியாக சில குடும்பங்களையும் கேந்திரமாகக் கொண்டு அமைந்துள்ளது. இதனால், நாட்டை புதிய அரசியல் சக்தி கைப்பற்றுவதற்காக புதிய இளையோர் போராட்டம் நடத்த வேண்டும் - என்றார். (ம)

## பாரபட்சமின்றி தண்டனை நிறைவேற்றப்படவேண்டும்

*மஹிந்த அமரவீர கூறுகிறார்*

கொழும்பு, ஜூலை 14



போதைப் பொருள் வர்த்தகர்களுக்கு எதிராக சாவுத் தண்டனை தீர்ப்பளிக்கப்படுமாயின், பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளும் இக் குற்றச்சாட்டுடன் தொடர்புடையவர்கள் என நிரூபிக்கப் பட்டால், அவர்களுக்கும் சாவுத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என, அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அங்குணகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவர்களுக்கு சாவுத் தண்டனை வழங்கினால் பரவாயில்லை. நாட்டின் எதிர்காலத்தை அழிக்கும் போதை வர்த்தகர்களைக் கைதுசெய்யவே பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினர் நியமிக்கப்பட்டனரே தவிர, போதை வர்த்தகத்தை முன்னெடுக்க அல்ல - என்றார். (ப)

## 24 மணி நேரத்தில் 59 பேர் பேர் கைது

கொழும்பு, ஜூலை 14

கைரேகை அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டு தேடப்பட்ட 59 பேர் 24 மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனூடாக 103 குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய, இதுவரை பொலிஸில் சரணடையாத குற்றவாளிகளே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோனின் வழிகாட்டலின் கீழ் இந்தச் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டுள்ளது இதனிடையே, குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தேடப்பட்டுவந்த 56 பேரும் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 81 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 123 பேரும் போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத மதுபானத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 211 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ப)

## கரையோர ரயில் சேவைகள் பாதிப்பு

கொஸ்கொடை, ஜூலை 14

கொஸ்கொடைப் பகுதியில் ரயில் ஒன்றில் ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறு காரணமாக கரையோர ரயில் சேவைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஹிக்கடுவையில் இருந்து நேற்று அதிகாலை 5.25 மணியளவில் கொழும்புக் கோட்டை நோக்கி பயணித்த அலுவலக ரயில் ஒன்றிலேயே இவ்வாறு தொழிநுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன என ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் மேலும் குறிப்பிட்டுள் ளது. இதன் காரணமாக, காலி மற்றும் மாத்தறையில் இருந்து கொழும்புக் கோட்டை நோக்கிப் பயணிக்கும் மேலும் சில அலுவலக ரயில்கள் தாமதம் அடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ரி2)

*சிங்களவர்களே வந்தேறு குடிகள்;*

## விக்கிரமபாகுவின் கருத்தை பாராட்டியது தி.மு.க.

கொழும்பு, ஜூலை 14

இலங்கையிலுள்ள சிங்களவர்கள்தான் வந்தேறி குடிகளாவர் இதனை என்னால் நிரூபித்துக்காட்ட முடியும். இவ்வாறு நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கருணா ரத்னவின் இத்தகைய துணிச்சலான கருத்துக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் செய்தித் தொடர்பாளர் கே. எஸ். இராதாகிருஷ்ணன் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்ததாவது:

விக்கிரமபாகு கருணா ரத்ன சிங்களவராக இருந்தாலும் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து வருகின்ற ஒருவர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற டெசோ மாநாட்டுக்கு தி.மு.க.வினால் அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. டெசோ மாநாட்டுக்குச் சென்னைக்குச் செல்வதற்காக கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது, ராஜபக்ஷ அரசு அவரைத் தடுக்க நினைத்தது. ஆனாலும் விக்கிரமபாகு கருணா ரத்ன அதனையும் மீறி மாநாட்டுக்கு வருகை தந்தார். இவ்வாறு மாநாடு முடிந்து, இலங்கைக்குச் சென்ற போது, அப்போதைய அரசு அவரைத் தாக்கி, கறுப்புக் கொடி அசைத்து எதிர்ப்புத் தெரிவித்தது. இத்தகையவர் தற்போது, சிங்களவர்கள்தான் இலங்கையில் வந்தேறிகள் என்றும் அதற்கான ஆதாரங்களை வெளிப்படுத்த முடியும் என்றும் கூறியுள்ளார் - என்றார். (ப)

## வாக்களிப்பை அதிகரிக்கச்செய்தால் மட்டக்களப்பில் 4 ஆசனங்கள் உறுதி

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் நம்பிக்கை



**கொழும்பு, ஜூலை 14**

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கான வாக்களிப்பை அதிகரிக்கச் செய்யுமிடத்து 04 ஆசனம் கிடைப்பதென்பது அவ்வளவு கடினமான காரியமாக இருக்காது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மட்டக்களப்பு வந்தாறுமூலையில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் அலுவலகத்துக்கு நேற்று முன்தினம் சென்றிருந்தார். தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு வேட்பாளருமாகிய கி.துரைராசசிங்கத்தின் அழைப்பை ஏற்று அவர் மேற்படி பயணத்தை மேற்கொண்டிருந்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்களின் வாக்களிப்பு விதத்தை கடுமையாக அதிகரிக்கச் செய்ய வேண்டும். 04 பிரதிநிதிகள் பெற வேண்டிய இந்த மாவட்டத்தில் மக்களின் வாக்களிப்பு வீதக் குறைவினால் 03 பிரதிநிதிகளை மாத்திரமே பெறக் கூடியதாக இருக்கின்றது. இந்த நிலையை அனைவரும் ஒன்றிணைந்து மாற்ற வேண்டும். திருகோணமலையில் சுமார் 85 வீதத்துக்கு மேல் மக்கள் வாக்களிக்கையில் மட்டக்களப்பில் அது வெகு குறைவாகவே இருக்கின்றது. வாக்களிப்பு வீதத்தை அதிகரிப்பதுடன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கான வாக்களிப்பை அதிகரிக்கச் செய்யுமிடத்து 04 ஆசனம் கிடைப்பதென்பது அவ்வளவு கடினமான காரியமாக இருக்காது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)



## அரசியலில் பெண்கள்

*மன்னாரில் வீதி நாடகம்*

மன்னார், ஜூலை 14

நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் என்னும் தொனிப் பொருளிலான ஒரு நாடகம் ஒன்று மன்னாரில் இடம்பெற்றது.

மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் மஹாலட்சுமி குருசாந்தன் தலைமையில், மன்னார் புதிய பேருந்து நிலையத்தில் நேற்றுக் காலை பத்து முப்பது மணியளவில் இந்த நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது.

இந்த நாடகத்தில், அரசியலுக்குள் பெண் பிரதிநிதித்துவம் அதிகமாக உள்வாங்கப்பட வேண்டும் என்பதுடன் தேர்தலில் பெண்கள்,பெண் வேட்பாளருக்கே வாக்களிக்க வேண் டும் என்பதுடன் சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் குறித்தும் வலியுறுத்திக் கூறப்பட்டது. (ப-213)

## கிழக்கு தொல்பொருள் செயலணி இன முரண்பாட்டை ஏற்படுத்தும்


*கூட்டமைப்பின் வேட்பாளர் சுட்டிக்காட்டு*

மூதூர், ஜூலை 14

திருக்கோணேஸ்வரர் ஆலயம் தொடர்பாக பௌத்த பிக்கு எல்லாவல மேத்தானந்த தேரரின் கருத்தானது இலங்கையில் மீண்டும் ஒரு இன முரண்பாட்டை ஏற்படுத்துவதற்கு அடித்தளம் இடுவதாகவே அமைகிறது. வரலாற்றை அறியாமல் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவோரை ஜனாதிபதி தொல்பொருள் செயலணியில் இருந்து நீக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் கந்தசாமி ஜீவரூபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள குழப்பநிலைக்குக் காரணம் ஜனாதிபதியால் அமைக்கப்பட்டுள்ள கிழக்கு தொல்லியல் செயலணி.




இந்தச் செயணி குறிப்பாக பாரம்பரியமாக தமிழர்கள் வாழ்ந்த நிலங்களையும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்துக்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க பிரதே சங்களைக் கபளீகரம் செய்யும் முயற்சியிலே ஈடுபட்டு வருகின்றது. இச் செயற்பாடுகள் மீண்டும் ஓர் இன முரண்பாட்டை ஏற்படுத்துவதற்கான சாத்தியமாகாவே நாம் கருதுகின்றோம்.

திருகோணமலை மாவட்டத்தின் கன்னியா வெந்நீரூற்று, ஈச்சிலம்பற்று மலைநீதி அம்மன் ஆலயம், தற்போது திருக்கோணேஸ்வரர் ஆலயம் என்று இவர்களால் தமிழர்களின் வரலாற்றை மறைக்கின்ற அழிக்கின்ற செயல் நடந்தேறி வருகின்றன. பொய் ஆதாரங்களைத் தொடர்ந்து கதைகளாகப் புனைந்து பரப்பி வருகின்றனர். வரலாற்றுச் சிறப்பு மிக்க தெட்சண கைலாயம் என திருஞான சம்பந்தரால் பாடல் பாடப்பட்ட பல்லவர் காலத்து திருத்தளமான திருக்கோணேஸ்வரர் ஆலயம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது இதற்கான பல ஆதாரங்கள் எம்மிடம் மட்டுமல்ல உலகில் உள்ள பல நாடுகளில் உள்ளன. மீண்டும் இழப்புக்களைச் சந்திப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை. அனைத்து முரண்பாடுகளையும் இழப்புக்ளையும் மறந்து தமிழ் மக்கள் வாழுகின்ற இன்றைய சந்தர்ப்பத்தில் மீண்டும் ஓர் இன முரண்பாட்டை ஏற்படுத்தும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது - என்றார். (ப)

## ஐக்கிய மக்கள் சக்திக்கு யாழில் 3 ஆசனங்களாம்

*சொல்கின்றார் கணேஸ்வரம் வேலாயுதம்*

யாழ்ப்பாணம், ஜூலை 14

ஐக்கிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாணத்தில் மூன்று ஆசனங்கள் கிட்டும். நான் வெற்றிபெறும் பட்சத்தில் நிச்சயமாக நாடாளுமன்ற சம்பளத்தைப் பெறப் போவதுமில்லை. சொகுசு வாகனப் பெர்மிட்டையும் எடுக்கப் போவதுமில்லை. அப்பணத்தைப் பெற்று பொதுமக்களுக்காக செலவு செய்யப் போகின்றேன் இவ்வாறு தெரிவித்தார் யாழ் மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் முதன்மை வேடப்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் மக்களுக்குச் சொந்த செலவில் சேவை செய்துவிட்டு வந்துதான் தேர்தலில் நிற்கிறோம். ஆனால் மக்களுடைய வாக்குகளை எடுத்துச்சென்று சகல வரப்பிரசாதங்களையும் அனுபவித்துக் கொண்டு மக்களுக்கு எவையுமே செய்யாதவர்களுக்கு வாக்குகள் வழங்குவதில் எந்தப் பயனுமில்லை. ஏமாற்றி வாக்குகளை பெற்றுக்கொள்ளும் வேட்பாளர்களுக்கு நீங்கள் இம்முறை ஏமாந்து வாக்குகளை அளிக்க வேண்டாம். நீங்கள் ஒவ்வொரு தேர்தல்களிலும் பிழையானவர்களையும் தகுதியில்லாதவர்களையும்தான் தெரிவுசெய்து கொண்டு இருக்கிறீர்கள். இந்தத் தவறைத் தொடர்ந்து செய்யாதீர்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டிருந்த இனவாதக் கட்சிகள் எல்லாம் வெளியேறி விட்டன எனவும் சஜித் அணியில்தான் இனவாதக் கட்சிகள் உள்ளன என்றும் கூறுகின்றனர். - என்றார். (ம)

## தயாசிறியின் வெற்றி இம்முறை சந்தேகம்

*பிரசன்ன ரணதுங்கவிடம் கூறினாராம் பெர்னாண்டோ*

கொழும்பு, ஜூலை 14

சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர, எதிர்வரும் பொதுத்தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் வெற்றிபெறுவது சிரமம் என்று அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ பிரசன்ன ரணதுங்கவிடம் தெரிவித்தார் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, குருநாகல் மாவட்டத்திற்கு சென்று இரண்டு அல்லது மூன்று கூட்டங்களில் உரையாற்றினால், தயாசிறி ஜயசேகரவுக்கு மீதமிருக்கும் விருப்பு வாக்குகளும் கிடைக்காமல் போகும் என அவர் தெரிவித்துள்ளாராம். அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகரவும் பகிரங்கமாக ஒருவரை ஒருவர் பொது மேடைகளில் விமர்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பெண்களின் அரசியல் பிரவேசம் அவசியம் என்பவர்கள் அவர்களை சுயாதீனமாக இயங்க அனுமதிக்கவேண்டும்

## மாமனிதர் ரவிராஜின் மனைவி சசிகலா ஆதங்கம்

கொழும்பு, ஜூலை 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களின் பெண் வேட்பாளர் என்ற வகையில் கட்சியின் மகளிர் அணி உட்பட சகல பெண்கள் அமைப்புகளின் ஆதரவைக் கோரும் எனக்கு சிலர் தடையை ஏற்படுத்துவது வேதனை அளிக்கிறது. பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை வழங்க முன்வந்த ஒருத்தியை சிலர் சர்வாதிகாரம் சார்ந்த போக்குடன் கையாள முற்படுகின்றமை வேதனை தரும் விடயமாகும். பெண்கள் அரசியலுக்கு வரவேண்டும் என நினைக்கிறோம்; பெண்களை மதிக்கிறோம் என்று பேசுபவர்கள் உண்மையில் பெண்களை சுயாதீனமாக இயங்க அனுமதிக்க வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் மாமனிதர் ரவிராஜின் மனைவியும் கூட்டமைப்பின் வேட்பாளருமான சசிகலா.



இது தொடர்பில் அவரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழரின் அரசியல் ஒற்றுமையை பிரதிபலிக்கும் ஓர் அமைப்பு என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்றே நான் கருதுகிறேன். அந்த ஒற்றுமை என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் இருக்க வேண்டுமென்று வாஞ்சிக்கிறேன். அந்த வகையில்தான் பரப்புரை நிகழ்வு களில் நான் பங்கேற்கிறேன். நான் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஒன்பது சகோதர வேட்பாளர்களுடனும் சேர்ந்து இயங்கவே விரும்புகிறேன். இது தொடர்பாக கட்சித் தலைமைக்கும் தெரியப்படுத்தியிருந்தேன்.

ஆயினும் நான் பங்கேற்கும் நிகழ்வு களை விளம்பரமாக்கி நான் தங்களுக்கு மட்டுமே ஆதரவாக பிரசாரம் செய்வது போன்ற பிம்பத்தை உருவாக்கி நான்ஏனைய வேட்பாளர்களுடன் பேணும் சுமுகமான உறவை சிதைக்க முயற்சிப்பது ஆரோக்கியமற்ற ஒரு விடயமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களின் பெண் வேட்பாளர் என்ற வகையில் கட்சியின் மகளிர் அணி உட்பட சகல பெண்கள் அமைப்புகளின் ஆதரவை கோரும் எனக்கு சிலர் தடையை ஏற்படுத்துவது வேதனை அளிக்கிறது. பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை வழங்க முன்வந்த ஒருத்தியை சிலர் சர்வாதிகாரம் சார்ந்த போக்குடன் கையாள முற்படு கின்றமை வேதனைதரும் விடயமாகும். இது எனக்கு மட்டுமல்ல என்னைப் பின்தொடர்ந்து வரும் பெண் அரசியல்வாதிகளுக்கும் அச்சுறுத்தலாக அமைந்து விடக்கூடும். அத்தோடு, எனக்கு ஆதரவு அளிக்க நினைக்கும் பெண்களுக்கும் இது ஒரு சவாலாகக் காணப்படுகிறது.

தமிழ்த் தேசிய நீக்க அரசியலை ஊக்குவிக்கும் முகமாக எந்தக் கூட்டத்திலும் நான் கலந்து கொள்ளவில்லை. தென்மராட்சி எனது மண். நான் அந்த மண்ணில் பிறந்தவள்;. என் மக்களை சுதந்திர மாக சந்தித்துக் கலந்துரையாடுகிறேன். அவர்களின் குறைகளை அறிந்து கொள்கிறேன். அவற்றை நிவர்த்தி செய்ய விரும்புகிறேன். எப்போதும் அப்படியே இருக்க விரும்பு கிறேன்.

பெண்கள் அரசியலுக்கு வர வேண்டும் என நினைக்கிறோம்; பெண்களை மதிக்கிறோம் என்று பேசுபவர்கள் உண்மையில் பெண்களை சுயாதீனமாக இயங்க அனுமதிக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும் - என்றுள்ளது. (ம-2)

# கொரோனா தீவிரமடைந்தாலும் பொதுத் தேர்தல் நடந்தே தீரும்

## மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறு ஹிருணிக்கா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

வைரஸ் பரவல் அதிகரித்தாலும் அரசாங்கத்தின் பொதுத் தேர்தலை நடத்தும் கொள்கையில் மாற்றம் ஏற்படாது. அதனால் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

இது தொடர்பில் தனது முகப்புத்தகத்தில் காணொலியொன்றை பதிவிட்டுள்ள அவர்,அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"கொவிட் 19 வைரஸ் பரவல் தொடர்பில் எதிர்க் கட்சி என்ற வகையில் அரசாங்கத்துக்கு பல தடவை எச்சரிக்கை விடுத்து வந்த போதிலும் , அவர்களது முறையற்ற செயற்பாடுகளினால் வைரஸ் பரவலின் இரண்டாம் அலைக்கும் நாம் முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

வைரஸ் பரவலின் இரண்டாம் அலை ஏற்பட்டால் . அது தொடர்பான செயற்பாடுகளுக்கு அரசாங்கத்திடம் போதிய நிதி இல்லை என்று சுகாதார அமைச்சர் தெரிவித்திருந்தார்.

ஆனால் கொரோனா நிதியத்துக்கு சர்வதேசத்தில் மட்டுமன்றி எமது நாட்டைச் சேர்ந்த பலராலும் நிதி வழங்கப்பட்டது. கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரையில் தேர்தலை நடத்த வேண்டாம் என்று நாங்கள் கோரிக்கை விடுத்து வந்த போது , ஆளும் தரப்பினர் நாங்கள் தேர்தலுக்கு பயந்தே இவ்வாறு கூறுகிறோம் எனத் தெரிவித்து வந்தனர்.

நாங்கள் தேர்தலுக்கு எப்போது என்றாலும் முகங்கொடுக்க தயாராகவே இருக்கின்றோம். ஆனால் நாட்டு மக்களின் வாழ்க்கையை சவாலுக்குட்படுத்தி தேர்தலை வெற்றிக் கொள்ள வேண்டிய தேவை எமக்கில்லை.

தற்போது மீண்டும் வைரஸ் பரவல் தீவிரமடைந்து வருகின்றது. தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை கருத்திற்கொண்டு நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தங்களது பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வெற்றியே மலையகத்தின் வெற்றி

## திகாம்பரம் பரப்புரை

மலையகம், ஜூலை 14

தமிழ் முற்போக்கு கூட்டணியின் வெற்றியே மலையகத்தின் வெற்றி. எனவே, கூட்டணி வேட்பாளர்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மலையக மக்களை பாதுகாப்பதற்கு நானும், மனோவும், ராதாகிருஷ்ணனும் இருக்கின்றோம்' என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

லிந்துலை மெராயா கெளலினா தோட்டத்தில் நேற்றுமுந்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தப் பரப்புரைக் கூட்டத்தில் திகாம்பரம் மேலும் தெரிவித்ததாவது:




'காணி உரிமை, தனிவீடு, உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு என மலையக மக்களுக்கு பலசேவைகளை நான் கடந்த நான்கரை வருடங்களில் செய்திருந்தாலும், திகாம்பரம் ஒன்றுமே செய்யவில்லை என பொய்யுரைத்து சிலர் வாக்குகேட்பதை காணமுடிகின்றது. என்னை விமர்சித்தே சின்னச் சின்ன வாண்டுகளெல்லாம் வாக்குக் கேட்கின்றன. அதுமட்டுமல்ல மலையகத்தை ஒரே நாளில் மாற்றியமைக்கப்போவதாகவும் கொக்கரிக்கின்றனர்.

யார் என்ன சொன்னாலும், எனக்கு எனது மக்களே முக்கியம். நான் உங்களில் ஒருவன். எனது மக்களுக்கு எவராவது துரோகம் செய்தால் அவர் நிம்மதியாகவாழ முடியாத நிலை ஏற்படும் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றேன்.

இன்று கண்டியில் இருந்து ஒருவர் வந்துள்ளார். திகாம்பரம் ஒழுங்காக அரசியல் செய்திருந்தால் அவர் வந்திருக்கமாட்டாராம். நான் கொழும்பில் சுகபோகம் அனுபவிக்கின்றேனாம். அப்படியானால் அவர் கண்டியில்பிச்சையா எடுக்கிறார்? எனது வெற்றியே மலையகத்தின் வெற்றி. மாற்று அணியினரை வெற்றிபெறவைத்தால் அது மலையகத்துக்கு ஏற்படும் தோல்வியாகும் - என்றார். (ம)

# முரளியின் ஆதரவு விமலுக்காம்

கொழும்பு, ஜூலை 14

இலங்கை துடுப்பாட்ட அணியின் முன்னாள் வீரர் முத்தையை முரளிதரன், கொழும்பில் பொதுஜன முன்னணி வேட்பாளர் விமல் வீரவன்சவுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

வீரவன்சவின் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக கடந்த வார இறுதியில் கொழும்பில் உள்ள தமிழ் வர்த்தர்களுடனான ஒன்றுக் கூடலை முரளிதரன் ஏற்பாடு செய்திருந்தார்.இதில் புறக்கோட்டையை மையமாகக் கொண்ட பல தமிழ் வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது தமிழ் வர்த்தகர்களின் பிரச்சினைகளுக்கு விமல் வீரவன்சவினால் தீர்வுகள் முன்வைக்கப்பட்டன என அவரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# இரு நாள்களில் 161 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 14

கடந்த 10ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் 161 தேர்தல் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளில் 17 முறைப்பாடுகள் தேசிய தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கும், 144 முறைப்பாடுகள் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையத்திற்கும் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் இதுவரை 2 ஆயிரத்து 781 முறைப்பாடுகள் மொத்தமாக கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

**கோணேசர் ஆலய பரிபாலன சபையினரால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட கோணேச்சர ஆலய வரலாறு காலத்தின் தேவை கருதி பிரசுரிக்கப்படுகின்றது.**



# புத்தருக்கு முன்னர் உருவானதே கோணேச்சரம் கோயில்!



ஈழநாட்டில் பண்டைக்காலந் தொடக்கம் பல சிவஸ்தலங்கள் இருந்து வருகின்றன. அவற்றுள் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் இரண்டும் ஈழ நாட்டின் இரு கண்கள் போல உலக இந்துக்களின் கவனத்திலிருந்து வருகின்றன. திருக்கோணேஸ்வரம் தட்சண கயிலாயம் என்று போற்றப்பட்டு வருகின்றது.

தட்சணகயிலாய புராணத்தில் கூறப்படுகின்ற வரலாறுகளிலிருந்து இதன் உண்மை புலப்படுகின்றது. கோணேசர் கோவில் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுச் சிறப்புக்களுடைய சிவஸ்தலம். இலங்கையில் வாழ்ந்து வரும் ஆதிசைவக் குடிமக்களின் பாரம்பரியமான வழிபாட்டுத்தலம். பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்துவரும் இந்துக்களின் வழிபாட்டுக்குரிய புனித் தலமாக திருக்கோணேஸ்வரம் இருந்து வருகின்றது. திருக்கோணேஸ்வரத்திலுள்ள இறைவன் பெயர் கோணேஸ்வரர் இறைவி பெயர் மாதுமையம்பாள். தீர்த்தம் பாபநாச தீர்த்தம் . தலவிருட்சம் கல்லால மரம். மூர்த்தி தலம் தீர்த்த விசேடங்களைக் கொண்டது கோணேஸ்வரம்.

கிறிஸ்துவுக்கு முன் ஆறாயிரம் ஆண்டளவில் இலங்கையை இராவணன் ஆண்ட வரலாறு இராமாயண காவியத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இராவணன் வழிபட்ட தலம் திருக்கோணேஸ்வரம் என்ற வரலாறு புராண இதிகாசங்களிலும் தேவாரங்களிலும் பேசப்படுகின்றன. இராவணன் தனது தாயாரின் வழிபாட்டுக்காக லிங்கத்தைப் பெறுவதற்கு இங்கு தவம் செய்தானென்றும் தட்சண கைலாயபதியாகிய கோணேசப் பெருமான் அவனுடைய தவத்திற்கிரங்கிக் காட்சி கொடுக்காததால் அகங்காரங்கொண்ட இராவணன் தென்கையிலையை வெட்டிப் பிளந்தான் என்ற வரலாற்றுக்கு எடுத்துக் காட்டாக கோணேசர் கோவிலுக்குப் பக்கத்திலேயே **இராவணன் வெட்டு** என்ற மலைப்பிளவு காணப்படுகின்றது.

**“இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல் மேல் தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும் ”** என்ற தேவாரப் பாடல் இதனை உறுதிப்படுத்துகின்றது. **“எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலரால்”** என்று ஞானசம்பந்தர் அருளிச் செய்த ஸ்தலத் தேவாரமும் இந்த வரலாற்றை உறுதிப்படுத்துகின்றது. இராவணன் தனது தாயாருக்கு அந்திமக் கிரியைகள் செய்வதற்காக உண்டாக்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க கன்னியா வெந்நீரூற்றுக்கள் ஏழும் திருக்கோணேஸ்வரத்திலிருந்து ஏழு கிலோமீற்றர் தூரத்தில் இருப்பதைக் காணலாம். இந்த வெந்நீரூற்றுக்களை இந்துக்கள் புனித தீர்த்தமாகக் கருதி அந்திமக் கிரியைகள் செய்வதற்கு பாரம்பரியமாகப் பயன்படுத்தி வருகின்றார்கள். சிறப்பு வாய்ந்த இந்தச் சிவஸ்தலத்திலிருந்து கோணேசர் கோவிலை கி.பி. 1624 ஆம் ஆண்டு போர்த்துக்கீசர் இடித்தழித்து அந்தக் கற்கோவிலிலிருந்த கற்களால் **பிரட்டறிக் கோட்டையைக்** கட்டியிருக்கின்றார்கள். கோட்டை வாசலில் இரட்டை மீன் இலச்சினையுடன் **“முன்னே குளக்கோட்டன் மூட்டுந்திருப்பணியை ”** என்று தொடங்கும் பாடல் பொறிக்கப்பட்ட கற்தூண்கள் இன்றும் காணப்படுகின்றன.

கோவில் தூண்கள் பல கோட்டையின் உட்புறத்தில் வைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன. சிற்ப சித்திரங்கள் பொறிக்கப்பட்ட கோவில் வாயிற் படிக்கற்கள் முதலியனவற்றைப் பயன்படுத்தி கோணேசர் கோவிலின் மேற்குப் பக்கத்தில் படகுகளை அணைக்கப் பயன்படுத்தும் மேடையைப் போர்த்துக்கீசர் கட்டியிருந்தார்கள்.

கோட்டைச் சுவரைப் பிரித்து ஆராய்ந்தால் கோணேசர் கோவில் வரலாற்றுச் செல்வங்கள் கிடைக்கும். கோணேசர் கோவிலை இடித்தழித்த போர்த்துக்கீசத் தளபதியாக கொன்ஸ்ரன்டைன்டிசா என்பவன் போர்த்துக்கல் அரசனுக்கு அனுப்பிய அறிக்கை ஒன்று லிஸ்பன் நகரத்திலுள்ள அஜுடா நூல்நிலை யத்தில் இருக்கின்றது. அந்த அறிக்கையில் (51ம் பக்கம் 40) மனுராசா அல்லது மாணிக்கராசா எனும் மன்னன் இலங்கையை ஆண்டான் என்றும் அவன் கி.மு. 1300ஆம் ஆண்டு கோணேசர் கோவிலைக் கட்டினான் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இலங்கையை அரசாண்ட போர்த்துக்கீசத் தளபதிகளின் பதிவேடுகளில் திருக்கோணேஸ்வரத்தை அழித்த கொன்ஸ்ரைன்டைன்டிசா வரைந்த படங்களும் கோவிலின் நீள அகல எல்லைகளும் குறிப்புகளும் காணப்படுகின்றன. அவனால் அழிக்கப்பட்ட ஆலயத்தின் பரப்பு தரப்பட்டிருக்கின்றது. கோவில் அமைந்த நிலத்தின் நீளம் 600 பாகம் அகலம் 80 பாகம் என்றும் அது ஒடுங்கி ஒடுங்கிச் சென்று 30 பாகமாக அமைந்திருந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கூற்றின்படி தற்போது ஆலயம் அமைந்திருக்கும் கோட்டைப்பகுதி முழுவதும் ஆலய புனித பிரதேசமாயிருந்தது என்பதை அறியலாம். எனவே இற்றைக்கு 4 நூற்றாண்டுகளுக்கு முன் இப்பொழுது பிரட்டறிக் கோட்டை அமைந்திருக்கும் நிலப்பரப்பு முழுவதும் கோணேசர் கோவிலுக்கு உரியதாக இருந்தது என்பதைப் போர்த்துக்கீசரின் பதிவேடுகள் உறுதிப்படுத்துகின்றன. கலாநிதி போல் பீரிஸ் என்பவர் எழுதிய இலங்கை என்னும் நூலின் இரண்டாம் தொகுதி 168ஆம் பக்கத்தில் கூறப்படுவ தாவது:

“கி.பி. 1624 ஆம் ஆண்டில் கோடை காலத்தில் (சித்திரை மாதம்) டீசார் என்பவன் கோணேசர் கோவிலை அழிக்கும் காரியத்தில் ஈடுபட்டான். கோணேசர் மலை பட்டணத்தோடு தொடர்புபட்டு கடலுக்குள் நீண்டு கிடக்கின்றது. அப்பகுதியில் மூன்று கோவில்கள் இருந்தன. ஒன்று மலையடிவாரத்திலும் அடுத்தது மலையின் நடுப்பகுதியிலும் இருந்தது. கடல் மட்டத்திலிருந்து 400 அடி உயரமான மலை உச்சியில் தான் மிகப் பிரபல்யமான மூன்றாவது கோவில் இருந்தது. இங்கிருந்த கோவிலை அழித்து முக்கோண வடிவமான கோட்டையைக் கட்டினார்கள்.”

போர்த்துக்கீச சரித்திர நூலாசிரியராகிய டீ.குவைறோஸ் பாதிரியார் எழுதிய நூலின் இரண்டாம் பாகம் 236ஆம் பக்கத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது.

“ கிழக்கின் ரோமாபுரியாக இவ் ஆலயம் விளங்குகின்றது. பூரிஜெகந்நாத் ஆலயத்திற்கும் இராமேஸ்வரத்துக்கும் போய் தரிசனம் செய்துவரும் யாத்திரிகர்களிலும் பார்க்க மிக அதிகமான யாத்திரிகர்கள் இவ் ஆலயத்தைத் தரிசித்து வருகின்றார்கள்.

திருகோணமலைத் துறைமுகத்தின் தரைப் பகுதியிலிருந்தும் கடலுக்குள் நீண்டிருக்கும் மலையின் மேல் இலங்கை மன்னர்கள் மூன்று ஆலயங்களைக் கட்டியிருந்தார்கள். அவற்றில் இரண்டு கோவில்கள் மலையின் இரண்டு அந்தங்களிலும் மற்றது இடை நடுவிலும் கட்டப்பட்டிருந்தன. கடலினுள் நீண்டிருக்கும் மலைப்பகுதியின் மிக உயரத்தில் இருந்த ஆலயமே இந்திய நாட்டு இந்துக்களினாலும் மிக முக்கியத்துவம் கொடுத்துப் போற்றி வணங்கப்பட்டு வந்த ஆலயம் ஆகும்.”

கி.பி. 436 ஆம் ஆண்டு மனுநீதிகண்ட சோழ மன்னனின் பரம்பரையில் வந்த வரராம தேவனின் மகனாகிய குளக்கோட்டு மன்னன் சோழ நாட்டிலிருந்து திருக்கோணமலைக்கு வந்து கோணேசர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தான் என்று யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. குளக்கோட்டு மன்னன் செய்த மாபெருந் திருப்பணிகளாகிய குளமும் கோட்டமும் (கோவில்) எடுத்த சிறப்பினால் அவனுடைய இயற்பெயர் மறைந்து குளக்கோட்டன் என்ற சிறப்புப் பெயரே நிலைத்து விட்டது. குளக்கோட்டு மன்னன் கோணேசர் கோவிலில் புனருத்தாரணத் திருப்பணிகள் செய்து கோவிலை பரிபாலனம் செய்வதற்காக மருங்கூரிலிருந்தும் காரைக்காலிலிருந்தும் குடிமக்களைக் கொண்டு வந்து குடியமர்த்தினான்.

(மறுபக்கம் பார்க்க)

*(தொடர்ச்சி)*

கோவிலைத் தயாரிப்பதற்கு நிரந்தர வருவாயை ஏற்படுத்துவதற்காக 2700 அவணம் நெல்விதைப்புத் தரையை உண்டாக்கினான். இந்த விளைநிலத்தை நீர் பாய்ச்சுவதற்காக அல்லைக்குளம் வெண்டரசன்குளம் கந்தளாய்க்குளம் ஆகியவற்றைக் கட்டுவித்தான்.

இம் மாபெருந் திட்டத்தை தர்மநெறி தவறாமல் பரிபாலிப்பதற்காக கனகசுந்தரப் பெருமான் தனியுண்ணாப் பூபால வன்னிமைகளாகிய முகாமைகளை நியமித்தான். கோவிற் பூசைகளைச் சிறப்பாக நடத்துவதற்கு வேதநாயக முதன்மை சைவநாயக முதன்மை என்ற குருமாரை நியமித்தான். கோவிற் தொழும்பாளர்களை நியமித்து அவரவர்களுக்குரிய கடமைகளையும் கொடுத்து மானியங்களும் வழங்கினான். இந்த விபரங்கள் யாவும் கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கிறது. ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருக்கோணேஸ்வரத்துக்குத் தேவாரத் திருப்பதிகம் பாடியருளினார். '**நிரை கழலரவம்**' என்ற தேவாரத்தை முதலாகவுடைய பத்துப் பாடல்கள் அவரால் பாடப்பட்டிருக்கின்றன.

திருநெய்த்தனம் என்ற திருத்தலத்தைத் திருநாவுக்கரசர் பாடும் போது தக்காரடியார்க்கு என்ற திருத்தாண் டகத்தில் **"தெக்காரும் மாகோணத்தானே"** என்று திருக்கோணேஸ்வரத்தை நினைத்துப் பாடியுயருளினார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய நிறை காட்டானே நெஞ்சத்தானே என்ற ஊர்த்தொகைத் திருப் பதிகத்தில் **"மறைகாட்டானே திருமாந்துறை யாய்மா கோணத் தானே"** என்று திருக்கோணேஸ்வரத்தை நினைத்துப் பாடியுள்ளார்.

பட்டணத்துப் பிள்ளையார் பாடியருளிய திருவே கம்பமுடையார் திருவந்தாதியில் ,
**"முக்கோணம் தொடர்கடுக்கை மலையன்வாழ் திருவாலங்காடு ஏகம்பம் வாழ்த்துமினே"** என்று திருக்கோணேஸ்வரத்தை முக்கோணம் என்று வைத்துப் பாடியுள்ளார்.

மூன்று கோணமாய் அமைந்த மலைகளையுடைய காரணத்தால் இத்தலம் திரிகோணமலை எனவும் வழங்கி வருகின்றது. திரிகோணமலை அந்தாதி என்ற நூலை திரு. சி. ஆறுமுகப் புலவர் இத் தலத்திற்குப் பாடியுள்ளார். தட்சிண கயிலாய புராணம் திருக்கோணாசல புராணம் தட்சண கயிலாய மான்மியம் திருகோணாசல வைபவம் கோணேசர் கல்வெட்டு என்பன இத் தலத்துக்குரிய பழைய நூல்கள். பிற்காலத்தில் இத் தலத்தைப் பற்றிய ஆய்வு நூல்களும் எழுதப்பட்டிருக்கின்றன. பெரிய புராணம் பாடியருளிய சேக்கிழார் சுவாமிகள் ஆழிபுடை சூழ்ந்தொ லிக்கும் ஈழந்தன்னில் என்ற பாடலில்,

**"மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்த செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடி"**

என்று திருக்கோணேஸ்வரத் தலத்தைப் பாடி நினைவுறுத்துகிறார். 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதசுவாமிகள் விலைக்குமேனியில் அணிக்கோவை மேகலை என்று தொடங்கும் திருகப்புகழிலே

**நிலைக்கு நான்மறை மகத்தான புசுரர்
திருக்கோ ணமலைத் தலத்தாறு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு புதியில் வருவானே**

என்று திருக்கோணேஸ்வரத்தை நினைந்துருகிப் பாடியுள்ளார்.

குருநமச்சிவாய தேசிகர் அருளிய நமச்சிவாய மாலையில் **"கோணமாமலையில் வாழும் கோதிலாஆதியேநீ ஆணிலைப் பெண்ணுமில்லை அத்தனே நமச்சிவாய"** என்று கோணேஸ்வரத்தைப் பாடியுள்ளார்.

சேர் எமேசன் ரெனற் என்பவர் எழுதிய இலங்கைச் சரித்திரத்தில்,
" கி.பி. 1639 ஆம் ஆண்டில் டச்சுக்காரர்கள் திருகோணமலையைக் கைப்பற்றி கோணேசர் கோவிலில் மிகுதியாகவுள்ள கற்களையும் தூண்களையும் இடித்து ஆலயத்தின் ஏனைய பொருட்களையும் எடுத்து கோட்டை கட்டப் பயன்படுத்தினார்கள். இங்குள்ள சில இடங்களுக்கு டச்சுப் பெயர்களையும் சூட்டி னார்கள். இவ்வாறு இவர்கள் கொள்ளையடித்து ஆலயத்தை சிதைத்து பொருட்களைச் சூறையாடியபோதிலும் இந்துக்கள் இவர்களுக்கு ஒளித்து மறைந்து இந்த இடத்தில் தங்கள் வணக்கத்தைச் செலுத்தி வழிபட்டு வந்தார்கள்." என்றுள்ளது.

போர்த்துக்கீசர் கோணேசர் கோவிலை இடித்து அழித்த காலத்தில் ஆலயத்திலிருந்த குருமாரும் பக்தர்களும் ஆலய விக்கிரகங்கள் அந்நியருடைய கையில் அகப்படாமல் எடுத்துச்சென்று நிலத்தை அகழ்ந்து அவற்றினுள்ளும் கிணறு குளங்களிலும் புதைத்து மறைத்து வைத்திருந்தார்கள். அவற்றில் பிள்ளையார், கோணேசர் ,மாதுமையம்பாள் போகசக்தி சந்திரசேகரர் அன்னம் என்பன இறைவனுடைய திருவருட்செயலால் 1950 ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்டன.



மூன்று கோணமாய் அமைந்த மலைகளையுடைய காரணத்தால் இத்தலம் திரிகோணமலை எனவும் வழங்கி வருகின்றது. திரிகோணமலை அந்தாதி என்ற நூலை சி. ஆறுமுகப் புலவர் இத் தலத்திற்குப் பாடியுள்ளார். தட்சிண கயிலாய புராணம். திருக்கோணாசல புராணம். தட்சண கயிலாய மான்மியம் திருகோணாசல வைபவம் கோணேசர் கல்வெட்டு என்பன இத் தலத்துக்குரிய பழைய நூல்கள். பிற்காலத்தில் இத் தலத்தைப் பற்றிய ஆய்வு நூல்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

அதன் பின்னர் தற்போது இருக்கும் புதிய ஆலயம் கட்டப்பட்டு இம் மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பெற்று 1963 ஆம் ஆண்டு புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. 25.1.1981 இல் மேலும் பல திருப்பணி கள் செய்யப்பெற்று புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கின்றது.

போர்த்துக்கீசர் இடித்தழித்த ஆலயத்திலிருந்த சில விக்கிரகங்களில் சிதைந்த பகுதிகள் மலையடிவாரத்தில் கடலினுள் கிடக்கின்றன. அவற்றில் ஊனப்பட்ட லிங்கம் ஸ்ரீநாராயணமூர்த்தி, மகாலட்சுமி கோஷ்டத்திலுள்ள சிதைந்த பகுதிகள் சிலாசாசனச் சிதைவுகள் என்பன ஆலயத்தில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1890 ஆம் ஆண்டு மத்திய மாகாண அரசாங்க அதிபராயிருந்த ஹென்றி டபிள்யூ. கேவ் என்பவர் எழுதிய இலங்கை என்னும் சரித்திர நூலில் திருக்கோணேஸ்வரத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். திருக்கோண மலையில் கடலுக்குள் நீண்டிருக்குங் குன்று மிகப் பழமை வாய்ந்ததும் மனத்தைக் கவரக்கூடிய வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்டதுமாகும். குறிப்பிட்ட குன்று கடலினுள்ளிலிருந்து எழுந்து 400 அடி உயரத்தில் அழகுற நிமிர்ந்து நிற்கின்றது. இந்துக்களின் வரலாற்றுச் செல்வங்களைக் கொண்டதாக விளங்குகின்றது.

புத்தர் பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே இந்துக்கள் இதை புனித இடமாகப் போற்றி வந்துள்ளார்கள். தங்களைப் பிராமணர் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு சாரார் (ஆரியர்) தென்னிந்தியக் கலைச் சிற்பங்களைக் கொண்டதாக விளங்குகின்ற தூபி/கோபுரம் என்பவற்றையுடையதாக ஆலயங்களைக் கட்டியிருந்தார்கள். இவ் ஆலயம் ஆயிரங்கால் மண்டபத்தையும் கொண்டிருந்தது. போர்த்துக்கீசர் இவ் ஆலயத்தினை இடித்தழித்த பின் அந்த இடம் வெற்றிடமாகக் காட்சியளித்தது.

இதனைப் பார்த்தால் யாரும் வருத்தப்படாமல் இருக்க முடியாது. ஒரு சிறு காரணமும் இல்லாமல் இவ் ஆலயம் அழிக்கப்பட்டு விட்டது. எனினும் இந்துக்கள் அந்த வெற்றிடத்தை சிவ வழிபாட்டுத் தலமாக மதித்து வழிபட்டு வருகின்றார்கள். தெய்வ நிந்தனைக்குரியதான செயலை 17ம் நூற்றாண்டில் போர்த்துக்கீசர் செய்த போதிலும் இன்னமும் அந்த இடம் புனிதமும் மேன்மைக்குரிய வழிபாட்டுத் தலமாகவும் இருந்து வருகின்றது. போர்த்துக்கீசர் ஒல்லாந்தர்களாகிய அந்நியராட்சிக் காலத்தில் தற்போதுள்ள பிரட்டறிக் கோட்டை

அவர்கள் வசமிருந்ததால் இந்துக்களின் மத சுதந்திரமும் வழிபாட்டுச் சுதந்திரமும் மறுக்கப்பட்டு வந்தன. பிரித்தானிய ஆட்சியாளர்கள் திருக்கோணேஸ்வ ரத்தின் தொன்மையையும் தெய்வீகச் சிறப்பையும் உணர்ந்து இந்துக்களுக்கு மதச் சுதந்திரத்தையும் வழிபாட்டுச் சுதந்திரத்தையும் வழங்கியிருந்தார்கள்.

திருக்கோணேஸ்வரத்தில் அந்நியர்கள் செய்த அனர்த்தங்களுக்கும் அட்டூழியங்களுக்கும் உரிய பிரதி பலனை அனுபவித்து விட்டார்கள். மதவழிபாடு அரசியற் சூதாட்டங்களுக்கும் பொருட் சூறைகளுக்கும் அப்பாற்பட்டது.

யாராயிருந்தாலும் எந்த வழிபாட்டுத் தலமாயிருந்தாலும் புனித ஆலயங்களுக்கு ஊனம் விளைவிப்ப வர்கள் இன்னலை அனுபவித்தே தீர வேண்டும். இரண்டாவது உலக மகா யுத்தத்தில் திருக்கோணமலை யின் மீது ஜப்பானியர் குண்டுகளை அள்ளி வீசி னார்கள். கோணேசர் மலையில் நிறுவப்பட்டிருந்த விமான எதிர்ப்புப் பீரங்கிகளுக்கு இலக்கு வைத்து வீசப்பட்ட குண்டுகளில் ஒன்றேனும் கோணேசர் மலையில் விழவில்லை என்பது தெய்வீக அற்புதமாகும்.

கடலினடியில் ஆராய்ச்சி செய்த சேர் ஆதர் சி கிளாக், மைக் வில்சன் ,ரொட்னி ஜொங்க்லஸ் ஆகியோர் மிகப் பழமை வாய்ந்த ஆலயம் கடலின் அடியில் அமிழ்ந்திருப்பதாகக் கண்டறிந்தார்கள். பிர மாண்டமான மணி விளக்குகள் தூண்கள் கோவிற் தளங்கள் என்பன கடலினடியில் இருப்பதாகப் பத்திரிகையில் பிரசுரித்தார்கள். இந்தக் கோவில் கடற்கோளினால் அழிந்த கோவிலாக இருக்கலாம். குளக்கோட்டு மன்னன் திருப்பணி செய்த கோணேசர் கோவில் இருந்த காலத்தில் திருக்கோணமலை மாவட்டத்தில் கங்கைவேலி சிவன் கோவில், திருமங்கலாய் சிவன் கோவில், அகஸ்தியர் ஸ்தாபனம் , சிவன் கோவில் என்பனவும் சிறப்புற்று விளங்கின.

தற்போது கோணேஸ்வரத்தைச் சூழ்ந்து ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில் ,ஆலடிப் பிள்ளையார் கோவில், வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில், முத்துக்குமார சுவாமி கோவில் ,விஸ்வநாதசுவாமி சிவன் கோவில், வீரகத்திப் பிள்ளையார் கோவில், மாரியம்மன் கோவில் ,ஸ்ரீ கிருஷ்ணன் கோவில், சமாதுப்பிள்ளையார் கோவில், சனீஸ்வரன் கோவில், கும்பத்துமால் கருமாரியம்மன் கோவில், நடேசர் கோவில் முதலிய பல ஆலயங்கள் நிறைந்து திருக்கோணமலை தெய்வத் திருவருட் சிறப்போடு விளங்குகின்றது.

ஆதியந்தமில்லா இறைவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் இந்துக்களின் புனிதத்தலம் திருக்கோணேஸ்வரம். இலங்கைவாழ் இந்துக்களாலும் சிறப்பாகத் திருக்கோணமலைச் சைவப் பெருமக்களாலும் புனராவர்த்தனத் திருப்பணிகள் செய்து அமைக்கப்பட்ட கோணேசர் கோவிலை இப்போது தரிசிக்கும் பாக்கியம் பெற்றுள்ளோம்.

கருவறையில் காசியிலிருந்து கொண்டு வரப்பெற்ற சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கின்றது. நிலத்திலிருந்து கிடைத்த மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானும் ஏனைய பரிவார மூர்த்திகளும் ஸ்தாபிக்கப்பட்டு குளக்கோட்டு மன்னனுடைய காலத்தில் நடை பெற்று வந்த

மகோற்சவங்களும் பாபநாசத் தீர்த்தோற்சவமும் தெப்பத் திருவிழாக்களும் சிவராத்திரியையடுத்து தொடர்ந்து ஐந்து நாட்கள் நகர்வலமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இத் தலத்தில் நடைபெற்ற அற்புதங்களை தலபுராணங்கள் வாயிலாக அறியலாம். திருகோணமலை மாவட்டம் கோணேசப் பெருமானுடைய திருவரு ளாட்சிக்கு உட்பட்டது. அதனால் திருகோணமலை மக்களின் வாழ்க்கையில் இந்துசமயப் பண்பாடு, பழக்கவழக்கம், கலை, கலாசாரம் என்பன பின்னிப் பிணைந்து கிடப்பதைக் காண்கிறோம்.

# போலித் தகவல்களை பரப்பினால் கடுமையான சட்ட நடவடிக்கை

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன எச்சரிக்கை



**கொழும்பு, ஜூலை 14**
**போலித் தகவல்களை பரப்பும் நபர்களுக்கு எதிராக கடுமையாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என, பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் அரச ஊழியர்களுக்கு தொடர் விடுமுறை என பரவிய போலி தகவல் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளிகள் தொடர்பில் போலியான தகவல்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன.

சமூக வலைத்தளம் ஊடாக பல்வேறு போலித் தகவல்களை பரப்பும் நபர்கள் தொடர்பில் குற்ற விசாரணைத் திணைக்களம் தீவிரமாக கண்காணித்து வருகிறது.

கொரோனா தடுப்பு மையம் மற்றும் அரச தகவல் திணைக்களத்தினால் வெளியிடும் தகவல்களை மாத்திரம் நம்புமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி1)

சுழிபுரத்தில்

# கஞ்சா மூடைகளுடன் இருவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூலை 14
கஞ்சா மூடைகளைத் துவிச்சக்கரவண்டி யில் எடுத்துச்சென்ற இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என வட்டுக் கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் புலனாய்வுத்துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சுழிபுரம் மேற்கில் சந்தேகத்துக்கிடமான முறையில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த இருவரை பொலிஸார் மறித்து சோதனை மேற்கொண்டபோதே அவர்களிடமிருந்து 124 கிலோ நிறையுடைய 2 மூடை கேரளாக் கஞ்சா மீட்கப்பட்டுள் ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் சுழிபுரம் தெற்குப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் மேலதிக விசாரணைகள் நடந்து வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளணர். (ரி3-25,26)

# உலகம் முழுவதும் ஒரே நாளில் 2 லட்சம் பேருக்குத் தொற்று!



சர்வதேச ரீதியில் கடந்த 24 மணிநேரத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 2 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, பிரேசில், இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் 58 ஆயிரத்து 349 பேரும் பிரேசிலில் 25 ஆயிரத்து 364 பேரும் இந்தியாவில் 29 ஆயிரத்து 108 பேரும் தென்னாபிரிக்காவில் 12 ஆயிரத்து 58 பேரும் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரி1)

# ரயில் நிலையம் மூடல்

கொழும்பு, ஜூலை 14
காலி, ஹபராதுவ பகுதியில் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளருடன் உனவட்டுன ரயில் நிலைய அதிபர் தொடர்புகளை பேணியுள்ளமையால் உனவட்டுன ரயில் நிலையம் நேற்று தற்காலிகமாக மூடப்பட்டது.

ரயில் நிலைய அதிபர் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், அவரை 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை உனவட்டுன ரயில் நிலையத்திற்கான கிருமி நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதுடன், பதில் ரயில் அதிபரை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ரி1)

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி நாளை புதன் காலை 8மணியிலிருந்து மாலை 5மணி வரை **யாழ்.மாவட்டத்தில்** கெருடாவில், கனகம் புளியடி, முத்துமாரியம்மன் கோயில் புத்தூர் வீதி, மட்டுவில், கல்வயல், கல்வயல் மாணாவள் வீரகேணி, நுணாவில் ஒரு பகுதி, புன்னாலைக்கட்டுவன், ஊரெழு, குரும்பசிட்டி, வாகையடி, அச்செழு ஆகிய இடங்களிலும்,

**வவுனியா மாவட்டத்தில்** தவசிக்குளம் கிராமம், ஜோசப் முகாம், SFHQ Vanni இராணுவ முகாம், விமானப்படை இராணுவ முகாம், விமானப்படை முகாம் றேடார், கிறிஸ்தவகுளம் ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில்** காலை 9.30 மணியிலிருந்து மாலை 5மணிவரை கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய இடங்களிலும், **மன்னார் மாவட்டத்தில்** காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரை சீனத்துறை முகம், வங்காலை ஒரு பகுதி, முள்ளிப்பழம், தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன் கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

# இன்றைய நாள்

**மேடம்**: எதிலும் கவனம் தேவை. வியாபாரத்தில் பணியாட்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். அலுவலகத்தில் அவசரப்படாமல் சிந்தித்துச் செயல்படுவது நல்லது.

**இடபம்**:உங்களை எதிர்ப்போரிடம் சுடக் கனிவாக பேசி சாதிப்பீர்கள். பிள்ளைகளால் அந்தஸ்து உயரும். உறவினர்களுக்கு உதவி செய்வீர்கள். பொது நல விஷயங்களில் ஈடுபடுவீர்கள்.

**மிதுனம்**: சக ஊழியர்களால் சிறு சிரமங்கள் ஏற்படக்கூடும். கலைஞர்களுக்கு வெற்றிவாய்ப்பு அதிகரிக்கும். பெண்கள் தொட்டது துலங்கும். பிள்ளை கள் நலனில் அக்கறை கொள்வது நல்லது..

**கடகம்:** முன்னேற்றப் பாதையில் அடிஎடுத்து வைப்பீர்கள். வாகனங்கள் ஓட்டும் போது கவனம் தேவை. பெண்களுக்கு எதிலும் வீண் கவலை உண்டாகும். நீங்கள் முன்பிருந்த பிரச்சினைகளிலிருந்து மீண்டு வருவீர்கள்.

**சிம்மம்:** வியாபாரிகளுக்கு நீண்ட நாளாக இருந்த பிரச்னைகள் தீரும். அலுவலகத்தில் சகஊழியர்களின் குடும்ப விஷயங்களில் தலையிட வேண்டாம்.

**கன்னி:** அலுவலகத்தில் யாரைப் பற்றியும் புறம் பேச வேண்டாம். வியாபாரத்தில் புது முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். பெண்கள் எதிலும் கவனமுடன் செயல்பட வேண்டியிருக்கும்.

**துலாம்:** உத்யோகஸ்தர்கள் நிலுவைப் பணிகளை முடித்து மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவர். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம்:** கூடுதல் முயற்சியால் வருமானம் அதிகரிக்கும். மற்றவர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு**:கணவன் மனைவி இடையே ஒற்றுமைகூடும். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவியை பெறுவீர்கள்.

**மகரம்:** உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கூட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நல்ல லாபம் உண்டு. அலுவலகத்தில் கலகலப்பான சூழல் உருவாகும்.

**கும்பம்**சொந்தத் தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பர். உறவுகளில் இருந்த மனக்கசப்புகள் மாறும். அலுவலக பணிகளை செய்து முடிப்பீர்கள்.

**மீனம்:** வெளிநாட்டில் உள்ள நெருங்கிய உறவினரிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும். அலுவலக ரீதியாக மேற்கொள்ளும் பயணத்தில் புதிய விஷயத்தை கற்றுக் கொள்வீர்கள்.

# அநுர, ஷானி அபேசேகர நீதிமன்றில் ரிட் மனுக்கள்


## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர் திரு. சுரேந்திரன் அவர்களின் அன்பு மாமனார் புலவர்
**முத்தையா இராசரத்தினம்**
அவர்கள் 12.07.2020 அன்று காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம்**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரும் கலைப் பீடத்தின் ஆங்கில மொழித் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளருமான **கலாநிதி தி. கருணாகரன்** அவர்களது அன்புத் தந்தையாரான
திருவாளர் **கந்தையா திருநாவுக்கரசு**
(முன்னாள் மேற்பார்வையாளர், இரசாயனக் கூட்டுத்தாபனம், பரந்தன்)

அவர்கள் நேற்று 13.07.2020 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார் என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் உசன் கந்தசாமி ஆலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி **சதாசிவம் தங்கமணி**

திதி: நவமி (14.07.2020)

மலர்வு 10.07.1946 — உதிர்வு 27.06.2019



எங்கள் வீட்டிற்கு ஒளியூட்டிய குத்துவிளக்கு அணைந்து இன்று ஓராண்டு என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாவற்காடு, வரணி.
077 968 8316

ஆ.சதாசிவம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்) மற்றும் குடும்பத்தினர்

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
**யோகேஸ்வரி முருகானந்தா**
(பேபியக்கா)
(பிரம்படிலேன், கொக்குவில்)
(அரச உத்தியோகத்தராக கம்பளை நீதிமன்றம், கொழும்பு துறைமுக ஆணைக்குழு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், யாழ். சிறுவர் நன்னடத்தை திணைக்களம், யாழ்.தொழில்நுட்ப கல்லூரியில் வருகை விரிவுரையாளராக கடமையாற்றியவர்)

தோற்றம் 17.08.1945 — மறைவு 14.07.2015

கல்வியில் சிறந்து விளங்கினீர்கள்
அரச தொழிலில் உங்கள் கடமையை சரிவர செய்தீர்கள்
பத்து சகோதர சகோதரிகளையும் அன்புடன் அரவணைத்தீர்கள்
அயலவர், உறவினர்களை அன்புடன் ஆதரித்தீர்கள்
பெற்றோரை யுத்த காலத்திலும் கடைசிக் காலத்தை
சிறப்பாக வாழ உங்களால் முடிந்தளவு கடமையை செய்தீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்.

70, பிரம்படி லேன், கொக்குவில்.

கணவர், சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள் மற்றும் உறவினர்.
தகவல்: ந. [illegible]ராஜா - 077 755 5061


மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

அரசியல் பழிவாங்கல் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் முற்படுமாறு தமக்கு விடுக்கப்பட்ட உத்தரவை மீளப்பெறுமாறு கோரி இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவன்காட் நிறுவனத்தை அடிப்படையின்றி கையக்கப்படுத்தியதன் ஊடாக இழப்பு ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் நிசங்க சேனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததை யடுத்து, குறித்த விடயம் தொடர்பாக சாட்சியமளிக்க அநுரகுமார திஸாநாயக்க ஜுன் மாதம் ஆணைக்குழுவில் முன்னிலையானார்.

அவன்காட் நிறுவனத்தை தான்தோன்றித்தனமாக கையகப்படுத்தியதால் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து நிசங்க சேனாதிபதி முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்துகின்றது.

இந்த முறைப்பாடு தொடர்பில் சாட்சியம் பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, அர்ஜுன ரணதுங்க, பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட 17 பேருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (து)

## 150 ஆசனங்கள் கிடைக்குமாம்
### கூறுகின்றார் ரணதுங்க

கொழும்பு, ஜுலை 14

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 150 ஆசனங்களை பெற்றுக்கொள்ளும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பியகமவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவர நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரம் தேவை. 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்திலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு எட்டு ஆசனங்கள் கிடைத்தன. கடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 97 இடங்களை பெற்றுக்கொண்டது. தற்போது 150 இடங்களைப் பெற்றுக்கொள்ள கம்பஹா மக்கள் பொதுத் தேர்தலில் மேலும் ஐந்து உறுப்பினர்களை நாடாளுமன்றுக்கு அனுப்ப வேண்டும் - என்றார். (து)

## தங்காலையில் கொரோனா தொற்றாளர் அடையாளம்

கொழும்பு, ஜுலை 14


கொரோனா தொற்றுக்குள்ளான நபர் ஒருவர் தங்காலை பட்டிபொல பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்த நபர் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றியவர் என காலி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அவருக்கு நெருக்கமாகச் செயற்பட்ட உறவினர்கள் உட்பட 7 பேரும், வர்த்தக நிலையங்கள் இரண்டின் உரிமையாளர்கள் உட்பட12 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர் விடுமுறையில் கடந்த 5 ஆம் திகதி தங்காலையில் உள்ள அவரது வீட்டுக்கு வந்துள்ளார். அவர் பல நாள்களாக நகரின் பல இடங்களுக்குச் சென்றுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இதன் காரணமாக அவர் பயணம் செய்த இடங்களில் இருந்த நபர்களை கண்டுபிடித்து தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை ஏற்படும் என எச்சரிக்கப்பட்டிருந்த நிலை யில், தற்போது பல இடங்களில் கொரோனா நோயாளி கள் அடையாளம் காணப்படுகின்றனர். இதன் கார ணமாக பொதுமக்கள் கடும் அச்சத்தில் உள்ளனர் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ரி2)

## இராணுவ வீரர்களுக்கு கொரோனா



### கந்தளாயில்...

கொழும்பு, ஜுலை 14

கந்தளாய் அக்போபுர பகுதியைச் சேர்ந்த இராணுவ வீரரொருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் கடமையாற்றியவர் என்று கந்தளாய் பிராந்திய வைத்திய அத்தியட்சகர் அலுவலகம் அறிவித்துள்ளது. அவர் கந்தகாடு இராணுவ நிலையத்தில் கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணி நிலையிலே கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார் எனவும் சுகாதார வைத்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

குறித்த இராணுவ வீரர் விடுமுறையில் தனது வீட்டுக்குச் சென்ற நிலையிலே காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவ்வேளை அவர் கொரோனா தொற்றுக்குள்ளானது கண்டறியப்பட்டுள்ளது. அவருடன் தொடர்புகளைப் பேணிய மற்றும் அவர் சென்ற இடங்களைக் கண்டறிந்து தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதுடன் அவரின் மனைவி மற்றும் பிள்ளைகளை தனிமைப்படுத்தி உள்ளோம் என பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (ரி1)

### கண்டியில்...

கண்டி, ஜுலை 14

கண்டி குண்டசாலை பிரதேசத்தில் இராணுவ அதிகாரி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து, அவரது குடும்பத்தினர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அர்ஜுன திலக்கரட்ண தெரிவித்துள்ளார்.

இந்த இராணுவ அதிகாரி கடந்த 25ஆம் திகதி விடுமுறையில் வீட்டுக்குச் சென்று அங்கு 11 நாள்கள் தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில், அவரது வீடு அமைந்துள்ள பிரதேசத்தில் அவருடன் பழகிய நபர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் 40 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்[illegible]னர் என்றும் தி[illegible] மேலும் கு[illegible] (ரி2)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ 1986 இல் பிறந்த, நட்சத்திரம் - பூராடம், உயரம் - 6'2" தகைமை - க.பொ.த உயர்தரம் தொழில் - சாரதி பில்டிங் கென்ரக் மணமகனுக்கு க.பொ.த சாதாரணம் படித்த மணமகள் தேவை.

**077 871 4265**

**வேலையாள் தேவை**

கைதடி சந்தியிலுள்ள **PS Food City**க்கு கைதடி, நாவற்குழியை சேர்ந்த நன்கு படித்த பணிப்பெண்கள் தேவை. 19வயது - 28 வரையானோர் தொடர்பு கொள்ளலாம். (நேரில் வருகை தரவும்)

தொடர்பு:- 077 8988 836

St John Sri Lanka

**சென்ஜோன் அம்புலன்ஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு**

சென்ஜோன் அம்புலன்ஸ் சேவைக்கு பின்வரும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இதற்கான தெரிவு 18.07.2020 சனிக்கிழமை மாலை 03 மணிக்கு 1ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சென்ஜோன் அம்புலன்ஸ் காரியாலத்தில் இடம்பெறும்.

1. **சாரதிகள்** (பஸ் சாரதி அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும்)
2. **கணினி தட்டச்சுதாரர்கள்** (ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)

**சென்ஜோன் அம்புலன்ஸ்**
இல 161, 1ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்

செ.செல்வறஞ்ஜன் O.St.J
மாவட்ட ஆணையாளர்
(யாழ் மாவட்டம்)
தொலைபேசி இல :
0757610010

அவசர அம்புலன்ஸ் சேவை தொலைபேசி இல.
**021 321 4444, 071 019 919 9**

# சுற்றறிக்கை முரணை தீர்க்காவிடில் தொழிற்சங்கப் போராட்டமே வழி

## ஆசிரியர் சேவை சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

பாடசாலைக்கு ஆசிரியர்களை அழைப்பது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் இரண்டு சுற்றறிக்கைகள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றமையால், இதில் எந்தச் சுற்றறிக்கையை பின்பற்றுவதென ஆசிரியர்கள் நிர்க்கதி நிலைக்கு ஆளாகியுள்ளனர் என்றும் இது தொடர்பில் முறையான தீர்மானம் எடுக்கத் தவறினால் தொழிற்சங்க போராட்டத்துக்கு செல்லவேண்டிவரும் எனவும் இவ்வாறு ஆசிரியர் சேவை சங்கத்தின் மத்திய மாகாண செயலாளர் கமகெதர திஸாநாயக்க தெரிவித்தார்.

ஆசிரியர் சேவை சங்க மத்திய மாகாணக் கிளை நேற்று முன் தினம் மாத்தளையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டிருக்கும் சுற்றறிக்கை யில் பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகள் இல்லாத ஆசிரியர்களை பாடசாலைக்கு அழைக்கவேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அனைத்து ஆசிரியர்களையும் பாடசாலைக்கு அழைக்க வேண்டும் எனக் மாகாண கல்வித் திணைக்களம் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது. இதனால் கற்றல் நடவடிக்கைகள் இல்லாத ஆசிரியர்கள் பாடசாலைக்கு வந்து அவர்களது காலத்தை வீணடிக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இதனால் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கவேண்டிய தனிமைப்படுத்தல் சட்டத்தை மீற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனவே மாகாண கல்வித் திணைக்களத்தி னால் வெளியிடப்பட்டிருக்கும் சுற்றறிக் கையை ரத்துச் செய்ய வேண் டும். இல்லாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்ல வேண்டி ஏற் படும் எனத் தெரிவித்துள்ளார். (ரி3)

**ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் நீர்வேலி**

**வருடாந்தப் பொதுக் கூட்டம் - 2020**

விநாய அடியார்களே!

நிகழும் சார்வரி வருடம் ஆடி மாதம் 11ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 26.07.2020 முற்பகல் 10.00மணிக்கு மேற்படி சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் சபைத் தலைவர் திரு.க.கிருபாகரன் தலைமையில் கோயில் மண்டபத்தில் நடைபெறும். தயவு செய்து மகாசபை உறுப்பினரைக் கூட்டத்திற்கு தவறாது சமூகம் கொடுக்கும்படி வேண்டுகின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

01. இறைவணக்கம்
02. தலைவர் முன்னுரை
03. சென்ற வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல்
04. நிர்வாக ஆண்டறிக்கை வாசித்தல்
05. கடந்த கால கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
06. பிரேரணைகள்
07. புதிய விடயங்கள்
08. புதிய நிர்வாக சபை தெரிவு செய்தல்
09. நன்றியுரை

நீர்வேலி,
11.07.2020

ச.சந்திரசூடி
செயலாளர்

**முக்கிய குறிப்பு:**
பொதுக்கூட்டத்திற்கு ஏதும் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் உறுப்பினர்கள் 20.07.2020ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரேரணைகளை எழுத்து மூலம் செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# வாழ்வாதார உதவித்திட்டங்கள்



யாழ்ப்பாணம்,ஜூலை 14

டெப்லிங் பணியகத்தினால் உருவாக்கப்பட்ட இயலாமையுடன் கூடிய நபர்களை உள்ளடக்கிய சுய உதவிக் குழுக்க ளுக்கான வாழ்வாதாரத் திட்டம் வழங்கும் நிகழ்வு CBM இன் நிதி அனுசரணையுடன் அண்மையில் ஸ்கந்தபுரத்தில் இடம்பெற்றது.

ஸ்கந்தபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட வெண்ணிலா சுய உதவிக்குழுவுக்கு ரூபா 145,000 பெறுமதியான தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் இயந்திரமும், கோணாவில் பகுதியில் உருவாக்கப்பட்ட விடிவெள்ளி சுய உதவிக்குழுவுக்கு ரூபா 100,000 பெறுமதியான கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளன. நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் செயலாளர் அருட்திரு கிங்ஸிலி வீரசிங்க கலந்துகொண்டார். டெப்லிங் பணியகத்தின் பிரதம இணைப்பாளர் அருட்.திரு.அன்ரனி சதீஸ், அருட். திரு.சசிக்குமார், அருட்.திரு. அருன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். (ரி3-214)

# கந்தகாடு சென்றவர்களைத் தேடி புலனாய்வுப் பிரிவினர் வலைவீச்சு

கொழும்பு, ஜூலை 14

போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்தும் கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் இருந்தவர்களுடன் நெருங்கி பழகியவர்கள், அவர்களை பார்க்க சென்ற காலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை கண்டுபிடிக்க பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மாவட்டம் முழுவதும் தேடுதல்களை நடத்தி வருகின்றனர். புனர்வாழ்வு முகாமில் இருந்தவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலி மற்றும் எல்பிட்டிய பொலிஸ் பிரிவுகளை சேர்ந்த போதைப் பொருளுக்கு அடிமையான சுமார் 600 பேர் நீதிமன்றத்தின் மூலம் கந்தகாடு புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களை பார்க்க சென்றிருந்த நபர்களின் தகவல்களை கண்டறிய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் இந்த தேடுதலை நடத்தி வருகின்றனர். (ரி1)




# கொரோனாவால் பொருளாதாரத்தில் சரிவு

இந்த ஆண்டு இறுதிக்குள் பொருளாதாரம் ஒரு நேர்மறையான குறிப்பில் முடிவடையும் என்று எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. மேலும் இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி 1.5 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், கொரோனா வைரஸின் தாக்கத்தின் காரணமாக சில திருத்தங்கள் ஏற்படும் என்றும் இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டுகிறது. எவ்வாறாயினும், இந்த ஆண்டு இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டு பொருளாதார வளர்ச்சியானது அரசாங்கத்தின் நாணய மற்றும் நிதிக் கொள்கைகளால் சாதகமான நிலையை அடையுமென எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ரி1)

**AUTOCAD DRAUGHTSMAN**

We are a Group of Companies engaged in Telecommunication, Electrical & Civil Engineering Projects in Sri Lanka, for well over three decades. We are looking for self-motivated, healthy and young person to join with our Team of Professional Skilled Draughtsman or Trainee.

**Qualifications & Experience**

He should have a Certificate in Auto-cad Draughtsmanship (NVQ Level 03 or above) from a recognized institution. 01 year of experience preferred but not mandatory. Training could be provided in-house by experienced staff.


**Job Description**

To identify the sketches provided by Technical Team, Mark Road Locations with Symbols by using Google Earth and Google Map & prepare the As Built Drawings. Preference will be given to Candidates, residing in Jaffna Area. Age Maximum 30 years. Attractive and negotiable remuneration package, commensurate with qualifications, awaits the right candidates. Confidentiality assured. Please E-mail your CV immediately.

**Project Manager**
**Luminex (PVT) Ltd.**
**Point Pedro Road**
**Kopay**
**[illegible]718521535**
**E-[illegible]@luminexpl.com**

## மரண அறிவித்தல்

பிறப்பு
02 . 01 . 1937



இறப்பு
13 . 07 . 2020

### கந்தையா திருநாவுக்கரசு


யாழ். கட்டுவனைப் பிறப்பிடமாகவும் , உசன் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் 13.07.2020 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமநாதன் கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சிவலோகநாயகியின் அன்புக் கணவரும் ஐங்கரன் (கொழும்பு), கிருபாகரன் (துணுக்காய்), கருணாகரன் (யாழ்ப்பாணம்), கவிதா (சுன்னாகம்), சிவாகரன் (ஆஸ்திரேலியா), ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரேமலதா (கொழும்பு), சுபாசினி (துணுக்காய்),அபர்ணா (யாழ்ப்பாணம்), கேதீஸ்வரன் (சுன்னாகம்), அர்ப்பனா( ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா, பரமானந்தம், செல்லம்மா மற்றும் சின்னம்மா(டென்மார்க்), திலகவதி(கனடா), சரஸ்வதி(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சங்கீத், மாதுரி, திவ்யெஷ், சஞ்யெஷ், ரஜனி, பிரியங்கா, பிரதிகா, தக்ஷயா, லக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசன் ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு :**
**சிவலோகநாயகி (மனைவி) -(+94) 21 205 0195,**
**ஐங்கரன் (மகன்) - (+94) 77 538 5383**
**கிருபாகரன் (மகன்) - (+94) 77 347 1065**
**கருணாகரன்(மகன் ) - (+94) 77 944 9512**
**கவிதா (மகள்) - (+94) 77 440 9902**
**சிவாகரன் (மகன்) - (+61) 401 225582**

## மரண அறிவித்தல்



### விசுவலிங்கம் ஜெயரட்ணசிங்கம்

**(ஓய்வுநிலை வருமானப் பரிசோதகர் - வலிதென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்)**

இணுவிலை பிறப்பிடமாகவும், காங்கேசன்துறை மற்றும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் ஜெயரட்ணசிங்கம் நேற்று (13.07.2020) திங் கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - கண்மணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான குருநாதபிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், ஜெனித்தா (கனடா), ஜெயந்தா (கனடா), காலஞ்சென்ற ஜெயந்தன் (முன்னாள் ஊழியர் இலங்கை மின்சாரசபை - யாழ் பிரதேசம், சுன்னாகம்) மற்றும் ஜெசிந்தா, ஜெயநந்தா (ஆசிரியை - மு/ முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க பாடசாலை), ஜெயவிந்தா (மாணவி - விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குகதாஸ் (கனடா), கேதாரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், மர்மிற்றா, டெவினா, நக்கவி, கிரிசன்ஜா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் ஜெயகாந்தன் (சுவிஸ்), ஜெயசோதி (ஓய்வு நிலை பட வரைஞர்- உள்ளூராட்சித் திணைக்களம், வவுனியா), ஜெயானந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மதனரூபி, மரியா, சிவகாமி, பிறேமாதேவி, காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் மோகனாதேவி, விக்கினேஸ்வரி, கமலாதேவி, றஞ்சினிதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.30/5, தியேட்டர் ஒழுங்கை, இணுவில் கிழக்கு.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

# அரசின் அலட்சியத்தால் நிலைமை தலைகீழானது

## ஐ.தே.க.வின் ரங்கே பண்டார தாக்கு

கொழும்பு, ஜூலை 14

நாட்டில் மீண்டும் அதிகரித்திருக்கும் கொரோனா வைரஸ் பரவல் நிலைக்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும். ஆரம்பத்தில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குப் பெரும் எண்ணிக்கையில் பரிசோதனைகளை முன்னெடுப்பது அவசியமென ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். எனினும், அதனை ஆளுந்தரப்பினர் கேலிக்குட்படுத்தினார்கள். தற்போது நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று திங்கட்கிழமை ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்தும் அரசு தமது பொதுத்தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை நிறுத்தத்தேவையில்லை. மாறாக இதனைக் கட்டுப்படுத்த முடியாத தமது தோல்வியை ஏற்றுக் கொண்டு உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

தற்போதைய அரசு 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் வரையில் அரச ஊழியர்களின் நலன் மற்றும் உரிமைகள் தொடர்பில் சற்றேனும் கவனம் செலுத்தவில்லை. எனினும் நாம் 2015 இல் நல்லாட்சி அரசை உருவாக்கி அரச ஊழியர்களின் ஊதியத்தை அதிகரித்தோம். ஓய்வூதியக் கொடுப்பனவிலும் அதிகரிப்பை ஏற்படுத்தினோம்.

ஆனால் தற்போது மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய அரசும், அரச ஊழியர்களின் நலனை முன்னிறுத்தி எமது அரசில் முன்னெடுக்கப்பட்ட அனைத்து செயற்றிட்டங்களையும் இடைநிறுத்திவிட்டது. (த)

# மேல் மாகாணத்தில் 993 பேர் கைது

கொழும்பு, ஜூலை 14

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கையில் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 993 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 80 பேர் விரல் ரேகையை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் மேல் மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி)

## மரண அறிவித்தல்



### திருமதி சிவபாதம் தனலட்சுமி

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாதம் தனலட்சுமி நேற்று (13.07.2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கிட்ணபிள்ளை பூரணம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற தம்பிமுத்து சிவபாதத்தின் அன்பு மனைவியும், நாகராஜா (இலங்கை), கணேசமூர்த்தி (அமரர்), பரமேஸ்வரி (இலங்கை), இந்திராதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆனந்தகுமாரி (சுவிட்சர்லாந்து), விஜியகுமாரி (இலங்கை), பிறேமாவதி (பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (சுவிட்சர்லாந்து), கருணாதேவி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மராஜா (சுவிட்சர்லாந்து), நித்தியானந்தன் (இலங்கை), சதீஸ்குமார் (பிரான்ஸ்), சிந்துஜானி (சுவிட்சர்லாந்து), திருமூலன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜானா (சுவிட்சர்லாந்து), பிரியங்கா (அவுஸ்திரேலியா), டருணி (இலங்கை), பிறநதி (பிரான்ஸ்), சுமிதா (பிரான்ஸ்), லக்சிகன் (சுவிட்சர்லாந்து), லோஜிகா (சுவிட்சர்லாந்து), அமரதாஸ் (துபாய்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் மதியம் 12 மணியளவில் இருபாலை கிழக்கு நொச்சிக்காடு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
ஆனந்தகுமாரி (சுவிட்சர்லாந்து)
00141789074700
விஜியகுமாரி (இலங்கை)
+94766609891
பிறேமாவதி (பிரான்ஸ்)
00133646720745

விக்கினேஸ்வரன்
(சுவிட்சர்லாந்து)
00141799403334
கருணாதேவி (அவுஸ்திரேலியா)
00161470318072

# குடியியல் நடைமுறைச்சட்டக் கோவையின் 16 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

# ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில்

பேரம்பலம் நாகரத்தினம்
தலைவர் மாணிக்கவாசகர் மடாலய
அன்னதான சபை,
ஈழத்து சிதம்பரம் தேவஸ்தானம்
(திண்ணபுரம் சிவன் கோவில்)
காரைநகர்
தற்பொழுது இல.383, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழ.இல 96/ 2020 நானாவிதம்

எதிர்

1. ஆண்டி ஐயா அம்பலவிமுருகன்
   இணை ஆதீனகர்த்தா,
   காரைநகர் சிவன் கோவிலடி,
   காரைநகர்.
2. முருகேசு சுந்தரலிங்கம்
   இணை ஆதீனகர்த்தா ,
   காரைநகர் சிவன் கோவிலடி,
   காரைநகர்.
3. சுந்தரலிங்கம் குகநேசன்
   காரைநகர் சிவன் கோயிலடி,
   காரைநகர்.

எதிராளிகள்

மேற்படி வழக்காளியால் எதிராளிகளுக்கு எதிராக 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதியிட்ட பிராது, சத்தியக்கூற்று மற்றும் ஆவணங்கள் “X1” தொடக்கம்“X12(d)”வரை அணைத்து வழக்காளி தாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்கு வழக்காளியினால் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் தலைவராக மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் நலன் கருதி தொடுக்கப் பட்ட வழக்காகும். இவ்வழக்கில் வழக்காளி பின்வரும் நிவாரணங்களை 3 ஆம் எதிராளிக்கு எதிராக கோரியள்ளார். அந்நிவாரணங்களாவன:

(அ) குடியியல் நடைமுறைக் கோவையின் பிரிவு 16 இன் கீழ் இவ் வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கான அனுமதியும், பத்திரிகையில் இவ் வழக்கு குறித்த அறிவித்தலை பிரசுரிக்கும் பொருட்டு ஒரு பொருத்தமான கட்டளையும்:

(ஆ) 3ஆம் எதிராளியை மற்றும் / அல்லது அவரின் பணியாட்களை, முகவர்களை மற்றும் பிரதிநிதிகளை மற்றும் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்களை அல்லது முன் மொழியப்பட்டவர்களை –

(i) மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் திருத்தப்பட்ட அமைப்பு விதிகளின் ("X2" மற்றும் -X3" சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்) ஏதேனும் ஏற்பாடுகளை அல்லது அனைத்து ஏற்பாடுகளையும் மாணிக் கவாசகர் மடாலய அன்னதான சபையின் நிர்வாகசபை நிறைவேற்றி வைப்பதற்கு இடையூறு விளைவிப்பதிலிருந்தும்,

(ii) மாணிக்கவாசகர் மடாலய - அன்னதானசபையின் மற்றும் அல்லது நிர்வா கத்தின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல் மற்றும் அல்லது அவற்றில் தலையிடுவதிலிருந்தும்

(iii) 3ஆம் எதிராளி மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசயை தனது அன்ன தானபணியினை மற்றும் அதனோடு இணைந்த பணிகளினை ஆற்றுவதனை தடுப்பதிலிருந்தும் மற்றும் அல்லது தலையீடு செய்வதிலிருந்தும் மற்றும் அல்லது இடையூறு விளைவிப்பதிலிருந்தும்

(iv) வழக்காளி மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் தலைவர் என்ற வகையில் மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இடையூறு செய்வதிலிருந்தும்,

(v) மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் உடமைகளை வழக்காளி நிர் வகிப்பதனை தடுப்பதிலிருந்தும் மற்றும் அல்லது இடையூறு செய்வதிலிருந்தும்:

(vi) மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையினர் அசையும் மற்றும் அசாய சொத்துக்கள், வங்கிக் கணக்குகள் தொடர்பாக எம்முறையிலும் செயற்படுவதி லிருந்தும்:

தடுக்கும் வகையில் இடைக்காலத் தடைக்கட்டளைக்கான விண்ணப்பத்தின் மீதான விசாரணை முடியும்வரை ஒரு கட்டாணை:

(இ) 3ஆம் எதிராளியை மற்றும் அல்லது அவரின் பணியாட்களை, முகவர்களை மற்றும் பிரதிநிதிகளை மற்றும் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்களை அல்லது முன் மொழியப்பட்டவர்களை:

(i) மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் திருத்தப்பட்ட அமைப்புவிதி களின் ("X2" மற்றும் "X3" சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்) ஏதேனும் ஏற்பாடு களை அல்லது அனைத்து ஏற்பாடுகளையும் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் நிர்வாகசபை நிறைவேற்றி வைப்பதற்கு இடையூறு விளைவிப்பதிலிருந்தும்

(ii) மாணிக்கவாசகர் - மடாலய அண்னதானசபையின் மற்றும் அல்லது நிர்வா கத்தின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல் மற்றும் அல்லது அவற்றில் தலையிடுவதிலிருந்தும்,

(iii) 3ஆம் எதிராளி மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபை தனது அன்னதான பணியினை மற்றும் அதனோடு இணைந்த பணிகளினை ஆற்றுவதனை - தடுப் பதிலிருந்தும் மற்றும் அல்லது தலையீடு செய்வதிலிருந்தும் மற்றும் அல்லது இடையூறு விளைவிப்பதிலிருந்தும்

(iv) வழக்காளி மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் தலைவர் என்ற வகையில் மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இடையூறு செய்வதிலிருந்தும்,

(v) மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் உடமைகளை வழக்காளி நிர்வகிப் பதனை தடுப்பதிலிருந்தும் மற்றும் அல்லது இடையூறு செய்வதிலிருந்தும்,

(vi) மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் அசையும் மற்றும் அசையா சொத் துக்கள், வங்கிக் கணக்குகள் தொடர்பாக எம்முறையிலும் செயற்படுவதிலிருந்தும்

தடுக்கும் வகையிலான ஒரு இடைக்காலத் தடைக் கட்டளைக்கான கட்டளையும்,

(ஈ) 3 ஆம் எதிராளியை மற்றும் அல்லது. அவரின் பணியாட்களை, முவகவர்களை மற்றும் பிரதிநிதிகளை மற்றும் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்களை அல்லது முன்மொழி யப்பட்டவர்களை –

(i) மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் திருத்தப்பட்ட அமைப்பு விதிகளின் ("X2" மற்றும் -X3" சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்) ஏதேனும் ஏற்பாடு களை அல்லது அனைத்து ஏற்பாடுகளையும் மாணிக் கவாசகர் மடாலய அன்னதான சபையின் நிர்வாக சபை நிறைவேற்றி வைப்பதற்கு இடையூறு விளைவிப்பதிலிருந்தும்,

(ii) மாணிக்கவாசகர் - மடாலய அன்னதானசபையின் மற்றும் அல்லது நிர்வாகத்தின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல் மற்றும் அல்லது அவற்றில் தலையிடுவதி லிருந்தும்,

(iii) 3ஆம் எதிராளி மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபை தனது அன்னதானபணி யினை மற்றும் அதனோடு இணைந்த பணிகளினை ஆற்றுவதனை தடுப்பதிலிருந்தும் மற்றும் அல்லது தலையீடு செய் வதிலிருந்தும் மற்றும் அல்லது இடையூறு விளைவிப்பதி லிருந்தும்

(iv) வழக்காளி மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் தலைவர் என்ற வகையில் மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இடையூறு செய்வதிலிருந்தும்,

(v) மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் உடமைகளை வழக்காளி நிர்வகிப் பதனை தடுப்பதிலிருந்தும் மற்றும் அல்லது இடையூறு செய்வதிலிருந்தும்:

(vi) மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையினர் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், வங்கிக் கணக்குகள் தொடர்பாக எம்முறையிலும் செயற்படுவதிலிருந்தும்:

தடுக்கும் நிரந்தர தடைக் கட்டளையும்

(உ) 3ம் எதிராளியால் 27/01/2020 மற்றும் அதன் அண்மைய தினங்களில் சயை அலுவ கலகத்தில் இருந்து கைப்பெற்றப்பட்ட மாணிக்கவாசகர் அன்னதான சபையினுடைய அனைத்து ஆவணங்கள், கோப்புக்கள், புத்தகங்கள் காகிதாதிகளையும் 3ஆம் எதிராளி வழக்காளிக்கு கையளிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் தடைக்கட்டளையும் Mandatory injunction:

(ஊ) 3ஆம் எதிராளியால் 27/01/2020 மற்றும் 28/01/2020 ஆகிய தினங்களில் மாணிக் கவாசகர் மடாலய அன்னதான சபையின் காவலாளி மற்றும் முகாமையாளரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட திறப்புக்களை 3ஆம் எதிராளி வழக்காளியிடம் கையளிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தும் தடைக்கட்டளையும் Mandatory injunction:

(எ) 3ஆம் எதிராளியால் மற்றும் 27. 01 .2020 மற்றும் அதன் அண்மை தினங்களில் சபை அலுவலகத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை யினுடைய அனைத்து ஆவணங்கள், கோப்புக்கள், புத்தகங்கள், காகிதாதிகளையும் 3 ஆம் எதிராளி வழங்காளிக்கு கையளிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் கட்டளையும் Mandatory Oder)

(ஏ) 3ஆம் எதிராளியால் 27/01/2020 மற்றும் 28/01/2020 ஆகிய தினங்களில் மாணிக் கவாசகர் மடாலய அன்னதான சபையின் காவலாளி மற்றும் முகாமையாளரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட திறப்புக்களை 3ஆம் எதிராளி வழக்காளியிடம் கையளிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தும் கட்டளையும் (Mandatory Oder)

(ஐ) மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபை மற்றும் அதனுடன் இணைந்த அனைத்தை யும் திருத்தப்பட்ட அமைப்பு விதிகள் ( “X2”மற்றும் “X3” சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்) ஆளுகின்றது என்கின்ற தீர்ப்பும்:

(ஒ) மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையினால் அடியார்களின் பங்களிப்பில் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ள நிதி அனைத்தும் மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் நோக் கங்களை நிறைவேற்றுவதற்காக பேணப்படும் தர்ம சொத்து என்கின்ற தீர்ப்பும்

(ஓ) மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையினால் கட்டப்பட்டு நிர்வாகிக்கப்பட்டுவரும் அன்னதான மண்டபங்கள், நவீன சமையலறை. நிர்வாகக் கட்டிடம் மற்றும் அலுவலகம் உள்ளடங்கிய கட்டிடத் தொகுதி மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் ஆளுகைக்குப்பட்ட ஒரு தர்மச் சொத்து என்ற தீர்ப்பும்.

(ஔ) 3ஆம் எதிராளி 27/01/2020 மற்றும் 28/01/2020 ஆகிய திகதிகளில்மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் காவலாளி மற்றும் முகாமையாளரிடம் இருந்து திறப்புக்களை கைப்பற்ற அருகதையோ உரித்தோ அற்றவர் என்ற தீர்ப்பும் பிரகடனமும்.

(ஃ) 3ஆம் எதிராளியால் 27/01/2020 மற்றும் அதன் அண்மைய தினங்களில்சயை அலுவலகத்தில் இருந்து கைப்பெற்றப்பட்ட மாணிக்கவாசகர் அன்னதான சபையினுடைய அனைத்து ஆவணங்கள். கோப்புக்கள். புத்தகங்கள். காகிதாதிகளை 3ஆம் எதிராளி வழக்காளியிடம் கைப்பற்ற அருகதையோ உரித்தோ அற்றவர் என்ற தீர்ப்பும் பிரகடனமும்.

(அஅ) செலவுகள், மற்றும்

(அஆ) இந்த விடயம் தொடர்பாக நீதிமன்றம் வழங்கக் கூடிய வேறு ஏதேனும் நிவாரணங்கள்.

இவ்வழக்கு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி அவர்கள் முன்னிலையில் 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 ஆம் திகதி ஆதரிக்கப்பட்டதனை அடுத்து அச் சமர்ப்பணம், பிராது , சத்தியக்கடதாசி மற்றும் ஆவணங்களையும் பரிசீலனை செய்த மாவட்ட நீதிமன்று 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி பிராதின் நிவாரணம் (ஆ) இன் படி கட்டாணை மற்றும் (ஊ) இன் படி 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் திக்கு முன்னர் செயல்படுமாறு கட்டாயப்படுத்தும் தடைக்கட்டளைகளையும் (Mandatory Injunction) 3 ஆம் எதிராளிக்கு எதிராக வழங்கியுள்ளது.


இவ் வழக்கில் யாராவது அக்கறையுள்ளவர்கள் இருப்பின் 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ நேரடியாகவோ அல்லது தாங்கள் சட்டத்தரணி மூலமாகவோ தோன்றி பங்கேற்பதற்கு முடியும் என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது. மேற்படி வழக்கு ஊர் காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் 2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதியன்று திறந்த மன்றில் அழைக்கப்படும்.

**2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி மன்றின் கட்டளைப்படி**

**நீதிமன்றத்தின் கட்டளைப்படி**

**பதிவாளர், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்**

# அமெரிக்க கடற்படைக் கப்பலில் தீ



கலிபோர்னியா, ஜூலை 13
சான் டியாகோவிலுள்ள அமெரிக்க கடற்படைத் தளத்தில் கப்பலொன்றில் ஏற்பட்ட வெடி, தீ விபத்தில் 21 பேர் காயமடைந்துள்ளதாக அமெரிக்க கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
அமெரிக்க நேரப்படி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.
விபத்தில் காயமடைந்தவர்களுள் 17 கடற்படையினரும், நான்கு பொது மக்களும் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக அமெரிக்க கடற்படை அதிகாரிகள் தமது அறிக்கையில் உறுதிப்படுத்தியுள்ளனர்.
225 மீட்டர் நீளமுடைய கப்பலிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், விபத்துக்கான காரணம் தொடர்பில் விசாரணை இடம்பெற்று வருகின்றது. (ரி1)

# சிரியாவுக்கான உதவிகளுக்கு பாதுகாப்புச் சபை அங்கீகாரம்



**நியூயோர்க், ஜூலை 13**
**பெரும் இழுபறிக்குப் பின்னர் துருக்கியில் இருந்து சிரியாவுக்கு உதவிகளை விநியோகிப்பதற்கு ஐ.நா பாதுகாப்புச் பபையில் அங்கீகாரம் கிடைத்துள்ளது. எனினும் ரஷ்யாவின் அழுத்தத்தால் சிரியாவுக்கு உதவி வழங்கும் துருக்கியின் இரண்டு வாயில்களில் ஒன்று மூடப்படுகிறது.**

கடந்த ஒரு வாரத்தில் ஐந்து முறை வாக்குப் பதிவு இடம்பெற்ற நிலையில் கடந்த சனிக்கிழமை ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் கொண்டுவந்த தீர்மானம் பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்டது. இதன்படி ஓர் ஆண்டு காலத்திற்கு பாப் அல் ஹவா எல்லை கடவையை பயன்படுத்தி சிரியாவுக்கு உதவிகளை வழங்க ஒப்புதல் கிடைத்துள்ளது.
உதவிகள் வழங்குவதற்கான இரண்டாவது வாயில் மூடப்படுவது சிரியாவின் வடமேற்கில் உள்ள 1.3 மில்லியன் மக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது என்று மேற்குல நாடுகள் குறிப்பிட்டுள்ளன.
2014 ஆம் ஆண்டே சிரியாவுக்கு உதவிகளை வழங்கும் ஐ.நாவின் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதோடு கடந்த வெள்ளிக்கிழமை அது காலாவதியான நிலையில் அதனைத் தொடர்வதற்கு தற்போது ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)



# பதவி விலகேன்

## லெபனான் பிரதமர் அறிவிப்பு

பெய்ரூட், ஜூலை 13
லெபனான் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், லெபனான் பிரதமர் பதவி விலகப் போவதாக செய்திகள் வெளியாகத் தொடங்கின.
இந்த நிலையில், அந்தச் செய்திகள் போலியானவை. நான் ஆட்சியில் இருக்கும்வரையில் லெபனான் வேறு யாருடைய கட்டுப்பாட்டின் கீழும் செல்லாது. தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சரி செய்யும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது என்று ஹசன் டயப் தெரிவித்துள்ளார்.

## சீனாவின் எதிர்ப்பை மீறி

# ஹொங்காங் மக்களுக்கு ஆஸ்திரேலியா அடைக்கலம்

ஹொங்காங்குக்கு எதிரான தேசிய பாதுகாப்பு சட்டத்தால் பாதிக்கப்படும் ஹொங்காங் மக்களுக்கு அடைக்கலம் தந்து குடியுரிமை அளிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக, ஆஸ்திரேலிய பிரதமர், ஸ்காட் மாரிசன் கடந்த சில வாரங்களுக்கு முன்பு அறிவித்திருந்தார்.
இந் நிலையில் ஆஸ்திரேலியாவில் ஏற்கனவே பல்வேறு காரணங்களுக்காக தங்கி இருக்கும் 10,000 ஹொங்காங் மக்களுக்கான விசாக் காலத்தை நீடிப்பதாகவும், இதன் மூலம் அவர்களுக்கு ஆஸ்திரேலிய குடியுரிமை அளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் ஸ்காட் மாரிசன் தெரிவித்துள்ளார். (ரி1)





# தென்னாபிரிக்காவில் மதுவுக்கு மீண்டும் தடை

பிரிட்டோரியா, ஜூலை 13
தென்னாபிரிக்காவில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மது விற்பனை மற்றும் விநியோகத்திற்கு மீண்டும் தடை விதிக்க அந் நாட்டு அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.
கொரோனாத் தொற்றுக்குள்ளான நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு வைத்தியசாலைகளில் அதிக படுக்கைகள் தேவைப்படுகிறது. எனவே மது விற்பனை செய்வதை தடைசெய்யவதன் மூலம் வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என அந் நாட்டு ஜனாதிபதி சிரில் ரமபோசா தெரிவித்துள்ளார்.
ஞாயிற்றுக்கிழமை தேசிய அளவில் ஒளிபரப்பப்பட்ட உரையொன்றில், தென்னாப்பிரிக்காவில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை உச்சத்தை எட்டுவதால், வைத்தியசாலைகளில் படுக்கைகள் மற்றும் ஆக்ஸிஜனின் பற்றாக்குறை குறித்து உயர் சுகாதார அதிகாரிகள் எச்சரித்ததாக ரமபோசா கூறினார். அதேநேரம் ஜூன் மாதத்தில் மது விற்பனை மற்றும் விநியோகம் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, வைத்தியசாலைகள் நோயாளர்களின் அவசர சேர்க்கை மற்றும் படுக்கைகள் நிரம்பி யுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ரி1)

# அந்தமான், நிக்கோபாவில் நிலநடுக்கம்

அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் நிலநடுக்கம் ஏற்ப்பட்டுள்ளது. குறித்த நிலநடுக்கம் 4.3 ரிச்டர் அளவுகோலில் ஏற்பட்டுள்ளதாக நில அதிர்வுக்கான தேசிய நிலையம் தெரிவித்துள்ளது. நேற்று அதிகாலை 2:36 மணியளிவில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடையில் ஏற்பட்ட மூன்றாவது பூகம்பம் இதுவாகும். (ரி1)

# சீனாவில் வெள்ள அனர்த்தம் 38 மில்லியன் மக்கள் பாதிப்பு

பீஜிங், ஜூலை 13
சீனப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக சுமார் 38 மில்லியன் மக்கள் பாதிப்படைந்துள்ளதுடன், 140 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தோ அல்லது காணாமல்போயுள்ளதாகவும் பீஜிங் அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை உறுதிப்படுத்தியுள்ளனர்.
ஜூலை 12 நிலவரப்படி, சீனாவின் ஜியாங்சி, அன்ஹுய், ஹுபே மற்றும் ஹுனான் மாகாணங்கள் உட்பட 27 பிராந்தியாங்களில் ஏற்பட்ட இந்த வெள்ளத்தால் 37.9 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 2.25 மில்லியன் மக்கள் தங்கள் சொந்த இடங்களிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டும் உள்ளதாக நாட்டின் மாநில வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வறட்சி நிவாரண தலைமையகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



வெள்ளம் காரணமாக 28,000 க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் அழிந்துள்ளதுடன், இதனால் ஏற்பட்ட நஷ்டம் 82.2 பில்லியன் யுவான் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. (ரி1)



4 நாள் டெஸ்ட்டுக்கு

## கங்குலி எதிர்ப்பு



டெஸ்ட் போட்டிகள் நான்கு நாள்களாக குறைக்கப்பட்டால் பெரும்பாலான போட்டிகளில் முடிவு கிட்டமாட்டாது என்று கங்குலி தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஒன்றான டெஸ்ட் போட்டியில் மேலும் விறுவிறுப்பை ஏற்படுத்தவும், கால நேரத்தைக் குறைக்கவும், ரசிகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், டெஸ்ட் போட்டியை நான்கு நாள்களாக குறைக்க ஐ.சி.சி. பரிந்துரை செய்துள்ளது.

2023ஆம் ஆண்டு நடைபெறும் டெஸ்ட் சாம்பியன்ஷிப் கிண்ணத்தில் இதனை அறிமுகம் செய்யவும், ஐ.சி.சி. உத்தேசித்து இருப்பதாகவும் கூறப்படு கிறது.

இந்த நிலையில் நான்கு நாள் டெஸ்ட் போட்டிக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவரும், பி.சி.சி.ஐ முன்னாள் தலைவருமான கங்குலி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

நான்கு நாள் டெஸ்ட் போட்டியை பி.சி.சி.ஐ. விரும்பவில்லை. நான்கு நாள் போட்டிக்கு நான் பெரிய ரசிகர் கிடையாது. ஏனென்றால், நான்கு நாள்கள் நடத்தப்பட்டால், பெரும்பாலான டெஸ்ட் போட்டிகளில் முடிவுகள் ஏற்படாது. என்னைப் பொறுத்தவரை டெஸ்ட் போட்டியை நான்கு நாள்களாக குறைப்பது அவசியமில்லை என்றார். (ரி2)

# இங்கிலாந்தை வீழ்த்தியது மேற்கிந்தியத் தீவுகள்

லண்டன், ஜூலை 14

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 4 இலக்கு வித்தியாசத்தில் நேற்றுமுன்தினம் வெற்றி பெற்றுள்ளது.



கொரோனா தாக்கத்துக்கு பின்னர் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்று சாதித்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக கொரோனாத் தாக்கம் காரணமாக உலகம் முழுவதும் கிரிக்கெட் போட்டிகள் தடைப்பட்டிருந்த நிலையில் கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமான மேற்கிந்தியத் தீவுகள் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் சவுத்தாம்ப்டனில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. முதல் இன்னிங்ஸில் இந்த அணி 204 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. அதனைத் தொடர்ந்து ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 318 ஓட்டங்கள் குவித்தது. இதையடுத்து, தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி நிதானமாக ஆடியது. இங்கிலாந்து அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 313 ஓட்டங்கள் எடுத்தது.

200 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு கட்டத்தில் 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. பின்னர், ரோஸ்டனுடன் இணைந்த பிளாக்வுட் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். ரோஸ்டன் 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

ஆனால், நிலைத்து நின்று ஆடிய பிளாக்வுட் 154 பந்துகளில் 12 நான்கு ஓட்டங்கள் உட்பட 95 ஓட்டங்கள் விளாசினார். இறுதியில், 6 விக்கெட்டுகளை இழந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி இலக்கான 200 ஓட்டங்களை எட்டியது. இதன் மூலம் இங்கிலாந்து அணியை 4 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி மேற்கிந்தியத் தீவுகள் அணி அபார வெற்றி பெற்றது.

9 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்து வீச்சாளர் கேப்ரியல் ஆட்டநாயகன் விருதை தட்டிச்சென்றார். இந்த வெற்றியின் மூலம் டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முன்னிலை பெற்றது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக இரண்டு இன்னிங்ஸிலும் மொத்தமாக, 9 விக்கெட்டுகளை சாய்த்த செனோன் கெப்ரியல் தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 16ஆம் திகதி மன்செஸ்டர் ஓல்ட் டரப்போர்ட் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ரி2)

## கடினப்பந்து கிரிக்கெட்டை வடக்கில் அபிவிருத்தி செய்ய செயற்றிட்டம்

கொழும்பு, ஜூலை 14

இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சும், வடக்கு மாகாண கல்வி விளையாட்டுத்துறைஅமைச்சும்இணைந்து வடக்கு மாகாணத்தில் கடின பந்து கிரிக்கெட் அபிவிருத்தி செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளன. அந்தச் செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக கடந்த 8 ஆம் 9 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் வலயக்கல்வி அலுவலகங்களில் கிரிக்கெட் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. அத்துடன் அமைச்சு அதிகாரிகளால் பாடசாலை விளையாட்டு மைதானங்கள் பார்வையிடப்பட்டு வளங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல்களில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் கடின பந்துக் கிரிக்கெட் விளையாடப்படும் வலயங்களின் வலயக்கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், விளையாட்டு பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்கள் மற்றும் மாவட்ட துடுப்பாட்டச் சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் வடமாகாண பாடசாலைகளின் கிரிக்கெட் அபிவிருத்தி தொடர்பான பல்வேறு முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் சகல வசதிகளுடன் கூடிய கிரிக்கெட் நிலையம் ஒன்றை உருவாக்குதல், கடினப்பந்துக் கிரிக்கெட் விளையாட்டை விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டுப் பட்டியலில் உள்ளடக்குதல். அமைச்சின் மூலமான சான்றிதழை பெற்றுக் கொடுத்தல், பாடசாலைக் கிரிக்கெட் பயிற்றுநரின் கொடுப்பனவு தொடர்பான கலந்துரையாடல், பாடசாலைகளின் அடிப்படை கிரிக்கெட் வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல், மகளிர் கிரிக்கெட்டை ஆரம்பித்தல் போன்ற விடயங்கள் பேசப்பட்டன.

வடக்கு மாகாண கல்வி விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டு அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் சிறி ரஜீவன், வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் ராஜசீலன், இலங்கை பாடசாலை கிரிக்கெட்சங்கத்தின்வடக்குமாகாண இணைப்பாளர் நிஷாந்தன், இலங்கை பாடசாலைக் கிரிக்கெட் சங்கத்தின் பிரதிநிதி அத்தப்பத்து ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ரி2)

## எந்த வரிசையிலும் களம் இறங்கத் தயார்– ரகானே



புதுடெல்லி, ஜூலை 14

இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியில் இடம் கிடைக்காத நிலையில், எந்த வரிசையிலும் களம் இறங்கி விளையாடத் தயார் என ரகானே தெரிவித்துள்ளார்.

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் துணைத் தலைவன் அஜிங்யா ரகானே கிரிக்கெட் இணையத் தளத்துக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய ஒரு நாள் போட்டி அணிக்கு மீண்டும் திரும்ப வேண்டும் என்று விரும்புகிறேன். இதைத்தான் எனது உள்ளுணர்வும் சொல்கிறது. ஒரு நாள் போட்டியை பொறுத்தவரை தொடக்க வரிசையோ அல்லது 4 ஆவது வரிசையோ எந்த வரிசையில் களம் இறங்கச் சொன்னாலும் அதற்குத் தயாராக இருக்கிறேன்.

ஆனால் வாய்ப்பு எப்போது வரும் என்பது தெரியாது. மூன்று வடிவிலான போட்டிகளிலும் விளையாட மனரீதியாக தயாராக உள்ளேன். திறமை மீது நம்பிக்கை வைத்து நேர்மறையான எண்ணத்துடன் இருப்பது முக்கியம் - என்றார்.

இதுவரை 90 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி இருக்கும் 32 வயதான ரகானே கடைசியாக 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக விளையாடி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரி2)

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரம்

இவ்வினாத்தாளில் 63 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக. (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)

- சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

## உதயன் பயிற்சிப் பரீட்சை – 5

பகுதி- II

ஆக்கம்: திரு.த. தயானந்தன்
அதிபர்,
யா/கீரிமலை நகுலேஸ்வரா மகா
வித்தியாலயம்.

நேரம்: 1 மணி 15 நிமிடம் பெயர்: ................................ பாடசாலை: ........................................

## பகுதி- IA

1) பின்வரும் பாடலை நன்றாக வாசிக்க.

பூனை ஓடி வந்தது
புரட்டிப் புரட்டிப் பார்த்தது
மோப்பம் பிடித்து நின்றது
உருட்டி விட்டு நடந்தது

காலை முதல் மாலை வரை
தேங்காய் அங்கு கிடந்தது
கவிழ்த்து வைத்த செம்பு போல்
வானம் பார்த்துக் கிடந்தது

i. தேங்காயைப் புரட்டிப் பார்த்தது எது?
..............................................................................................

ii. ஆகாயம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.
..............................................................................................

iii. உவமானத்தைக் குறிப்பிடுக. ..................................................

iv. அடுக்குத் தொடரை எழுதுக. ..................................................
v. காலப்பெயர் ஒன்றை எழுதுக. ..................................................
vi. அஃறிணை ஒன்றன்பால் ஒருமைப் படர்க்கை வினைச்சொல் ஒன்றை எழுதுக. ..................................................

(6புள்ளி)

2) சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.
i. தலகணை, தலையணை
ii. கடமை, கடைமை (2 புள்ளி)

3) தனிச்சொல்லை எழுதுக.
i. ஒரு தண்டிலே பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து
..............................................................................................
ii. ஒன்று போல் இருக்கும் மற்றொன்று. ..................................................
iii.பகையரசருக்குக் கொடுக்கப்படும் திறைப்பொருள்: ..................................
(3புள்ளி)

4) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
ஆகக்/ காணப்படுகின்றன/ பல/ கிராமத்திலுள்ள/ வீதிகள்/ குன்றுங்குழியும்
..............................................................................................(2புள்ளி)

5) பின்வரும் பழமொழியின் கருத்தை எழுதுக.
இளங்கன்று பயமறியாது
.............................................................................................. (1புள்ளி)

6) பின்வரும் பிராணியின் குரலொலியை எழுதுக.
கழுதை: ..............................................................................(1புள்ளி)

7) கீறிட்ட இடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
i. அவன் எய்த ........................ பட்டு மான் கீழே விழுந்தது. (பானம்/பாணம்)
ii. காகம் அங்குமிங்கும் ........................... தேடியது. (இரை/ இறை)
iii. நான் இன்னும் நீண்ட ........................ போக வேண்டும். (வழி/ வளி)
(3புள்ளி)



8) கீறிட்ட இடத்தை நிரப்புக.
ஆடு குட்டி என்பது போல தவளை............................................ (1புள்ளி)

9) எதிர்ப்பாற் சொல்லை எழுதுக
எசமானன் : ..............................................................................(1புள்ளி)

10) மரபுப் பெயரை எழுதுக.
i. தென்னையின் இளங்காய் : ..................................................
ii. ஆட்டின் மலம் : ..............................................................(2புள்ளி)

11) பின்வரும் இணைமொழியைப் பூர்த்தி செய்க
பாலுந் .............................................................................. (1புள்ளி)

12) பின்வருவனவற்றுள் இருபாற் பொதுப் பெயரின் கீழ்க் கோடிடுக.
நம்பி குமரி நீதிபதி இளவரசன்
(1புள்ளி)

13) பின்வரும் உருக்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
i.  ..................... ii.  ..........................
(2 புள்ளி)

14) தமிழ்க் கருத்தை எழுதுக.
i) Black board : ..............................................................
ii) This is my mother : .................................................. (2 புள்ளி)

15) ஆங்கிலத்தில் எழுதுக
i. காலை வணக்கம் : ..............................................................
ii. உங்களுக்கு என்ன விருப்பம்? : ............................................ (2புள்ளி)

16) தமிழ்க் கருத்தை எழுதுக
i. மம இன்னே மகரகம : ..............................................................
ii. இந்தகன்ன : .............................................................. (2புள்ளி)


17) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களால் எழுதுக.
எனக்குத் தண்ணீர் கொஞ்சம் தாருங்கள்.
.............................................................................................. (2புள்ளி)

பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

18) எண்பெயரை எழுதுக.
59371- ..............................................................................

19) ஒரு தோட்டத்திலிருந்து ஜுலை மாதத்தில் 5387 தேங்காய்களும் ஓகஸ்ட் மாதத்தில் 6578 தேங்காய்களும் பறிக்கப்பட்டன. இந்த இரண்டு மாதங்களிலும் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கைகளுக்கு இடையிலான வித்தியாசம் எவ்வளவு? ..............................................................................

20) ஒரு பாத்திரத்தில் 10L 550ml குளிர்பானம் உள்ளது. அது சமமாக 5 பாத்திரங்களில் ஊற்றப்பட்டது. இப்போது ஒரு பாத்திரத்தில் உள்ள குளிர்பானத்தின் அளவு யாது?
..............................................................................



21)  இவ்வுருவில் $\frac{1}{4}$ பங்கினை நிழற்றுக.

22) எண்கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் எழுதுக.
4050, 4060, 4070, 4080, ......................., ...................

23) பி.ப. 6.45 இற்கு கண்டியிலிருந்து புறப்பட்ட ஒரு பேருந்து மறுநாள் மு.ப. 3.15 இற்கு யாழ்ப்பாணத்தை அடைந்தது. பயணத்துக்குச் செலவாகிய நேரம் எவ்வளவு? ..............................................................................

24) 9 ½ l திரவம் 250ml கொள்ளளவுடைய குறிப்பிட்ட பாத்திரங்களில் நிரப்பப்பட்டது. நிரப்பப்பட்ட பாத்திரங்களின் எண்ணிக்கை யாது?
..............................................................................

25) வெற்றிடங்களை நிரப்புக.

| திண்மப் பெயர் | விளிம்பு | முகம் | உச்சி |
|---|---|---|---|
|  | 2 | .......... | .......... |
|  | ................ | 6 | ......... |


26) ஒரு குறித்த மோட்டார் வாகனத்தை ஒரு லீற்றர் பெற்றோலில் 8km தூரம் செலுத்தலாம். ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூபா 150 எனின் 40 km செலுத்தத் தேவையான பெற்றோலுக்கான செலவு யாது?

27) ஒரு புத்தகத்தின் விலை ரூ.40 எனவும் ஒரு பென்சிலின் விலை ரூ. எனவும் கடை ஒன்றின் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

i. கடைக்குச் சென்ற குமாருக்கு 3 புத்தகங்களையும் ஒரு பென்சிலையும் வாங்குவதற்குத் தேவையான பணம் எவ்வளவு?..................................


ii. ரூபாய் 50 காசுத்தாள்கள் 3 ஐக் கொடுத்தாராயின் அவருக்குக் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?..................................

28) இவ்வுருவிற்குரிய சமச்சீர் அச்சுக்களை வரைக.




29) வெற்றிடங்களை நிரப்புக.

☐ 53
+ ☐ 74
627

30)  இவ்வுருவிலுள்ள முக்கோணிகள் எத்தனை?..................................

31) வெற்றிடத்துக்குப் பொருத்தமான புள்ளிகளை வரைக



32) 5m நீளமுள்ள ஒரு நாடாவில் இருந்து ஒவ்வொன்றும் 20cm நீளமுள்ள 5 துண்டுகள் வெட்டப்பட்டன. நாடாவின் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் யாது?

..................................................................................

**33 தொடக்கம் 62 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

33) சூழல் மாற்றத்தை அறிவிக்கும் பறவை எது?
1. மரங்கொத்தி 2. பருந்து ஈசல்

34) "பச்சை வளையல் தொட்டு ஏலேலோ மயில் ஏலேலோ..." பாடல் பாடப்படும் சந்தர்ப்பம் யாது?
1. நீர் இறைக்கும் போது 2. தோணி ஓட்டும்போது 3. அரிவு வெட்டும்போது

35) பாடசாலையில் எமக்குச் செய்தி கிடைக்கும் முறையாக அமைவது எது?
1. கைத்தொலைபேசி மூலம் 2. மணி, ஒலி பெருக்கி மூலம் 3. புறா மூலம்

37) பின்வருவனவற்றுள் ஆபத்து நிகழக்கூடிய இடம்
1. செப்பனிடப்பட்ட விளையாட்டு மைதானம்
2. மூடி வைக்கப்படாத கிணறுகளும் குழிகளும்
3. மூடி வைக்கப்பட்ட கிடங்கு

38) பௌத்த சமயத்தவர்கள் கொண்டாடும் பண்டிகை
1. எசல பெரஹறா 2. பாஸ்குவருடாந்த விழா 3. ஹஜ் பெருநாள்

39) தேசிய இலச்சினையில் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருக்கும் வாளேந்திய சிங்கத்தினால் காட்டப்படுவன
1. தன்னிறைவும் செழிப்பும் 2. இரக்கமும் திருப்தியும்
3. நாடும் கட்டுப்பாடான மக்களும்

40) நாம் உண்ணும் உணவு அசுத்தமடைவதில் செல்வாக்குச் செலுத்தும் சூழற் காரணி
1. தூசு படிதல் 2. கவனமின்றி உணவைச் சமைத்தல் 3. எலி தீண்டுதல்

41) மாசடைந்த நீரை நுகர்வதால் மனிதனுக்கு ஏற்படும் பாதிப்பு யாது?
1. செங்கண்மாரி 2. டெங்கு 3. மாலைக்கண்

42) இவ்வுரு சூரிய நமஸ்காரத்தின் எத்தனையாம் படிநிலையைக் குறிக்கின்றது?
1) நான்காம் படிநிலை
2) ஆறாம் படிநிலை
3) ஐந்தாம் படிநிலை



43) பின்வருவனவற்றுள் காந்தம் கவரும் பொருள் எது?




44) பின்வருவற்றுள் தொடர்பாடல் கூறுகள் எவை?
1. கடிதம், முத்திரை, கடித உறை
2. அனுப்புபவர் , ஊடகம், பெறுநர்
3. மின்னஞ்சல், முகநூல், இணையம்

45) தாமரைக் கோபுரம், தாமரைத் தடாகம் அமைந்துள்ள நகரம் எது?
1. கண்டி 2. கொழும்பு 3. காலி

46) தேசியக் கொடி கமிட்டி, (குழு) தேசியக் கீதக் கமிட்டி ஆகியவற்றில் அங்கத்தவராகச் செயற்பட்டவர்
1. கலாநிதி ரீ.பீ. ஜாயா 2. கலாநிதி c.w.w. கன்னங்கரா
3. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

47) மகாசேன மன்னனால் கட்டுவிக்கப்பட்ட குளம் எது?
1. கலாவாலி 2. மின்னேரியாக்குளம் 3. அபயவாசி

48) கண்பார்வை குறைவடைதலுக்கு காரணமாக அமைவது?
1. உயிர்ச் சத்து C குறைபாடு 2. உயிர்ச்சத்து D குறைபாடு
3. உயிர்ச்சத்து A குறைபாடு

49) இலங்கைக்கே உரித்தான முலையூட்டி
1. நீர்ப்பாம்பு 2. கலவத்தன் 3. மள்புளுட்டா

50) பயிர்களைப் பாதுகாக்க உதவும் பிராணி எது?
1. வெட்டுக்கிளி 2. செண்பகம் 3. ஆடு

51) நாட்டு மண்ணின் செழுமையை நீக்கும் நோக்குடன் அந்நியரால் எரித்து அழிக்கப்பட்ட தாவரம்
1. இலுப்பை 2. வேம்பு 3. பாலை

52) எமது நாட்டின் தேச பிதாவாகப் போற்றப்படுபவர்
1. வண மிகெட்டுவத்தே குணானந்தர் 2. டீ .எஸ்.சேனநாயக்கா
3. கொங்காலே கொட பண்டா

53. தந்திகள் மூலம் நாதம் உண்டாக்கும் வாத்தியம்
1. புல்லாங்குழல் 2. தபேலா 3. வீணை

54. சேதனப் பசளை பயன்படுத்துவதன் நன்மை அல்லாதது
1. நச்சுத்தன்மையற்ற உணவுப் பொருள் கிடைத்தல்
2. சுத்தமற்ற காய்கறிகள் கிடைத்தல்
3. பயிர்களுக்கு நன்மை தரும் உயிரினங்கள் அழிக்கப்படுதல் தடுக்கப்படும்.

55) நகரத்தில் இடம்பெற்ற பெரும் திருட்டு தொடர்பாக பொலிஸாருக்கு மிக விரைவாக அறிவிக்கக் கூடிய தொலைபேசி எண்
1. 119 2. 117 3. 1919

56) முலையூட்டிப் பிராணியொன்றை இனங்காண்பதற்கான ஓர் இயல்பு எது?
1. முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தல்
2. தரையில் மாத்திரம் காணப்படுதல்
3. தாய் பாலூட்டி குட்டிகளை வளர்த்தல்

57) இலங்கை நாட்டுக்கே உரித்தான தாவரம் எது?
1. தேக்கு 2. எண்ணெய் 3. வேம்பு

58) பின்வருவனவற்றுள் நீரின் மூலம் பரம்பல் அடைவது
1. துத்திரி 2. புன்னை 3. சீதேவியார் செங்கழுநீர்

59 பின்வருவனவற்றுள் நடுவில் சுழலிடம் காணப்படும் உபகரணம் எது?




60) காந்தமொன்றின் ஒரு முனையை மற்றைய காந்தத்தின் ஒரு முனைக்கு அருகே கொண்டு செல்லும்போது அது இழுக்கப்படும் சந்தர்ப்பம் எது?

| 1. | | 2. | | 3. | |
|---|---|---|---|---|---|
| S N | N S | S N | S N | N S | S N |

61) தேசியக் கொடியில் பச்சை நிறப்பட்டி குறிப்பது
1.தமிழர் 2. முஸ்லிம் 3. சிங்களவர்

62) எண்ணெய் மற்றும் மிளகாய் அதிகம் அடங்கியுள்ள உணவுகளை உட்கொள்வதால் ஏற்படக் கூடிய நோய்.
1. நீரிழிவு 2. சீதபேதி 3. இரப்பையழற்சி

(30புள்ளி)

63) நீர் ஓர் இலங்கையர் என்ற வகையில் சர்வதேச மட்டத்தியில் நடைபெறும் சிறுவர் மாநாட்டில் உரையாற்றக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தில் உமக்கு ஏற்படும் உணர்வுகளை வெளிப்படுத்தும் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஐந்து சொற்களாவது இருத்தல் வேண்டும்.

1..................................................................................
2. ..................................................................................
3. .................................................................................. (6புள்ளி)

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவச் செல்வங்களே வாராந்தம் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் வெளியாகும். அவற்றுக்கான விடைகளை எழுதி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றியாளர் பெயர் புள்ளிகளுடன் பிரசுரிக்கப்படும்.

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# வாக்களிப்பை நிறுத்தியதற்காக புலிகளுக்கு அதிநவீன படகுகள்

## வழங்கினோம் என பசில் கூறியிருந்தார் என்று தெரிவிக்கிறார் பொன்சேகா

**கொழும்பு, ஜூலை 14**

**விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவம் போராடிக்கொண்டிருந்த வேளையில், ராஜபக்சக்கள் புலிகளுடன் உடன்படிக்கை செய்து அரசியல் பேரம் பேசிக்கொண்டிருந்தனர். தமிழர்களின் வாக்குகளை நிறுத்தியதற்காக கடற் புலிகளுக்கு அதி நவீன படகுகள் வழங்கப்பட்டன என்று பசில் ராஜபக்ச என்னிடம் கூறினார் என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற வேட்பாளர் சரத் பொன்சேகாவின் தேர்தல் பரப்புரை வத்தளை பலகல்லவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தாபய ராஜபக்சவின் அரசியல் பயணம் தவறான பாதையில் பயணிக்க ஆரம்பித்துள்ளது. அதி வேக வீதியில் தவறான பக்கம் பயணிக்கும் வாகனத்தை போன்று அவர் பயணிக்க ஆரம்பித்துள்ளார். அவருக்கு அதில் குதூகலமாக இருக்கலாம். ஆனால் நாட்டுக்கும் மக்களுக்கும் இந்தப் பயணம் ஏற்புடையதல்ல. அவர் ஆட்சிக்கு வந்தவுடன் மீண்டும் ராஜபக்சக்களுக்கு சகல சலுகைகளும் வழங்கப்படுகின்றன. ராஜபக்சவினரின் நோக்கம் ஒன்றுதான். அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் சகல இடங்களிலும் அவர்களின் ஆதிக்கத்தை பெற்றுக்கொள்வது. ஆனால், ஜனநாயக அரசியலில் நல்லதொரு செயற்பாடாக இதை நாம் கருதவில்லை. கருணா அம்மான் கூறிய விடயங்கள் நாட்டுக்கு பாதிப்பில்லையாம். கிரிக்கெட் ஊழல் நாட்டுக்கு அவப்பெயர் இல்லையாம் ஆனால் எதிர்க்கட்சியினர் செய்யும் ஜனநாயக அரசியல் நாட்டுக்கு எதிரான சூழ்ச்சி என்று ராஜபக்சவினர் கூறி பரப்புரை செய்கின்றனர். பசில் ராஜபக்சவும் நானும் ஒரே வகுப்பு நண்பர்கள். கடந்த போர்க்கால சூழலில் நானும் அவரும் பல விடயங்களைப் பேசுவோம். நான் இராணுவத் தளபதியாக கடமையாற்றிய காலத்தில் பசில் ராஜபக்சவுடன் பேசுவதுண்டு. அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை நிறுத்த பிரபாகரனிடம் பேசி விட்டோம், அவர் இணக்கம் தெரிவித்துள்ளார் என்று என்னிடம் பசில் கூறினார்.

பசில் பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்துகொண்டதற்கு நானே சாட்சி, தேர்தலில் தமிழர்கள் வாக்கை நிறுத்துவதற்கு பிரபாகரன் இணங்கியதற்கு பிரபாகரனுக்கும் கடல் புலிகளுக்கும் அதி நவீன படகுகளைப் பெற்றுக்கொடுக்க தாம் இணக்கம் தெரிவித்தோம் என்று பசில் என்னிடம் கூறினார். அதுமட்டுமல்ல இந்த பேச்சில் அமரர் தொண்டமானும் இருந்தார் என்று என்னிடம் கூறினார்.

நாம் விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஆயுத போராட்டத்தை முன்னெடுத்து எமது தமிழர்களை மீட்க வேண்டும் என்பதற்காக போராடிக்கொண்டிருந்த வேளையில் ராஜபக்சக்கள் புலிகளுடன் ஒப்பந்தங்களை செய்து கொண்டிருந்தனர். பிரபாகரனை துரோகி எனக் கூற அச்சத்துடன் இருந்தனர், பிரபாகரனை மதிப்புக்குரிய பிரபாகரன் என்றே இவர்கள் கூறினார்கள். அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 2005 ஆம் ஆண்டு ஆற்றிய உரையை எடுத்துப்பாருங்கள். அதில் அவர் அவ்வாறே கூறினார். இன்று போர் முடிந்துவிட்டதுடன், பிரபாகரன் இறந்த பின்னர் வீரர்கள் போன்று பேசிக்கொண்டு மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இந்த அழிவுகளுக்கும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கும் ஒரு விதத்தில் ஆட்சியாளர்கள் காரணம் என்பதே உண்மை. பொதுமக்கள் இறந்தமைக்கும், அழிவுகளை சந்திக்கவும் ஆட்சியாளர்களும் பொறுப்புக்கூற வேண்டும். இந்த தேர்தலில் மீண்டும் ராஜபக்சக்கள் வெற்றிபெற்றால் நாசகார ஆட்சி ஏற்படும் - என்றார். (து)

# புகையிரத சேவைக்கு பெண்கள் இணைப்பு

*கவனிக்குமாறு கோருகின்றது பவ்ரல்*

கொழும்பு, ஜூலை 14

வாக்குகளை இலஞ்சமாக பெற்றுக்கொள்ளும் நோக்கில் புகையிரத திணைக்களம் கடந்த மாதம் 15ஆம் திகதி 22 பெண்களை புகையிரத சேவை பாதுகாப்பு அதிகாரி பதவிக்கு நியமிப்பதற்கு பயிற்சி வழங்க இணைத்துக் கொண்டுள்ளது. அரச சேவை நியமனத்தின்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் இந்த நியமனத்தின் போது பின்பற்றப்படவில்லை. ஆகவே தேர்தல் ஆணைக்குழு இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தவேண்டும்.

இவ்வாறு, பவ்ரல் (நியாயமானதும், சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு) அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியராட்சி தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

2020ஆம் ஆண்டுக்கான பொதுத்தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து, கடந்த ஜூன் 15 ஆம் திகதி 22 புதிய பெண் பாதுகாப்பு அதிகாரிகளை பயிற்சி அடிப்படையில் நியமிப்பதற்கு புகையிரத திணைக்களம் தீர்மானித்து பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகவும் புகையிர சேவைகள் பாதுகாப்பு சங்கம் பவ்ரல் அமைப்பில் முறைப்பாடு அளித்துள்ளது.

தேர்தல் காலத்தில் புதிதாக ஆள்சேர்ப்பு தொடர்பான ஓர் உச்சநீதிமன்ற தீர்ப்பை புறக்கணித்து ஆள்சேர்ப்பு பணிக்கு அரச மற்றும் பொது சேவை ஆணைக்குழுவை தவறாக-வழிநடத்த இவ்வாறான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

# கேவில் வெடிப்பு சம்பவம்: 4 பேர் தடுப்புக் காவலில்

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கீரிமலை கேவில் பகுதியில் வெடி பொருள் ஒன்று வெடித்த சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 4 பேரையும், 48 மணி நேரம் தடுப்பில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்று நேற்று அனுமதி அளித்தது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் நடந்தது. ஒரு வகை வெடி பொருளை வெட்ட முற்பட்டபோது அது வெடித்துச் சிதறியதில் 3 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் காயமடைந்த மூவர் உள்ளிட்ட நான்கு பேர் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியிலுள்ள காணி ஒன்றிலிருந்து வெடி பொருளை எடுத்து வந்துள்ளனர். அதனை கழுவி துப்புரவு செய்த பின்னர் வெட்ட முற்பட்டபோதே அது வெடித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை 48 மணிநேரம் தடுப்பில் வைத்து விசாரிக்க நீதிமன்று அனுமதி வழங்கியது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-26)

## வட்டுக்கோட்டையில் கசிப்பு மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற கசிப்பு உற்பத்தி தடுக்கப்பட்டதுடன், காய்ச்சப்பட்ட கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

போத்தலில் அடைக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குத் தயாராக இருந்த 8 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே குறித்த சம்பவம் முறியடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ப-159)

# முழங்காவில் நிலையத்தில் 2 சிப்பாய்களுக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஜூலை 14

முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு படையினர் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் நேற்று நடத்திய பி.சி.ஆர். பரிசோதனையில் இது உறுதிப்படுத்தப்பட்டது என்று மருத்துவமனைப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று 125பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை மற்றும் மருத்துவபீட ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை விடுதிகளில் சேர்க்கப்பட்டவர்கள் 5 பேர், முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் 5 பேர், முழங்காவிலிலுள்ள பாதுகாப்பு படையினர் தனிமைப்படுத்தல் மையத்தில் 79 பேர், வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 16 பேர், காங்கேசன்துறையிலுள்ள கடற்படையினரின் மருத்துவமனையில் 5பேர் மற்றும் மன்னார் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 15பேர் என 125 பேருக்கு நேற்று பரிசோதனைகள் நடத்தப்பட்டன என்று மேலும் குறிப்பிட் டுள்ளார்.

இதேவேளை, பொலநறுவையிலிருந்து தொழில் நிமித்தம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஒருவர் கொரோனாத் தொற்று அறிகுறி தென்பட்டதால் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு கொரோனா இல்லை என்று நேற்றிரவு வெளியான தரவுக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் எழுவைதீவில் நீர்வழங்கல்வடிகாலமைப்புச் சபையின் பணியில் ஈடுபட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (து)

# 20 கோடி யென் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த வழங்கியது யப்பான்

கொழும்பு, ஜூலை 14

நாட்டுக்குள் சட்டவிரோத போதைப்பொருள் பா... னையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு சக்தி... டும் வகையில் ஜப்பான் அரசு 20 கோடி யெ... நிதியை இலங்கைக்கு வழங்கியுள்ளது என்று தெ... விக்கப்பட்டுள்ளது.

இது குறித்த ஒப்பந்தத்தில் பொருளாதார மற்று... கொள்கை மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் ... மற்றும் இலங்கைக்கான ஜப்பானின் தூதுவர் ... யம அகிரா ஆகியோர் கையெழுத்திட்டிருந்த... என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

# பிணை வழங்கியதால் விக்கியை முதலமைச்சராக்க சம்மதித்தேன்

## சுட்டிக்காட்டுகின்றார் மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணம், ஜூலை 14

போராட்டத்தில் ஈடுபட்டதால் நான் கைதாகி பிணை மறுக்கப்பட்டிருந்த நிலையில், சி.வி. விக்னேஸ்வரன் திருகோணமலைக்கு நீதிபதியாக வந்த பின்னரே எனக்கு பிணை வழங்கப்பட்டது. அந்த அபிமானத்தினால்தான் அவரை வடக்கு முதலமைச்சராக்க சம்மதித்தேன். என்னைப் பிணையில் விடுவித்தேன் என்று அவரே சிலதடவைகள் கூறியுள்ளார். எனினும், அவரை முதலமைச்சராக்கியது தவறு என்பதை கூட்டமைப்பு தற்போது உணர்ந்து கொண்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளருமான மாவை சோ. சேனாதிராசா.

இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசமைப்பு மாற்றத்துக்கு எதிராக மட்டக்களப்பில் 1978 செப்ரெம்பரில் பெரும் போராட்டம் நடந்தது. அதில் பங்கேற்க நானும் இங்கிருந்து சென்றிருந்தேன். ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் திரண்டிருந்தனர். பலர் கைது செய்யப்பட்டனர். 'அரசமைப்பை ஏற்கவில்லை, தமிழீழத்தை அடைய முயற்சிக்கிறோம்' என்று கூறி கைது செய்யப்பட்டோம்.

முதல் இருந்த நீதிபதி எங்களுக்கு பிணை வழங்க மறுத்து விட்டார். எங்களுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்று சட்டமா அதிபர் திணைக்கள பிரதிநிதிகள் வாதாடினார்கள். ஆனால் நீதியரசர் எம்மை பிணையில் விடுவித்தார்.

அவரை முதலமைச்சராக்குவதென்றபோது, இந்த அபிமானத்தால் ஏற்றுக்கொண்டேன். தானே எம்மை பிணையில் விடுவித்தேன் என்று அவர் அண்மையிலும் கூறியிருந்தார்.

**நல்லதல்ல**

இதுமட்டுமன்றி, கடந்த அரசில் கன்னியா வெந்நீரூற்றை கூட்டமைப்பு விற்றுவிட்டது. இந்த முறை வாக்களித்தால் கோணேச்சரத்தையும் விற்றுவிடும் என்று அண்மையில் விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

அவர் நீதியரசராக இருந்தவர். படித்தவர். பண்பானவர். உயர்ந்த மனிதராக மதிக்கப்பட்டவர், இந்த சொற்களை பாவித்தது நல்லதல்ல என்று சேனாதிராசா தெரிவித்தார்.

பிறிதொரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், விக்னேஸ்வரனை முதலமைச்சராக தெரிவுசெய்திருந்த முடிவு தவறானதே என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்பொழுது உணர்கின்றது- என்றார். (து)

# கட்டுநாயக்க விமான நிலைய மீள் திறப்பு ஒத்திவைப்பு

## வெளிநாட்டவர் வருவதும் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 14



இலங்கையில் கொரோனாவின் தற்போதைய பாதிப்பு நிலைமையைக் கருத்தில்கொண்டு, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை மீண்டும் திறப்பது பெரும்பாலும் ஒத்திவைக்கப்படும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கம்பஹாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

இதேவேளை, நாட்டிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் போதியளவான தங்குமிட வசதி இன்மையால், இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில், வெளிநாட்டில் பணிபுரிபவர்களைத் திருப்பி அழைத்து வருவதைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

'இன்று முதல் இந்த நடவடிக்கை அமுலுக்கு வருகின்றது எனவும், நாடு வழமையான நிலைமைக்கு வந்தவுடன் இது விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

வெளிநாட்டில் பணிபுரிபவர்கள் சுமார் 12 ஆயிரம் பேர் இதுவரையில் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் எனவும், சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய, வெளிநாடுகளிலுள்ள அனைத்து இலங்கைப் பணியாளர்களையும் அழைத்து வருவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் எனவும் அமைச்சர் உறுதியளித்தார். (எ-22)

### சாப்பிடுகிறோம்....

வ்கள் தெரிவித்த பதிலைக் கேட்டு அமைதியாகத் திரும்பியுள்ளனர். ஆனால் அங்கு தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் பின் வீதியில் உள்ள விடுதியில் நேற்றுமுன்தினம் இரவு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரி உள்ளிட்ட முன்னாள் துணைவேந்தர், பேராசிரியர் எனப் பலர் அழைக்கப்பட்டிருந்தனர். இந்தக் கூட்டம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்றனர். அங்கு சிறிது நேரம் காத்திருந்தனர். அதற்குத் தலைமை தாங்கிச் சென்ற அதிகாரி, ஏனையோரை வாகனத்தில் ஏறுமாறு பணித்து விட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விசாரித்து விட்டு வருவதாகச் சென்றுள்ளார். சிறிது நேரத்தில் திரும்பி வந்து, 'அவர்கள் சாப்பிடுவதற்கே அங்கு வந்துள்ளனர்' எனத் தெரிவித்தனர் என்று கூறி அதிகாரிகளை அழைத்துக் கொண்டு திரும்பியுள்ளார்.



டக்ளஸ் தேவானந்தாவின் கூட்டம் அங்கு இடம்பெறும் போது எடுக்கப்பட்டது.

ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் அங்கு நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ,5,6)

### ஊரடங்கு....

சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார். ஆனால் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் இந்தத் தீர்மானத்தில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் இனங்காணப்படும் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதனால் நாட்டில் மீண்டும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவோ, கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட பகுதிகளில் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவோ இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

தற்போது தொற்றாளர்கள் இனங்காணப்படும் பகுதிகளில் அந்தத் தொற்றாளருடன் தொடர்புடையவர்களைக் கண்டறிந்து அவர்களைத் தனிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னமும் ஊரடங்கு தொடர்பில் அவதானம் செலுத்தப்படவில்லை. ஆனால் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் இந்தத் தீர்மானத்தில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. என்றார். (எ)

### மாணவியின்....

யடுத்து முடங்கிய பல்கலைக்கழகங்கள் செயற்பட ஆரம்பித்ததும் அந்த மாணவி கற்றல் நடவடிக்கைகாக மீளவும் கடந்த 8ஆம் திகதி கிளிநொச்சிக்கு வந்துள்ளார்.

அவருடைய சகோதரன் இராணுவச் சிப்பாய். அவர் கந்தகாடு மறுவாழ்வு நிலையத்தில் பணிபுரிகின்றார்.

அவர் விடுமுறையில் அவருடைய வீட்டில் இருந்துள்ளார். கடந்த 10ஆம் திகதியளவிலேயே அவர் மீளவும் கந்தகாடு மறுவாழ்வு நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

மாணவியும் சகோதரனுடன் ஒரே வீட்டில் இருந்துவிட்டே கிளிநொச்சி வளாகத்துக்கு கடந்த 8ஆம் திகதி வந்துள்ளார். கந்தகாடு நிலையத்தில் கொரோனா தொற்று இனங்காணப்பட்டதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில், அந்த இராணுவச் சிப்பாய்க்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று மாலை உறுதிப்படுத்தப்பட்டது.

அவருடைய சகோதரியான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக மாணவிக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்பதால் அது பற்றிய தகவல்களை கம்பஹாவில் உள்ள சுகாதாரத் திணைக்களத்தினர் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தனர். அதனையடுத்து அந்த மாணவி உட்பட அங்கு கற்கும் சுமார் 300 மாணவர்கள் வளாகத்தில் அவர்கள் தங்கியுள்ள விடுதி களிலேயே சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்த மாணவியிடம் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் நேற்று எடுக்கப்பட்டுள்ளன. இன்று செவ்வாய்க்கிழமை பரிசோதனை அறிக்கை வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிப்பாயின் சகோதரி கடந்த 8ஆம் திகதி புதன்கிழமை கம்பஹாவில் இருந்து மதவாச்சிவரை தொடருந்தில் வந்திறங்கி, அங்கிருந்து பேருந்தில் கிளிநொச்சிக்கு வந்திறங்கியுள்ளார். அவர் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விடுதியில் தனி அறையில் தங்கியிருந்த போதும் கூட்டு கற்கை, சிற்றுண்டிச் சாலையில் உணவருந்தல் மற்றும் பரீட்சை மண்டபத்தில் ஏனைய மாணவர்களுடன் பழகியிருப்பார் என்ற அடிப்படையிலேயே அவர்கள் சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகம் மறுஅறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளது. அந்த வளாகத்தில் உள்ள தொழிநுட்ப பீடம், பொறியியல் பீடம் மற்றும் விவசாய பீடங்களைச் சேர்ந்தவர் வளாகத்துக்குள் உள்நுழையவும் வெளியேறவும் சுகாதாரத்துறையினர் தடை விதித்துள்ளனர். (த-6)

### குடத்தனை...

சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அந்த ஐவரும் வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் இருக்கும் வயதான உறவினர் ஒருவரை சென்று பார்த்து வந்திருந்தனர். அந்த வீட்டிலுள்ள ஒருவரே சில நாள்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து வந்து கஞ்சா கடத்தல் சம்பந்தமாகவும் கொரோனா தடுப்புக்காகவும் தேடப்படும் நபராவார். அதையடுத்து அந்த வீட்டுக்கு சென்றிருந்த ஐவரையும் அங்கேயே சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறு சுகாதாரத் தரப்பினர் பணித்துள்ளனர். (த-108)

## ஒற்றையாட்சிக்குள்...

சுதந்திரத்துடனும் வாழும் சூழ்நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்படும்.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மொறட்டுவை லுனாவை பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசில் அரசியல் தேவைகளுக்காக பலவீனப்படுத்தப்பட்டிருந்த அரச சேவையை குறுகிய காலத்தில் பலப்படுத்தினோம். அரச துறையினர் முன்னெடுக்கும் சேவைகள் பொது மக்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ள கூடியதாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் காணப்படவேண்டும்.

கொவிட்19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தவும், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கவும் அரச சேவையினர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

நெருக்கடியான நிலையில் குறைவான வசதிகளுடன் அரச ஊழியர்கள் மக்களுக்கான சேவைகளை வினைத்திறனுடன் முன்னெடுத்தார்கள். ஆகவே பலமான அரசு தோற்றம் பெறுவதற்கு அரச ஊழியர்களின் பங்களிப்பு முக்கியமானது. அனைத்து இன மக்களும் சுதந்திரமாகவும், தத்தமது கலாசாரங்களை முழுமையாக பின்பற்றவும் முழு சுதந்திரம் உள்ளது. ஒற்றையாட்சி நாட்டுக்குள் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கி ஏனைய மதங்களின் உரிமைகளைப் பாதுகாத்து அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் வாழும் சூழ்நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்படும். எமது ஆட்சியில் விகாரை, கோவில், பள்ளிவாசல் மற்றும் தேவாலயம் ஆகியவை மறுசீரமைக்கப்பட்டன. அபிவிருத்தி பணிகளின் போது இனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. நாட்டுக்கே அபிவிருத்தி பணிகள் ஒருமித்த விதத்தில் முன்னெடுக்கப்பட்டன. வடக்கு, தெற்கு என்று வேறுபடுத்திப் பார்க்கவில்லை, என்றார். (ஒ.5)

## தமிழர் நலனை...

தெரிவித்தார்.

பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சியால் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறமுடியாமல்போகும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை கோருவது தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை பிளவுபடுத்தும் வகையில் சமஷ்டித் தீர்வை பெறுவதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலக்காக இருக்கின்றது.

எனவே சமஷ்டியை முழுமையாக கைவிடுகின்றோம் என்று எழுத்துமூல உத்தரவாதத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கினால் ஆதரவைப் பெறலாம். அவ்வாறு இல்லாவிட்டால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பைப் பெறக்கூடாது.

சமஷ்டியை எதிர்ப்பதாலேயே ராஜபக்ச தரப்புக்கு சிங்கள மக்கள் பேராதரவை வழங்கினர். எனவே, சமஷ்டியை ஏற்கும் தரப்பை இணைத்துக்கொண்டு பயணிப்பது ஏற்புடைய நடவடிக்கையாக அமையாது.

அதேவேளை, தீர்வு விடயத்தில் இந்தியாவும் இன்று இவர்கள் (கூட்டமைப்பு) பக்கம் இல்லை. இது விடயத்தில் அழுத்தங்களை பிரயோகித்து வந்த அந்த நாட்டுக்கும் வெறுத்துப் போயுள்ளது. அதாவது இந்தியா கைவிட்டுள்ளது என்றே கூற வேண்டும்.

இனிவரும் காலப்பகுதியிலும் கொவிட் 19 பிரச்சினை, சீனாவுடனான சர்ச்சை தொடர்பிலேயே இந்தியா கூடுதல் கவனம் செலுத்தும். ஆகவே, சமஷ்டியைக் கைவிடும் வகையிலான அரசியல் பயணத்தையே கூட்டமைப்பு தொடரவேண்டும்.என்றார். (ஒ.5,44)

## ராஜபக்சக்கள்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது தாய் வீடான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சீரழித்த ராஜபக்சவினர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி என்ற கட்சியை உருவாக்கினார்கள். அக்கட்சியின் ஆட்சியை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறுவுவதே அவர்களின் நோக்கமாக இருக்கின்றது.

அதற்காக இந்தப் பொதுத்தேர்தலில் எதையெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்து முடிக்க அவர்கள் கங்கணம் கட்டியுள்ளார்கள். அதற்காக இராணுவத்தையும் அவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன்படுத்துகின்றார்கள்.

நாடு கொரோனாவின் இரண்டாவது அலைக்குள் சிக்குண்டு தவிக்கின்றது. இந்தப் பாதிப்புக்கு மத்தியிலும் குறித்த திகதியில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதியும், பிரதமரும் மறைமுகமாக அழுத்தம் கொடுத்து வருகின்றார்கள். இதுதான் ராஜபக்சக்களின் முட்டாள்தனம். மக்களின் சாவின் விளிம்பில் ஏறி நின்று அரசியல் நடத்துவதான் அவர்களின் வாடிக்கையான வேலை. ராஜபக்சக்களின் இந்த வற்புறுத்தலுக்கமைய குறித்த திகதியில் நாடாளுமன்றத் தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு நடத்தினால் அது பாதுகாப்பாக சுதந்திரமாக நீதியாக நடைபெறாது. எனவே, இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும்; அரசின் மிரட்டல்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு ஒருபோதும் அடிபணியக்கூடாதுஎன்றார். (எ-22)'

## பொதுத்....

தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்பட்டு வருகின்றனர். அதனால் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று பல தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர். அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே ஜி.எல். பீரிஸ்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைவது உறுதியாகியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் கொரோனா வைரஸ் தொற்றைக் காரணம் காட்டி தேர்தலை ஒத்திவைக்க வலியுறுத்தி வருகின்றன. எதிரணிகளின் சுயலாப அரசியலுக்காகத் தேர்தலை ஒத்திவைக்க முடியாது. திட்டமிட்ட திகதியில் அதாவது ஒகஸ்ட் 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்றார். (எ-22)

## வடக்கு...

அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில்தற்போது நிலவுகின்ற கொரோனா பரம்பல் சூழலில் வட மாகாணத்தில் உள்ள மக்கள் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

அவசியமற்ற பயணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும் அல்லது பிற்போடவும்.

அவசியமின்றி பொதுஇடங்களில் ஒன்று கூடுவதைத் தவிர்த்துக்கொள்ளவும்.

அவசியமற்ற பொது நிகழ்வுகள், விளையாட்டுப்போட்டிகள் என்பவற்றை தவிர்த்துக்கொள்ளவும் அல்லது பிற்போடவும்

தற்போது நாட்டில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது இடங்களில் அனைவரும் முகக்கவசம் கட்டாயம் அணிந்து கொள்ளவேண்டும். முகக்கவசம் மூக்கு, வாய் என்பவற்றை மூடிக் கொள்ளுமாறு அணிந்திருத்தல் அவசியம். முகக்கவசம் அணியாதவர்கள் அனைவரும் இரண்டு வாரங்களுக்கு கட்டாய தனிமைப்படுத்தல் முகாமிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

பொது இடங்களில் பொது மக்கள் ஒன்று கூடும்போது 2 பேருக்கு இடையில் ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் இடைவெளி பேணப்பட வேண்டும்.

எந்த நிறுவனங்களுக்கும் உட்செல்ல முன்னர் சவர்க்காரமிட்டு கை கழுவ வேண்டும். அதே போன்று வெளியே சென்று வீட்டுக்குத் திரும்பியவுடனும் சவர்க்காரமிட்டு கை கழுவ வேண்டும்.

தற்போது இந்தியாவில் கொரோனோ பரம்பல் தீவிரமாக இருப்பதனால் பலர் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு வர முயற்சிக்கின்றனர். இவ்வாறு அடையாளம் காணப்பட்ட சிலர் கட்டாய தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தின் கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் இந்தியாவிலிருந்து உங்கள் பிரதேசத்திற்கு சட்டவிரோதமாக யாராவது வந்தால் உடனடியாக உங்கள் பிரதேசத்திற்குரிய பொதுச்சுகாதார பரிசோதகர், சுகாதார மருத்துவ அதிகாரி, கிராம அலுவலர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோருக்கு தகவல்களை வழங்கி கொரோனா பரம்பலைக் கட்டுப்படுத்த உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்என்றுள்ளது. (ஒ.5)

## 492...

இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று மாலை இராஜகிரியவில் நடத்திய விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவ்வாறு இனங்காணப்பட்டுள்ள 492 பேரில் 429 பேர் கந்தக்காடு போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் மத்திய நிலையத்திலிருந்தவர்களாவர். ஏனைய 47 பேர் அங்குள்ள நிர்வாகத்துறை அதிகாரிகளும், மேலும்16 பேர் இவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களுமாவர் என்றார்.

அங்கு கருத்துத் தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்ததாவது

கந்தகாடு புனர்வாழ்வளிக்கும் நிலையத்திலிருந்து வெலிக்கடை சிறைக்கு போதைப்பொருள் கைதி ஒருவர் மாற்றப்பட்ட வேளை அங்கு கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார். அதன்பின்னர் கொரோனா பரவல் குறித்து அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளை இராஜாங்களைப் பிரதேசம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசம் தற்போது முழுமையாக முடக்கப்பட்டுள்ளது. இராஜாங்கனையில் இனங்காணப்பட்ட நோயாளரின் உறவினரது மரண வீடு மற்றும் மத சம்பிரதாயங்கள் இடம்பெற்ற சந்தர்ப்பங்களில் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகள் பின்பற்றப்பட்டிருந்தால் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்காது. ஏனைய நாடுகளைப் போன்று வைரஸ் பரவல் குறித்து இலங்கைக்கும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது.

கடந்த மூன்று மாத காலமாகப் பின்பற்றிய நடைமுறைகளை மீண்டும் பின்பற்ற வேண்டியேற்பட்டுள்ளது. எனினும், கந்தகாடு சம்பவம் போன்று நாடளாவிய ரீதியில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படவில்லை. இராஜாங்கனை, வெலிகந்த உள்ளிட்ட சில பிரதேசங்களிலேயே இவ்வாறான நிலைமை காணப்படுகின்றதுஎன்றார். (எ-22)

## சு.க....

இதுவரை 85 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் கடந்த 4 நாள்களாக இ.அங்கஜனுக்கு எதிரான முறைப்பாடுகளே அதிகம் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவரது அலுவலகங்களில் வேட்பாளரின் படம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதற்கு அமைவாக சம்பந்தப்பட்ட இடங்களுக்குச்சென்ற பொலிஸார் படங்களை மறைக்குமாறு பணிக்கின்றனர். ஆனால், அவை உரிய முறைப்படி மறைக்கப்படுவதில்லை. துணியால் மூடி மறைக்கப்பட்டாலும் காற்றுக்கு துணி பறப்பதால், வேட்பாளரின் படங்கள் தெரியும் நிலை காணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பிலும் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் வேட்பாளரின் படங்களை பேப்பரால் முழுமையாக மறைத்து ஒட்டுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ.5,6)

## அமைச்சுப் பதவி...

ரைத்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் களமிறங்கியுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், கடந்த 11ஆம் திகதி வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது, அரசியல் தீர்வு கிடைக்க எவ்வளவு காலம் எடுக்குமெனச் சொல்ல முடியாது. அந்த இடைப்பட்ட காலத்தில் நாங்கள் எமது பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வது அத்தியாவசிய தேவை. புதிய ஆட்சியில் அமைச்சரவையில் சேர்வதாக இருந்தாலும் எந்த அமைச்சுக்கள், எத்தனை அமைச்சுக்கள், என்னவிதமான அதிகாரங்கள் என்பவற்றைப் பேரம் பேச எமக்குப் பலம் இருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், புதிய அரசில் அமைச்சுப் பதவிகளை கூட்டமைப்பு பெற்றுக்கொள்ளுமா என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் கேட்டபோது, புதிய அரசில் அமைச்சுப் பதவி பெறும் எண்ணம் எதுவுமே எம்மிடம் இல்லை. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு அப்படியான கொள்கையே இல்லை. தேர்தல் காலத்தில் அமைச்சுப் பதவி பற்றிப் பேச வேண்டிய அவசியமும் இல்லை, என்று உறுதியாகப் பதிலளித்தார். (ஒ.5,22)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 14 பேருக்கு எலிக் காய்ச்சல்

## மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் தகவல்

**கிளிநொச்சி,ஜூலை 14**

**கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தவருடம் எலி காய்ச்சல் நோயாளர்கள் 14 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த மாதத்திலேயே அதிகளவானவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் க. ராகுலன் தெரிவித்தார்.**



வடக்கு மாகாணத்தில் அண்மைய நாள்களாக எலிக்காய்ச்சல் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். இது தொடர்பில் மருத்துவமனைப் பணிப்பாளரிடம் கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த மாதத்தில் அதிகமாக 8 எலிக் காய்ச்சல் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விவசாயிகள் தான் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். விவசாய நிலங்களில் உள்ள எலிகள் வெளியேற்றுகின்ற சிறுநீரில் இந்த கிருமிகள் வெளியேறுகின்றன. அவை நீருடன் கலந்து பாதணிகள் இன்றி விவசாயிகள் வேலைகளில் ஈடுபடும் போது காயங்கள் ஊடாக உள்நுழைகின்றன. இதனால் இந்த நோயால் பெரிதும் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

கிளிநொச்சி விவசாய மாவட்டமாக உள்ளது எனவே அதிகளவான விவசாயிகள் இருக்கின்றனர். அவர்கள் தற்போது உள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்-என்றார்.

வடக்கு மாகாணத்தில் இந்த வருடம் சுமார் 92 பேர் எலிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-6)

# தீர்மானத்தையும் மீறி கிரவல் அகழ்வு மாவட்டச் செயலரிடம் மனு கையளிப்பு

வவுனியாவில் தீர்மானத்தையும் மீறி கிரவல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது என்று வவுனியா மாவட்டச் செயலரிடம் முறைப்பாடு கையளிக்கப்பட்டுள்ளது.

கிரவல் அகழ்வில் கன்னாட்டி உள்ளிட்ட பகுதிகளில் பெரும் குழிகள் ஏற்படுகின்றன என்றும் இதனால் நெற்செய்கையை முன்னெடுக்க முடியாமல் தாம் பாதிக்கப்பட்டுள்ளோம் என்றும் வவுனியாப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். குறித்த விடயம் தொடர்பாக கடந்த மாதம் 29ஆம் திகதி வவுனியா நிலவை அளவை சுரங்கப்பணியக அதிகாரி தலைமையில் செட்டிகுளம் உதவி பிரதேச செயலர், பிரதேச சபை தவிசாளர், உதவி விவசாய பணிப்பாளர் மற்றும் பொதுமக்களின் பங்கு பற்றுதலுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கன்னாட்டிப் பகுதி நீரேந்து பகுதியாக இருப்பதால் குளத்துக்கு வரும் நீரில் தடை ஏற்படுகின்றது என்று வெளிக்கள அறிக்கையூடாகத் தெளிவுபடுத்தப்பட்டது. இதையடுத்து அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. இந்த நிலையில் தடைகளை மீறி அங்கு அகழ்வுகள் இடம்பெறுகின்றன என்று தெரிவித்து மாவட்டச் செயலர் பந்துல சேனவிடம் மனு கையளிக்கப்பட்டுள்ளது.

(ம-110)

# பாதாளக் குழு உறுப்பினர்களது உதவியாளர்கள் இருவர் கைது

பிரபல பாதாள உலகக் குழு உறுப்பினர்களான அங்கொட லொக்கா மற்றும் பெத்தியாகொட சங்க ஆகியோரின் உதவியாளர்கள் என்ற சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

முல்லேரியா பொலிஸ் பிரி வுக்குட்பட்ட உடுமுல்ல பகுதியில் வைத்து இவர்கள் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 5 கிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டது.

இந்த இருவரில் 32 வயதுடைய விதானகமகே கயான் தர்ஷன எனும் கய்யா அங்கொட லொக்காவின் உதவியாளர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் 2019 ஆம் ஆண்டு ஹங்வெல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்ட பகுதியில் சுமேத எனும் மணல் வியாபாரி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான பிரதான சந்தேகநபர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மற்றொரு நபரான நதீக சேபால தஸநாயக்க எனும் ரன்கேல்ல என்பவர் பெத்தியாகொடவின் உதவியாளர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# 24 மணித்தியாலத்தில் 2025 பேர் கைதாகினர்

திட்டமிட்ட குற்றச் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில் 2 ஆயிரத்து 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு முதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணிவரை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சட்ட விரோத ஆயுதங்கள் , போதைப் பொருள்கள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்தமை தொடர்பிலும், பிடியாணை உத்தரவு வழங்கப்பட்டிருந்தவர்கள் மற்றும் பல்வேறு குற்றச் செயல்களில் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

போதைப் பொருள் வைத்திருந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட 414 சந்தேகநபர்களுள் 235 சந்தேக நபர்கள் ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 324 கிராம் 500 மில்லி கிராம் தொகை ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

கஞ்சா போதைப் பொருளுடன் 169 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர், இவர்களிடமிருந்து ஒரு கிலோ 237 கிராம் 317 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இதேவேளை ஐஸ் போதைப் பொருளுடன் 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவரிடமிருந்து 76 கிராம் 385 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. சட்டவிரோத மதுபானம் தொடர்பில் இடம்பெற்ற சுற்றி வளைப்புகளில் 360 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 4 ஆயிரத்து 848 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருந்தமை தொடர்பில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 7 துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 410 சந்தேகநபர்களும், வேறுவகையான குற்றச்செயல்களைப் புரிந்த 838 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கு)

# திருக்கைலாய உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூலை 14

சுதுமலை ஈஞ்சடி ஞான வைரவப் பெருமான் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு திருக்கைலாய உற்சவம் நடைபெறும்.

உற்சவத்தில் திருக்கைலாயக் காட்சி எனும் தலைப்பில் காரை எம்.பி. அருளானந்தம் சொற்பொழிவாற்றுவார்.

(கு)

# சிங்கப்பூருடனான வர்த்தகம் மறுஆய்வு முழுமையில்லை

## *நீதிமன்றத்துக்கு அறிவிப்பு*

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் பரிசீலனைப் பணிகள் இன்னும் முழுமை பெறவில்லை என்று உயர் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு இன்னும் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்து வருகின்றது என்று சட்டமா அதிபர் தப்புல டி லிவேர உயர் நீதிமன்றத் திற்கு அறிவித்தார்.

நாட்டில் அண்மைய சூழ்நிலைகள் காரணமாக மறு ஆய்வு முன்னேற்றத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக நீதிமன்றுக்கு சுட்டிக்காட்டிய சட்ட அதிபர் மீளாய்வை நிறைவு செய்து அதிகநேரம் ஒதுக்குமாறும் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க அது தொடர்பான மேலதிக விசாரணையை நவம்பர் 3ஆம் திகதி வரை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்தது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது இலங்கை மற்றும் சிங்கப்பூர் இருதரப்பு சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. எனினும் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இந்த வர்த்தக ஒப்பந்தம் தற்போது மறு ஆய்வுக்கு உட்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம)

# இரத்தினபுரி பிரதேசத்தில் மூவருக்கு கொரோனா

இரத்தினபுரி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மூன்று பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கபிலா கன்னங்கரா உறுதிப்படுத்தியுள்ளார்.

இவர்கள் மூவரும் கந்தக்காடு மறுவாழ்வு மையத்தில் பணியாற்றி வருகின்றவர்கள் எனவும், தெரிவிக்கப்பட்டது.

இவர்களுடன் நெருங்கிப் பழகிய சுமார் 60 பேர் இதுவரை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் இரத்தினபுரி தேவாலயகாவ, குருவிட்ட மற்றும் எஹெலியகொட தோரனகொட பகுதிகளில் இருந்து பதிவாகியுள்ளனர்.

தொற்றுக்குள்ளான ஒருவர் இரத்தினபுரியில் உள்ள சீவலி மற்றும் அலோசியஸ் பாடசாலைகளுக்குச் சென்று வந்துள்ளனர் என்றும், இதன் காரணமாக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என் றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

**வேலையாள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் தொலைத் தொடர்பு நிலையத்திற்கு பெண் வேலையாள்கள் தேவை.
(**Photo Copy** அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.)
தொடர்பு:- **077 538 0981**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.